கல்கி

வைரவிழா ஆண்டு

KALKI
2.9.2001
ரூ. 5.00



ஒரே இடம்
அதுவே
நிறைவு தரும்



ஏழு
தளங்களில்
எத்தனை
ரகங்கள் !

பட்டுப்புடவைகள், பட்டு வேட்டிகள்,
திருமண புடவைகள்,
டிசைனர் புடவைகள்,
பெண்களுக்கான துணிவகைகள்
சுடிதார்கள், காக்ராஸ் (Ghagras),
குழந்தைகளுக்கான ஆடைகள்,
ஆடவரின் ரெடிமேட் ஆடைகள்
சூட்டிங் & ஷர்ட்டிங்ஸ் மற்றும் பல ...

என்றும்
நினைவிருக்கட்டும்

100 நல்லி

100 உஸ்மான் சாலை

FIRST AND STILL THE ...

Nalli ®

சில்க் சாரிஸ்

Since 1928

100, உஸ்மான் சாலை,
(துரைசாமி ரோடு ஜங்ஷன்)
தி. நகர், சென்னை-17.
தொ. பே.: 4314900-05
∴பேக்ஸ் : 4314919

காவியங்களை பட்டுத்துணியிலும் படைப்பவர்கள் !

FAME/NALLI/2152

“கேழ்வரகுன்னா என்னாங்க?”

இளைஞிகளிடம் ‘இடக்கு மடக்கு’ கேள்விகள்.

* மஞ்சு, சுமனா

தமிழைப் பேசுதல் தகாது என்று அடம் பிடித்து, நுனி நாக்கு ஆங்கிலத்தை வரித்துக் கொண்டுள்ள அல்ட்ரா மாடர்ன் (தமிழ்) பெண்களின் தமிழறிவைச் சோதிக்க நினைத்துப் புறப்பட்டோம்.

‘‘தடுக்கினால் ஜீன்ஸ் அணிந்த தமிழ்ப் பெண்களின் காலடியில்தான் விழ வேண்டும் சரி..., அவர்களது தமிழறிவை எப்படிச் சோதிக்கப் போகிறாய் மகனே?’’ என்று பலி ஆட்டைப் பார்ப்பதுபோல நம்மைப் பார்த்துக் கேட்டார் புகைப்படக்காரர். “முதல் கேள்வி ‘கேழ்வரகுன்னா என்ன?’ ‘அடுத்தது கண்மாய் தெரியுமா?’ அப்புறம் ‘நெல் எந்த மரத்துல விளையுது?’ ‘பஞ்சாரத்தைப் பார்த்திருக்கீங்களா?’





இப்படிப் போகுது...’’ என்றதும் அலறியது புகைப்படம்!

‘‘அடப்பாவி இந்த மாதிரி சோதனை முயற்சின்னா முன் கூட்டியே எனக்குச் சொல்லிடு. ஏன்னா என்னோட உதவியாளன்கிட்டே கேமராவைக் கொடுத்து அனுப்பிடுவேன். இல்லைன்னா, பாதுகாப்பிற்கு இரவல் ஹெல்மெட்டாவது வாங்கிப் போட்டுட்டு வருவேன்.’’ என்று தொடக்கத்திலேயே தொடை நடுங்க வைத்தார்.

ஒரு வழியாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ஸ்ரீ அஞ்சநேயர் போற்றியை முணுமுணுத்தபடி புறப்பட்டோம்.

முதலில் நம் மூளைக்குள் வெளிச்சம்

பாய்ச்சிய இடம் நுங்கம்பாக்கம் டிஷ்நெட் சென்டர். கண்ணில் பட்ட கிராப்புத் தலைப் பெண்களை நெருங்கி தமிழ்ப் பேசுவீங்களா? என்று ஆங்கிலத்தில் கேட்க, நாற்பது பெண்கள் சொன்ன பதில் 'நாட் அட் ஆல்.' 'என்னடா தமிழுக்கு வந்த சோதனை?' என்று எண்ணி, கண்ணீர் வடிக்காத குறை. அடுத்து அதே கட்டிடத்தின் கீழேயிருந்த லேண்ட் மார்க் புத்தகக் கடைக்குள் பிரவேசித்தோம். அடடா! எங்கெங்கு காணினும் டீஷர்ட் சக்திகள். "போ... போ... அட பயப்படாமல் போய்யா." என்று புகைப்படம் நம் முதுகைப் பிடித்துத் தள்ள.. டிஜிட்டல் இசைத் தட்டுகளைப் புரட்டிக் கொண்டிருந்த ஒரு நவீன நங்கையை அணுகி அறிமுகப்படுத்திக் கொண்டோம். அவரது கையில் டெஸ்ட்டினி சைல்டு, சர்வைவர் பாப் ஆல்பம். "தமிழ் இசை பிடிக்காதா?" என்று கேட்ட அடுத்த வினாடி, "யா. ஐ லைக் ரஹ்மான்" என்று வயிற்றில் பாலை வார்த்தார். "அப்போ நீங்க தமிழ்ப் பெண்ணா?" என்றதும் "ஆமா... ஆனால் பேசத் தெரியுமே தவிர படிக்கத் தெரியாது" என்றதும் நமக்குப் பரம சந்தோஷம். இது போதாதா? என்று கேழ்வரகில் தொடங்கி நம் கேள்விகளை ஆரம்பித்தோம். "சாரி நீங்க என்ன கேக்குறீங்கன்னே தெரியலே" என்று கூலாக பதில் சொன்ன அந்தப் பெண்மணி ப்ரீத்தி.



• பவித்ரா, ஸ்ரீவித்யா

"நல்லா யோசிச்சு சொல்லுங்க கேழ்வரகு கேள்விப்பட்டதில்லையா?" என்று பரிதாபமாகக் கேட்டால்... "நிஜமாகத் தெரியலே. அதைத் தெரிஞ்சுகிட்டு என்ன செய்யப் போறீங்க?" என்று எதிர் கேள்வி கேட்டார்! "உங்க தமிழறிவு எப்படியிருக்குன்னு சும்மா ஒரு சின்ன டெஸ்ட்!" என்று அசடு வழிந்தோம். "டெஸ்டை வெச்சு என்ன செய்யப் போறீங்க?" என்று மறு படியும் ப்ரீத்தி ப்ரியமாய்க் கேட்க... நமது போட்டோ கிராபர் கிளிக்க முயல... "டோண்ட் டேக் போட்டோ கிராப்ஸ்" என்று முதுகைக் காட்டினார். அதற்குள் "வாட் டு யூ வாண்ட்?" என்று கேட்டபடி ஒரு புஷ்டியான கடைச் சிப்பந்தி நம்மை வெறித்துப் பார்க்க... "நத்திங்" என்றபடி அங்கிருந்து தப்பித்து வர வேண்டியதாயிற்று!

சோர்ந்து போன நம்மை அடுத்து புகைப்படம் அழைத்துக் கொண்டுபோன இடம் ஸ்பென்சர் வணிக வளாகம். ஒவ்வொரு தளமாக அழைத்து, கண்ணில்பட்ட மாடர்ன் மங்கைகளை, துரத்தித் துரத்திப் பேட்டி எடுத்ததில் எல்லோருமே தமிழகத்தில் குடியேறிய பிற மாநிலப் பெருமக்கள்.

சோர்ந்துபோய் பார்க்கிங் மர நிழலில் ஒதுங்கிய நம் கண்களில் பட்டனர், ஜீன்ஸ் சகிதம் சென்னைத் தமிழில் அரட்டையடித்துக் கொண்டிருந்த ஒரு ஜோடி தமிழ்த் தோழிகள். ஆஹா! அடித்தது அதிர்ஷ்டம் என்று கூவியபடி அவர்களை நெருங்கினோம். இராமாபுரம் ஈஸ்வரி பொறியியல் கல்லூரியில் இறுதியாண்டு மின்னணுத் தொடர்பியல் படித்து வரும் அவர்கள் சுமனா



• அனுஷா

மற்றும் மஞ்சு. சுமனா பெங்களூரில் பிறந்து சென்னையில் வளர்ந்த தமிழ்ப் பெண்ணாம். ''கேழ்வரகுன்னா ராகி தானே?'' என்று எடுத்ததுமே அசத்தினார். மஞ்சு மலங்க மலங்க விழித்தார். ''கண்மாய் ம்ம்.. கண்ணுக்குப் போடுற மையைத் தானே சொல்றீங்க!'' என்று இரண்டாவது கேள்விக்கு இடறினாலும், ''உங்க ஊர்லெல்லாம் நெல் மரத்துலதான் விளையுமா? எங்க ஊர்லே ரொம்ப வருஷமா செடியிலதான்'' என்று தில்லுடன் பதில் சொன்ன சுமானாவிடம், ''பத்தாயம் பார்த்திருக்கீங்களா?'' என்றோம். ''அது எப்படியிருக்கும்?'' என்று அப்பாவியாகத் தோழி மஞ்சுவிடம் சுமனா கேட்க, அவரோ, ''அது என்ன ஐஸ்க்ரீம் அயிட்டமா?'' என்றார். ஆ... இதுதான் சரியான தருணம் என்று எண்ணி கரிசல் காடு, கள்ளிக்காடு, வரப்பு, வாய்க்கால் போன்ற ஒரு டஜன் கிராமத்து வார்த்தைகளை அள்ளிவிட்டதும் அலறிவிட்டார்கள். சரி போனால் போகிறது ''மண்வாசனை தெரியுமா?'' என்று கடைசியாய்க் கேட்ட நம் கேள்விக்கு ''அது வெரி ஓல்டு தமிழ் மூவி இல்லே'' என்று பதில் தந்தனர். பாவம் இதற்கு மேலும் அவர்களைத் துன்புறுத்தினால் ஈவ்டீசிங் என்று அவர்களே போலீசில் பிடித்துக் கொடுத்தாலும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை என்ற முன்னெச்சரிக்கையோடு அவர்களிடம் விடை பெற்று, வைஷ்ணவா கல்லூரிப் பக்கம் வந்தோம்.



காலைக் கல்லூரி முடிந்து, போர்டிகோ புல்வெளியில் சிரத்தையோடு எதைப் பற்றியோ சிந்தித்தபடி அமர்ந்திருந்த நான்கு மாணவிகள் பவித்ரா, ஸ்ரீவித்யா, ஜெயந்தி, அனுஷா.

அறிமுகப்படுத்திக் கொண்டதும் எக்ஸ்பிரஸ் வேக ஆங்கிலத்தில் பேசி நம்மை அல்லாட வைத்துவிட்டது இந்த நால்வர் அணி. 'தமிழறிவுச் சோதனை' என்றதும் நாங்கள் தயார் என்பதுபோல நம்மை ஒரு அலட்சியப் பார்வை பார்த்துவிட்டு, ''கேழ்வரகு தெரியுமா?'' என்ற நம் கேள்விக்கு ''கூழே குடிச்சிருக்கோம்'' என்று கூடிச் சிரித்தனர். ''கண்மாய் என்ன, காவாய் கூடத் (கால்வாயின் சென்னை வழக்கு) தெரியும்'' என்றார்கள்.

கண்மாய், கம்மா எல்லாம் மதுரை காரைக்குடி, புதுக்கோட்டை வழக்கு. தஞ்சை தொடங்கி சென்னை வரையிலும் ஏரிதான் புழக்கத்தில் இருக்கிறது என்று விளக்கம் கொடுத்தார் மதுரையைச் சேர்ந்தவரான அனுஷா. ''தூக்கணாங்குருவிக்கூடு எப்படியிருக்கும்?'' என்றதும், தொலைபேசி கம்பியில், தென்னை மரத்தில் தொங்குவது போல உடனடி ஓவியமே வரைந்து காட்டிவிட்டார்கள்.

நமது எல்லா கேள்விகளுக்கும் துல்லியமாக பதில் சொன்ன இவர்களின் இரகசியப் பின்னணி என்ன என்று துருவியதில் எல்லோரும் கிராமத்தில் பிறந்து சென்னையில் வளர்ந்த அக்மார்க் தமிழ்ப் பெண்கள். ஒருவழியாக தமிழறிவு காதுவழியாய் வழிந்து கொண்டிருந்த தமிழ்ப் பெண்களைச் சந்தித்துவிட்ட சந்தோஷத்தில் அவர்களிடம் விடைபெற முயன்றபோது ''இப்போ உங்க தமிழறிவைச் சோதனை பண்ணனுமே?'' என்றார்கள். தமிழில் முனைவர் பட்டம் பெற்ற மாதிரியான அகந்தையில் அவர்களை அலட்சியமாய் நாம் பார்க்க, வார்த்தைகளை வீசினார்கள். ''பாட்லூடு, மாஞ்சா, உதாரு, நிஜாரு, நாஷ்டா, நோட்டா, டகிள்ஸ், டப்பா டான்ஸ்'' என்று வார்த்தைகளை அவர்கள் அடுக்கிக் கொண்டே போக ''ஆத்தாடி...'' என்று அலறியபடியே ஓட்டம் பிடித்தோம்.

- ஸ்ரீ சக்கரம்

படங்கள் : **ஸ்ரீஹரி**

காஷ்மீர் ஆப்பிளுக்குக் கை கால் முளைத்தால் எப்படியிருக்கும்? அதுதான் கரீனா! வானத்தில்தான் நிலாவைப் பார்ப்போம்; இவரிடத்தில் நிலவில் வானம் நீந்திக் கொண்டிருந்தது – ஆம்! கரீனாவுக்குக் கருநீல விழிகள்! கம்பீர உயரம்; இயல்பான நடை உடை; பாவனையில் அலட்சியம் உண்டு என்று எல்லோரும் சொன்னாலும், அன்று லக்மே இந்தியா ஃபாஷன் வீக்கின் மூன்றாவது நாள், லக்மேயின் 'டைம்லஸ் ப்யூட்டி'யாக அவதாரமெடுத்தபோது, அப்படி ஒன்றும் நம் ஞானக் கண்களுக்குத் தெரியவில்லை!


பாலிவுட்டில் நாலாவது தலைமுறையாக கோலோச்சிக் கொண்டிருக்கும் கபூர் குடும்பத்தின் இளைய வாரிசுதான் இந்த 'பேபோ' (கரீனாவின் செல்லப் பெயர்). இவர் 'லோலோ'வின் (கரிஷ்மா) தங்கை தானென்றாலும், இன்று தயாரிப்பாளர்களும் இயக்குனர்களும் இந்த பேபோவின் பின்தான் லோலோவென்று அலைந்து கொண்டிருக்கிறார்கள்!

இதுவரை வெளிவந்ததே மூன்று படங்கள்; மூன்றில் ஒன்றுதான் (முஜே குச் கெஹனா ஹை) ஹிட்; "முதலும் (ரெஃப்யூஜி) மூன்றாவதும் (யாதேன்) புஸ்வாணமாகி விட்டாலும், நெம்பர் ஒன் ஸ்தானத்திலிருக்கிறீர்களே... ஏதேனும் அதிர்ஷ்ட மச்சம் இருக்கிறதா?'' என்ற நாம் கவலைப்பட்டதற்கு அழகாகச் சிரித்தார்.

"இந்த அதிர்ஷ்டம் என் தலைக்கேறி விடவில்லை; நான் பிறந்து வளர்ந்த குடும்பச் சூழ்நிலை என்னை வெற்றி தோல்விகளுக்கு நன்றாகவே பழக்கியிருக்கிறது" என்கிறார். ஆனால், இதனால் இதுகாறும் 'நம்பர் ஒன்'னிலிருந்த அக்கா கரிஷ்மாவுக்கு மனத்தாங்கல் எதுவுமிருக்காதா என்ன...?

''ஊஹூம்... நாங்களிருவரும் ரொம்ப க்ளோஸ்; என் வெற்றி குறித்து அவளுக்குத்தான் ரொம்ப சந்தோஷம். அவள் எனக்கென்று எதுவும் செய்வாள்; என் வழிகாட்டியே அவள்தான்; இருவரைப் பற்றியும் மீடியாக்காரர்கள்தான் ஒப்பிட்டுக் கழுத்தறுக்கிறார்கள். நான் ரொம்ப கொழுக் மொழுக்கென்றிருந்தேன்; அவள்தான் என் வெயிட்டைக் குறைக்க படாதபாடு பட்டாள். இப்போது ஒரு ட்ரெயினர் என் உயிரை எடுத்துக்கொண்டிருக்கிறார்'' என்றவர் அக்காவை 'ஓஹோ'





என்று புகழ்கிறார்.

''அவள் ஒரு வார்த்தைச் சொல்வதற்கு ஒரு மணி நேரம் யோசிப்பாள்; எதையும் ஆழமாகச் சிந்தித்துத்தான் செயல்படுவாள்; முன்னணிக்கு வர அவள் மிகவும் உழைத்திருக்கிறாள். அவள் உழைப்புக்கு முன் நான் ஒன்றுமே இல்லை; இன்னும்கூட எனக்கு டான்ஸ் ஆட வராது!''

பேபோவின் சோகம்!

சின்ன வயசிலிருந்தே இவர் துடுக்கும் மிடுக்குமாகவும், அவர் அடக்கமும் அமரிக்கையுமாகவும் இருப்பார்களாம். "அப்பா அம்மா சொல்வதைக் கேட்காமல் நிறைய அடி வாங்கியிருக்கிறேன். ஒருநாள்கூட, நேரத்துக்கு எழுந்து, ப்ரேக் ஃபாஸ்ட் சாப்பிட்டு, ஸ்கூலுக்குக் கிளம்பியது கிடையாது. அம்மா தினம் பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டு, பஸ் வரும்வரை எனக்கு ஊட்டிக் கொண்டிருப்பாள். இன்றளவும் அந்த நிலை தொடர்கிறது. நான் ரொம்பப் பிடிவாதக்காரி; நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என அடம் பிடிப்பவள். வெளியே எதைப் பற்றியும் கவலைப் படாதவள் போல் தோன்றினாலும், மனசுக்குள் ரொம்ப சென்ஸிடிவ். சில சமயம் ஷூட்டிங்கில், பிறர் பார்க்காமல், என் மேக்கப் வண்டியில் உட்கார்ந்து அழுதுகொண்டிருப்பேன். மீடியா என்னவோ என்னை ரொம்பவும் திமிர் பிடித்தவள்; அலட்சிய சுபாவம் என்றெல்லாம் எழுதுகிறது. எழுதிவிட்டுப் போகட்டும்; எனக்கு என் குடும்பம், என் நண்பர்கள், என் விசிறிகள், என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதுதான் முக்கியம்" என்கிறார் சற்று எமோஷனலாகி.

மூடை மாற்ற, "முதலில் ஆர்ட் மூவி மாதிரி ரோலைத் தேர்ந்தெடுத்தீர்கள், அடுத்து கமர்ஷியலுக்கு மாறினீர்கள்; எது பிடித்திருந்தது?" எனக் கேட்டால், "இரண்டும்தான்" என்கிறார்.

"இரண்டிலும் என்னால் பளிச்சிட முடியும் என்பதை நிரூபிக்கவே, மாறுபட்ட ரோல்களைத் தேர்வு செய்தேன். எப்போதும் என்னுடைய பாத்திரத்தை மட்டும் பார்க்காமல், படத்தின் முழு ஸ்க்ரிப்டையும் நன்றாகப் படித்து விட்டுத்தான் அதில் நடிக்க முடிவு செய்வேன். அம்மா நிறைய உதவுவார். ஆனால் முடிவாக 'யெஸ்' 'நோ' சொல்வது என் கையில்தான்!

"ஆனாலும் கமர்ஷியலில் நடிக்க கொஞ்சம் கவலையாகத்தானிருந்தது; கமர்ஷியல் அல்லாத படங்களில் இருக்கும் சௌகர்யங்களே அலாதி. 'வெயிட்'டைப் பற்றியும், 'லுக்'கைப் பற்றியும் கவலைப்படாமல், ஜாலியாக ஒரு ஸல்வார் கமீஸைப் போட்டுக் கொண்டு நடித்து விடலாம்" என்றார்.

"உங்களுக்கு அதிகமாக மேக்கப்பெல்லாம் பிடிக்காதாமே?'' என்றதற்கு "ஆமாமாம்; ஹேர் ஸ்டைல்கூட சிம்பிளாக இருந்தால்தான் பிடிக்கும்" என்றவர், லக்மே ப்யூட்டி சலூனில் நின்றுகொண்டிருந்ததால், அவசரமாக, "மேக்கப் சாதனங்களைப் பயன்படுத்தினால் அவை இந்தியத் தயாரிப்புகளாக இருக்கட்டும்'' என்று பொன்மொழியை உதிர்த்து வைத்தார்.

ஹ்ருத்திக்குடன் இவரை இணைத்து வந்த செய்திகளை நினைவூட்டினாலேயே பத்ரகாளியாகி விடுகிறார். 'ப்ளீஸ்... கல்யாணமாகாத யாருடனாவது என்னை இணைத்துப் பேசித் தொலையுங்களேன்'' என்று கெஞ்சுகிறார்.

"நான் நீண்ட எதிர்காலத்தைப் பற்றி எல்லாம் சிந்திப்பதேயில்லை; இன்றைக்கு என்னை நம்பர் ஒன் என்பவர்கள், நாளை தூக்கி எறிந்தும் விடலாம். ஒரு ஐந்து வருடம் கழித்து, சினிமாவிலிருந்தே நான் மறைந்து விடலாம். யார் கண்டார்கள்? அதுவரை தினம் தினம் ஒரு இனிய கற்பனையுடன் விடியட்டுமே..." என்றார்.

சரி, சென்னை சென்று கோலிவுட்டில் நடிக்க ஆசையா என்று கேட்க நினைத்து, "சென்" என ஆரம்பிப்பதற்குள்... சென்றே விட்டாரே!

— ஜெ.ஆர்

புயல் கிளப்பும் ஜெக்? கடிதம்!

● 'அன்புள்ள ஐயா' என்று காவல் துறைத் தலைவருக்கு ஒரு பெண் மணியால் எழுதப்பட்டுள்ள அந்தக் கடிதம் தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தும் என்று சொல்கிறார்கள். "எனது தாயார் திருக்கோயிலூரைச் சேர்ந்தவர். அவருக்கும் திராவிடத் தலைவருக்கும் ஏற்பட்ட தொடர்பில் நான் பிறந்தேன். என்னை ஒரு கிறிஸ்துவ அனாதை இல்லத்தில் சேர்த்து விட்டார்கள். என் படிப்பு செலவு முழுவதும் அந்தத் தலைவர்தான் ஏற்றுக் கொண்டார். ஆனால் ஊரறிய என்னைத் தம் மகள் என்று ஏற்றுக் கொள்ள மறுக்கிறார். என்னைப் பார்த்தால் கண்டுகொள்ளாமல் ஓடுகிறார். இப்போது நான் ஒரு சுதந்தரப் போராட்ட தியாகியின் பாதுகாப்பில் உள்ளேன். எனவே மரபணு சோதனை நடத்தி, நான் அவருக்குப் பிறந்த மகள்தான் என்பதை எல்லோரும் அறியும்படி நிரூபிக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்பது உட்பட பல விஷயங்களைச் சொல்கிறது அந்தக் கடிதம். இதன் நகல் சென்னை போலீஸ் கமிஷனருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. வெறுங்கையில் புயல் கிளப்பும் சென்னை கமிஷனருக்கு இந்தக் கடிதம் அல்வா சாப்பிட்டது போல என்கிறார்கள் சில போலீஸ் அதிகாரிகள்.





• ரஜினி



• ராஜகோபாலன்

● ரஜினி என்ன செய்கிறார்? கேளம்பாக்கத்தில் கட்டப்பட்டு வரும் தம் பண்ணை வீட்டை தினசரி சென்று பார்வையிடுகிறார். கட்டி முடித்த பின், தாம் மட்டும் அங்கு சென்று வசிக்க தீர்மானித்திருக்கிறார். சமீபத்தில் த.மா.கா. தலைவர் ஒருவர் ரஜினியைச் சந்தித்திருக்கிறார். "நல்ல காரியங்கள் செய்த தி.மு.கவையே மக்கள் தோற்கடிச்சுட்டாங்க. இனி மக்களே உணர்ந்தால்தான் உண்டு" என்று சலிப்புடன் சொன்னாராம் ரஜினி. முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் மகன் ரங்காராவ் பண விவகாரத்தில் தம்மை ஏமாற்றிய வழக்கிலும் ரஜினி பிஸியாக இருக்கிறார். வரும் டிசம்பர் மாதம் புதிய படத்துக்கான பூஜை இருக்குமாம்.

● ஒரு வழியாக ராஜகோபாலனை விடுவித்து விட்டார் ஜெயலலிதா. ஆனால் அவருக்கு ஒரு பயம் இருக்கிறதாம். தனக்குப் பாதுகாப்பாக இருக்கும் கறுப்பு பூனைப் படையை வாபஸ் பெற ராஜகோபாலன் ஏதாவது ஏற்பாடு செய்து விடுவாரோ? என்பதுதான் அந்த பயம். ஆனால் ராஜகோபாலன் பதவியேற்பதற்கு முன்னரே கறுப்புப் பூனை பணிகளைப் பற்றி ஆய்வு செய்த உள்துறை கமிட்டி ஒன்று, நான்கு தலைவர்களுக்கு இந்தப் படைகளை வாபஸ் பெறலாம் என்று சொல்லியிருக்கிறது. அந்த நான்கு பேரில் ஒருவர் ஜெயலலிதா! ஆனால் அதற்கு அந்தக் கமிட்டி சொன்ன காரணம் வித்தியாசமானது: "நன்றாகப் பயிற்சி பெற்ற கறுப்புப்பூனை படைக்குச் சமமாக ஒரு ஸ்பெஷல் கமாண்டோ பிரிவு தமிழக போலீஸிலேயே உள்ளது. அந்தக் கமாண்டோக்களை முதல்வர் ஜெயலலிதா பயன்படுத்திக் கொள்ளலாம்" என்று சொல்லியிருக்கிறதாம்.

— சஞ்சயன்

காதில் விழுந்தவை!

100 நாள் ஆட்சி!

ஜெயலலிதாவின் நூறு நாள் ஆட்சியை எடை போடச் சொன்னோம் இவர்களிடம்:

எல். கணேசன் (அவைத் தலைவர், ம.தி.மு.க):

ஐந்தாண்டுகள் ஆட்சி நடத்த மக்கள் அ.தி.மு.கவுக்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். மூன்று மாத காலத்தில் அந்த ஆட்சியைப் பரிசோதனைக்கு ஆட்படுத்துவது சரிதானா என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. ஐந்தாண்டு ஆட்சி புரிய அனுமதி என்றுதான் பொருளே, தவிர ஆட்சியில் இருப்பவர்கள் அக்கிரமம் புரிய, அநியாயம் செய்ய உரிமம் பெற்றிருப்பதாகக் கருதிக் கொள்ளக்கூடாது. அநியாய ஆட்சியை எப்போது வேண்டுமானாலும் மக்கள் தூக்கி எறியலாம்.

இந்தக் குறுகிய காலத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சில நல்ல சாதனைகளை அ.தி.மு.க அரசு செய்திருக்கிறது. விவசாயிகளின் வட்டிச் சுமையைக் குறைந்துள்ளது அ.தி.மு.க அரசு.

மதுக்கடைகளை நடத்த உரிம முறையில் (licence) அனுமதி வழங்கியிருந்தால் கோடி கோடியாக ஊழல் நடந்திருக்கும். அவ்வாறின்றி குலுக்குச் சீட்டின் மூலம் அனுமதி வழங்கியிருப்பது சாதாரணமான செயல் இல்லை. கட்சிக்காரர்களின் கோபதாபங்களுக்கு ஆளானால்கூட பரவாயில்லை என்று துணிச்சலாகச் செயல்பட்டிருக்கிறார் செல்வி ஜெயலலிதா. ஆசிரியர்கள் மாற்றத்திற்குக் கவுன்சிலிங் முறையைக் கடைபிடித்ததும் லஞ்ச லாவண்யத்தை ஓரளவாவது கட்டுப்படுத்தக்கூடிய அருஞ்செயலே. அ.தி.மு.க அரசில் நடந்துள்ள நல்லவைகளை விரல்விட்டு எண்ணி விடலாம். ஆனால் நடந்துள்ள தவறுகள் மிக அதிகம்.

திறமையானவர்களை அமைச்சர்களாகப் போடாதது அவரது ஆட்சிக்குப் பெரிய பலவீனம்.

எத்தனையோ பிரச்னைகள் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்குத் தீர்வு காண்பதை விட்டு விட்டுத் தேவையற்றவைகளில் தன் கவனத்தைச் செலுத்தி மாட்டிக்கொள்கிறார். ஜெயலலிதாவுக்குப் பழி வாங்கும், வஞ்சம் தீர்க்கும் உணர்வே மேலோங்கியுள்ளது. அதனால் அவருக்கும் தீமையே. நாட்டிற்கும் தீமையே. 'கலைஞர்' மட்டும் தம்மிடம் அப்படி நடந்துகொண்டாரா? என்று கேட்டுப் பயனில்லை. "கலைஞர் எப்படி என்னைப் பழி வாங்கினார்; நான் அவரை அப்படிப் பழிவாங்கவில்லை பாருங்கள்" என்று காட்டிக் கொள்வதே சிறந்த முன் மாதிரியாக இருக்கும். மாறாக இப்போது அவர் ஆப்பை அசைத்து விட்டு மாட்டிக் கொண்ட குரங்கைப் போல்





• எல். கணேசன்

போடுகிறார்கள்



அவஸ்தைபட்டுக் கொண்டிருக்கிறார்.

நாம் கைது செய்யப்பட்ட விஷயத்தை மட்டும் வைத்துக்கொண்டே கலைஞர், ஆட்சியில் இருப்பவர்களுக்குப் பலவித இடையூறுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். அம்மையார் ஆட்சி நடத்துவதில் கவனத்தைச் செலுத்துவதைவிட ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள காவடி எடுக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தி விட்டாரே கலைஞர்.

இறுதியாக, ஜனநாயகத்தில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி ஆகியவற்றை விட அரசியல்வாதிகளை விட, வாக்காளப் பெருமக்களுக்கே பொறுப்பும் கடமையும் அதிகம். வாக்களிப்பதுடன் அவர்கள் கடமை முடிந்துவிட்டது என்று கருதினால் நல்லாட்சி நடைபெறாது. ஆட்சியில் இருப்பவர்கள், தாங்கள் தேர்தல் காலத்தில் தந்த உறுதிமொழிகளைக் காப்பாற்றுகிறார்களா? ஊழலற்ற ஆட்சி நடத்துகிறார்களா என்று மக்கள் கண்காணிக்க வேண்டும். Eternal vigilance is cost of democracy - இடையறாத விழிப்புணர்ச்சிதான் ஜனநாயகத்திற்கு மக்கள் தரும் விலையாகும். அப்படி ஒரு விழிப்புணர்வு இல்லாவிட்டால், சிதைவையும், சீரழிவையும் தடுக்க முடியாது!

தகர்ந்து விட்ட நம்பிக்கை!

கே.என். லட்சுமணன் (பா.ஜ.க சட்ட மன்ற குழு தலைவர்):

சட்டப் பேரவையில் முதல்நாள் பேசும்போது,

•புலமைப்பித்தன்




• லட்சுமணன்



"நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லதாக இருக்கட்டும்" என்றார் முதல்வர் ஜெயலலிதா. எனவே பெருவாரியாக, தனக்கு வோட்டு போட்ட மக்களின் நம்பிக்கை பொய்த்துப் போகாமல் ஆட்சி நடத்துவார் என்று மக்களும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அந்த நம்பிக்கை மூன்றே நாட்களில் தகர்ந்துவிட்டது. பரிதி இளம்வழுதி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பரசுராமன், ரங்கநாதன் என்று தொடங்கி, உச்சகட்டமாக கலைஞரைச் சிறையிலடைப்பதுவரை பழிவாங்கும் படலம் நடத்தப்பட்டது. மத்திய அமைச்சர்கள் மீது வன்முறை ஏவப்பட்டு அவர்களையும் கைது செய்தது உச்ச பட்ச துஷ்பிரயோகம். இத்துடன் அராஜகம் ஓய்ந்துவிடும் என்று எதிர்பார்த்தால், தி.மு.க பேரணியில் போலீஸ் மற்றும் குண்டர்களின் வெறித்தனம், பத்திரிகையாளர்கள் மீது மிருகத்தனமான தாக்குதல் என்று அடக்குமுறை தொடர்ந்து ஏவப்பட்டது. இந்த அரசில் குறுகிய காலத்தில் அமைச்சர்கள் பலர் சுழற்றி விடப்பட்டு இருக்கிறார்கள். பலரது இலாகாக்கள் மாற்றப்பட்டு இருக்கின்றன. அமைச்சர்கள் முடிவெடுக்கத் தயங்குகிறார்கள். நிர்வாகம் ஸ்தம்பித்துப் போயிருக்கிறது.

பட்ஜெட் பெருத்த ஏமாற்றம். விவசாயத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாது. "தி.மு.க ஆட்சியில் பணப் புழக்கம் இல்லை, அம்மா ஆட்சிக்கு வந்தால் சரியாகி விடும்" என்று அ.தி.மு.கவினர் சொல்லி வந்தார்கள். ஆனால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்காததால், பணப்புழக்கத்தின் நிலை அப்படியேதான் இருக்கிறது. அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏகமாக உயர்ந்துவிட்டது. கூட்டுறவு சங்கங்களிடமிருந்து வாங்கிய சரக்குகளுக்கு, கோ-ஆப்டெக்ஸ் பணம் கொடுக்க நடவடிக்கையும் இல்லை. கரும்பு விவசாயிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்யவில்லை. முன்பு ராஜாஜி கைத்தறிக்கென்று 22 ரகங்களை ஒதுக்கினார். ஆனால் அது 11 ரகங்களாக சுருங்கி விட்டது. அவர்கள் துயர் துடைக்கப்பட வேண்டுமென்றால் 22 ரகங்களை ஒதுக்க வேண்டும்.

நகர்ப்புறங்களில், குறிப்பாக என்னுடைய தொகுதியான மைலாப்பூர் உட்பட, கடுமையான குடிநீர்ப் பஞ்சம். சட்டமன்ற முதல் கூட்டத்தில் 'ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஏமாற்றி விட்டார்' என்று முதல்வர்



"'இப்பல்லாம் சுதா ஏன் விளையாட வர்றதே இல்ல!"
"அவ எல்.கே.ஜில சேர்ந்துட்டால்ல... அதான்!"

— வீ. முத்தையா

சொன்னதன் மூலம், அண்டை மாநிலத்துடன் சுமுகமான உறவு நிலவாமல் இருக்கும் நிலை உருவாகிவிட்டது. இதனால் கிருஷ்ணா நீர் சென்னைக்குக் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முதல்வர்தான் காரணம். பதவியேற்ற நாளிலிருந்து ஏழை மாணவ மாணவிகள் மற்றும் நலிந்த பிரிவினருக்குப் பண உதவி, மருந்து, கல்வி உதவிகள் செய்து வருகிறார் முதல்வர். இது பாராட்டத்தக்க ஒன்று என்றாலும் ஒட்டு மொத்த சமுதாயத்துக்கும் ஏற்ற திட்டங்கள் தீட்டி எல்லா மக்களுக்கும் நன்மை செய்வதே சரியான அணுகுமுறை ஆகும்!

ஒரு சரித்திரம் உருவாகிறது!

புலமைப்பித்தன் (அணித்தலைவர், தி.மு.க):

இன்றைய ஆட்சி, இதுவரை நடந்துள்ள ஆட்சிகளிலிருந்து மிகவும் மாறுபட்டது, வித்தியாசமானது. ஒரு இலட்சிய நோக்கோடு 'காய்தல் – உவத்தல்' இன்றி ஆட்சியை நடத்துகிறார் முதல்வர். 1991-96ஆம் ஆண்டுகளில் நடந்த அரசுக்கும், இப்போது நடக்கும் அரசுக்கும் முதல்வர் மனத்தளவில் பெரிய வேறுபாடு உள்ளது. ஒரு சரித்திரத்தைப் படைக்க வேண்டும் என்ற வெறி இப்போது பளிச்சென்று தெரிகிறது.

ஒரு புதிய அரசு பதவியேற்றவுடன் ஆறு மாத காலம் அதனுடைய ஆட்சி முறையைப் பார்த்துவிட்டு பின்னர் விமர்சிப்பது, போராட்டம் நடத்துவது என்பது ஒரு கண்ணியம் மிக்க எதிர்க்கட்சியின் நடவடிக்கையாக இருக்க வேண்டும். ஆனால் இங்கே நடப்பது என்ன? ஒரு தனிப்பட்ட மனிதரின் கைது சம்பவத்தை எதிர்த்து, பேரணி கலவரங்களை உருவாக்குவது என்பது தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே நடந்தது கிடையாது" வன்முறைக்காகவே ஒரு பேரணி நடத்தப்படுகிறது. அதில் நூறு பிணங்களாவது விழ வேண்டும்; ஆட்சி கலைக்கப்பட வேண்டும்" என்று திட்டமிட்டு செயல்பட்டிருக்கிறார் கருணாநிதி. ஆனால் காவல்துறை பொறுமை காக்கவே, கருணாநிதியின் திட்டம் தவிடு பொடியானது. 'இங்கு 356ம் அரசியல் சட்டப் பிரிவை அமுல்படுத்தும் அளவுக்கு நீங்கள் என்ன செய்துள்ளீர்கள்?' என்று தனது கட்சிக்காரர்களை உசுப்பி விடுகிறார் பொறுப்பற்ற ஒரு மத்திய அமைச்சர். எனவே அதற்கான சூழலை உருவாக்க படாதபாடு படுகிறார் கருணாநிதி.

எப்படியும் இந்த ஆட்சியை விரட்டிவிட வேண்டும் என்ற கருணாநிதியின் ஆசை என்றைக்கும் நிறைவேறாது. ஆனால் இத்தகைய மோசமான எதிர்க்கட்சி, தினசரி பல பிரச்னைகளைக் கிளப்பி அநாகரிகமாகவும், அருவெறுக்கத்தக்க முறையிலும் நடந்து கொண்டாலும் இந்த நூறு நாட்கள் ஆட்சியில் பளிச்சென்று தனது முத்திரைகளைப் பதித்திருக்கிறார் ஜெயலலிதா. உதாரணமாக

– உழைப்பவனே உயர்ந்தவன் என்ற அடிப்படையில் விவசாயிகளின் துயர் துடைக்க 300 கோடிக்கு வட்டி தள்ளுபடி.

– 20 லட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை பண்படுத்தி அதை விளைநிலமாக மாற்றும் அற்புதமான திட்டம்.

– தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு முதுகலைவரை இலவச படிப்பு

– ஆசிரியர்களுக்கு கவுன்சிலிங். மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் தாழ்த்தப்பட்ட பெண்களுக்குப் பள்ளிக்குச் செல்ல இலவச சைக்கிள்.

– சென்னை குடிநீர் பிரச்னையைத் தீர்க்க உடனடியாக நெய்வேலி, ஈரோடு போன்ற இடங்களிலிருந்து சென்னைக்குக் குடிநீர். நிரந்தரமாக தீர்க்க புதிய வீராணம்.

– பட்ஜெட்டில் பல தொலைநோக்குத் திட்டங்கள் எத்தனை இடையூறுகள் வந்தாலும் எடுத்துக் கொண்ட பணியைச் செய்து முடிப்பேன் என்று சூளுரைத்து செயல்பட்டு வருகிறார் புரட்சித் தலைவி. அவரது பயணத்தை எத்தனை கருணாநிதிகள் வந்தாலும் தடுக்க முடியாது என்பது நிச்சயம்!

சந்திப்பு: **ப்ரியன்**
படங்கள்: **ராஜன்**
அட்டை வண்ணப்படங்கள்: **சௌரா**

ஒரு வாரம் ஆச்சுப்பா...!



"ஏய்! அங்கே போகாதே! கூட்டத்தைக் கலைக்க போலீஸ் தண்ணியைப் பீய்ச்சி அடிக்கிறாங்க!"

"அதனால தான் போறேன்! குளிச்சு ஒரு வாரம் ஆச்சுப்பா..!"

– சம்பத் குமார்.




"எதுக்கு ஆபீஸ் கிளார்க்கை போலீஸ் கைது பண்றாங்க?"

"பர்சனல் கம்ப்யூட்டர்ங்கறதைத் தப்பா புரிஞ்சுக்கிட்டார் அதான்."

"எப்படி?"

"ஆபீஸ்ல இருந்த கம்ப்யூட்டரையெல்லாம் வீட்டுக்கு எடுத்துட்டுப் போயிட்டார்."

– எஸ். தமிழ்மணி



"மாப்பிள்ளை காரை விட்டு இறங்கி, எலெக்டிரிக் போஸ்ட்ல ஏறி, மரத்துல தொங்கி, மாடில குதிச்சு, மண்டபத்து ஜன்னல் வழியா டைவ் அடிச்சு, சறுக்கி வந்து பொண்ணுக்குத் தாலி கட்டுகிறாரே... ஏனாம்?!"

"அவரு ஜாக்கிசான் ரசிகராம்!"


– வீ. முத்தையா



"எடை பார்க்கும் மெஷினில் வந்த அட்டை வாசகம் என்ன?"

"மூச்சு முட்டுகிறது: உடனே இறங்கு. வெயிட்டைக் குறைக்கும் வழியைப் பார்!"

– மஞ்சுதேவன்





2001 செப்டெம்பர் 2
விஷு ஆவணி 17
மலர் : 60
இதழ் : 5

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



பதற வைக்கும் பட்டினிச்சாவுகள்!


பழம் பாரத நன்னாடு
பசும்பொன் விளையும் நாடு
செழும் நெல் விளைவதிங்கே - மாந்தர்
பசியால் மடிவதும் ஏனோ...?

- பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் பாபனாசம் சிவன் இயற்றிய இந்தப் பாடல் தடை செய்யப்பட்டது!

- இன்று... சுதந்தர இந்தியாவில், உச்சநீதிமன்றம் இதே கேள்வியை எழுப்பி, மத்திய, மாநில அரசுகளுக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது!

பி.யூ.சி.எல் அமைப்பு தொடுத்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற பெஞ்ச், 'பல மாநிலங்களில் மக்கள் பட்டினியால் செத்து மடிந்துகொண்டிருக்க, ஆயிரக்கணக்கான டன் தானியங்கள் அரசுக் கிடங்குகளில் வெறுமே அடுக்கி வைக்கப்பட்டுப் புழுத்துக் கொண்டிருக்கும் அக்கிரமத்தைத் தட்டிக் கேட்டிருக்கிறது.

மத்திய அரசு வெகு விரைவில் உச்சநீதிமன்ற நோட்டீசுக்குப் பதில் தருவதாக அறிவித்திருக்கிறது.



அரசு தரப்பில் அளிக்கப்படும் விளக்கம் என்னவாக இருந்தாலும் சரி, பட்டினிச் சாவுகள் நாட்டின் அவமானச் சின்னங்கள்!

இன்னமும் நமது ஜனத்தொகையில் 26 சதவிகிதம் வறுமைக் கோட்டுக்குக் கீழேதான் இருக்கிறது. பட்டினிச் சாவுகள் நிகழ்வதை ஒப்புக்கொள்ள மறுக்கும் பல மாநிலங்களில், அந்த உயிரிழப்புக்கு, 'ஊட்டச்சத்துக் குறைவால் ஏற்பட்ட மரணங்கள்' என்று 'கௌரவ'ப் போர்வை போர்த்தப்படுகிறது.


பிரச்னையிலிருந்து கவனத்தைத் திருப்பவும் தப்பிக்கவும்தான் இத்தகைய வார்த்தை விளையாட்டு விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

தீர்வு...?

உபரி உணவு தானியத்தையே ஊதியமாக்கி, வேலைக்குக் கூலியாக இந்த தானியங்களையே வழங்கி, பட்டினிச் சாவுகளைத் தவிர்க்கலாம்.

உடலுழைப்பைக் கோரும் அபிவிருத்திப் பணிகள் இன்னும் ஏராளமாக பாக்கியிருக்கின்றன, இந்தியாவில். நமது மக்கள் சக்தியை முறைப்படுத்தி, வகைப்படுத்தி இப் பணிகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் - குறிப்பாக, சாலைகள் அமைத்தல், வனம் வளர்த்தல், ஏரி - குளங்கள் வெட்டுதல், ஏரிக்கரைகள், கால்வாய்களைப் பலப்படுத்துதல் போன்ற நிரந்தரப் பலன்தரத்தக்க பணிகளை ஒப்பந்த முறையில் தனியாரிடம் தருவதை விடுத்து, அரசு இயந்திரமே அப்பணிகளை மேற்கொள்ளலாம். அந்தந்த பகுதிகளில் வேலையின்றி இருக்கும் மக்களை ஈடுபடுத்தி, கூலியாக தானியங்களை வழங்கலாம்.

கான்டிராக்ட் வழங்கும் முறையைக் கைவிட்டால் அரசு இயந்திரத்தை இயக்குவோரால் கமிஷன் அடிக்க முடியாமல் போய்விடும். ஆனால் ஊட்டச்சத்துக் குறைவால் நலியும் 208 மில்லியன் இந்தியர்களுள் கணிசமானோர் உணவு தானியங்களைப் பெற்றுப் பசியாற வாய்ப்பு உண்டு. நமது மிகப் பெரிய செல்வமாகிய மக்கள் தொகையை நன்கு பயன்படுத்திக் கொண்ட பெருமையும் கிட்டும். இதற்கெல்லாம் அடிப்படையாக, உடலுழைப்பின் பெருமையை மக்கள் அனைவரும் உணருமாறு நமது மாநில - மத்திய அரசுகளின் கல்வி, பொருளாதாரக் கொள்கைகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.



அண்ணா வழியில் அன்பழகன்!

பரிதி இளம்வழுதி, சட்டமன்றத்துக்குப் புதியவரல்ல, துணைச் சபாநாயகராக இருந்தவர். இன்று அவர் எதிர்க்கட்சி உறுப்பினராக கௌரவமாகச் செயல்படுவதை விடுத்து, தமது கட்சியின் மூத்த தலைவரே நொந்து போகும் அளவுக்கு இடையூறு செய்திருக்கிறார்.

ஆளுங்கட்சியின் கொள்கைகளை விமர்சித்து, தவறுகளைச் சுட்டிக்காட்டி, ஆரோக்கியமாய் விவாதிப்பதுடன், மாற்று யோசனைகள் கூற வேண்டிய பொறுப்பும் எதிர்க்கட்சிக்கு இருக்கிறது. ஆனால், எதிர்ப்பதற்காகவே எதிர்ப்பு என்பது இன்று நாடாளுமன்றத்திலும் சட்டசபைகளிலும் மிகவும் சகஜமாகிவிட்டது. ஆளுங்கட்சியினர் எதைச் சொன்னாலும்/செய்தாலும் சரி, மாற்று அணியினர் வன்மையாகக் கண்டித்து, வெளிநடப்புச் செய்வதும், கூச்சல் போட்டு அவை நடவடிக்கைகளை ஸ்தம்பிக்கச் செய்வதும் வாடிக்கையாகிவிட்டன.

இந்த வழியொற்றித்தான் பரிதி இளம்வழுதி தமிழக சட்டசபையில் நடந்துகொண்டிருக்கிறார். தி.மு.க எம்.எல்.ஏ பெருமாள் மரணத்தையொட்டித் தாம் பேச வேண்டும் என்று பரிதி எண்ணினால் அதற்கு வாய்ப்பான சந்தர்ப்பத்துக்கு அவர் காத்திருக்க வேண்டும். ஆனால் பொறுமை இழந்து வாக்குவாதம் முற்றிய நிலையில் பரிதி உபயோகித்த மொழி, சட்டசபையின் கௌரவத்துக்கு இழுக்கு சேர்ப்பதாக அமைய, தி.மு.க சட்டமன்றத் தலைவர் அன்பழகன், தமது கட்சிக்காரர்களின் மோசமான நடத்தையை எதிர்த்து, தாமே வெளிநடப்புச் செய்து சரித்திரம் படைத்திருக்கிறார்!

தமது கட்சியினர் என்றும் பாராமல், ஒரு தவறுக்கு வன்மையாக எதிர்ப்புத் தெரிவித்த பேராசிரியர் அன்பழகனின் மனத் திண்மை முன்னுதாரணமாகியிருக்கிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணாவின் கோட்பாடுகளை மதித்து நடக்க இன்னமும் அன்பழகன் போன்ற ஒரு சிலர் இருக்கிறார்கள் என்ற ஆறுதலும் ஏற்படுகிறது. ○

ஞானமலை அழைக்கிறது!

அருணகிரிநாதரின் அற்புதத் திருப்புகழ்ப் பாடல் பெற்றதும் முருகப் பெருமானின் திருவடிச் சுவடுகள் பதிந்ததுமான ஞானமலை ஸ்ரீ பால சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில், கோவிந்தச்சேரி (வாலாஜா / சோளிங்கர் அருகில்) மலைக்குத் திருப்படிகட்ட படி ஒன்றுக்கு ரூ. 1000/-ஐ "SIRUVAPURI MURUGAN ABHISHEKA COMMITTE" என்ற பெயரில் CHEQUE/D.D. அனுப்பி திருப்பணியில் பங்கு கொள்வீர்!

சிறுவாபுரி முருகன் அபிஷேகக் குழு,
52, முத்தையா முதலி இரண்டாவது தெரு, இராயப்பேட்டை,
சென்னை - 14.
போன்: 8544468

பருக பருக ஆனந்தம்
அதிக ஆனந்தம்
சுத்தமான தஞ்சாவூர் டிகிரி காப்பிக்கு

ஜீவா காபி

கல்யாணங்களுக்கும் சுபகாரியங்களுக்கும்
100% பியூர் பில்டர் காபி பவுடர்

தயாரிப்பாளர்கள்:


ஜீவா காபி ஒர்க்ஸ்

28, பி.வி. நாயக்கன் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

இலவச டோர் டெலிவரிக்கு
தொடர்பு கொள்ளவும் : 8444725

நவராத்திரி கொலுப் படிகள்

எங்களிடம் தரமான கொலுப் படிகள் உங்களது தேவைக்கேற்ப, 7 படிகள், 5 படிகள், 3 படிகள் அளவுகளில் கிடைக்கும்



மொத்தமாகவும் & சில்லரையாகவும் கிடைக்கும் இடம்.

OM SAKKTHI METAL CRAFT
(Manufacturers)
49, Perambur High Road, Jamaliya,
Perambur, Chennai -12.
Ph: 6622837, 6624618 TeleFax: 6623984
Email:sakkthi12@vsnl.net

ஞான வாபி

ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளின் அருளாசியுடன் சென்னை தாம்பரத்தை அடுத்த மாடம்பாக்கத்தில் ஹிந்துக்களின் அபரகாரியங்களுக்காக **"ஜனார்த்தனம்"** என்ற பெயரில் ஞானவாபி ஏற்படுத்திட இடம் வாங்கப்பட்டுள்ளது. நவீன வசதிகளுடன் கட்டடங்கள் எழுப்பிட ரூ.25/- லட்சம் வரை தேவைப்படுகிறது. அனைத்து ஹிந்து பெருமக்களும் தங்களது நன்கொடைகளை "தாம்பரம் ஹிந்து தர்ம பரிபாலன டிரஸ்ட்" பெயரில் DD/Chequeயினை ஸ்ரீ A.J. பாலசுப்பிரமணியம், B-4, U.S. அபார்ட்மென்ட்ஸ், 262, வேளச்சேரி சாலை, கிழக்கு தாம்பரம், சென்னை – 59க்கு (போன் 2378258) அனுப்பி உதவிடலாம். இதற்கு 80G வருமானவரி விலக்கு பெறப்பட்டுள்ளது.

இறையருட்பணியில்:
P. ஸ்ரீனிவாசன் & கலாபாரதி
சுரேஷ் நகர், சேலையூர்.

அமெரிக்காவில் குந்தவை, வானதி!



• வானதி

அமெரிக்காவில் சாஃப்ட்வேர் என்ஜினியராக இருக்கும் பழநிகுமாருக்கு வயது 36. சென்னையில் படித்துக் கொண்டிருக்கும்போது பொன்னியின் செல்வன் நாவலால் ஈர்க்கப்பட்டுக் கிறங்கிப் போய்விட்டார் அவர். அப்போதே முடிவு செய்ததுதான். அந்த கதாபாத்திரங்களின் பெயர்களைத் தமது குழந்தைகளுக்கு வைக்க வேண்டும் என்று.

"அமெரிக்கா போய்ச் செட்டிலானாலும் அந்தக் கதாபாத்திரங்கள் மனத்தில் தைக்க, பிறந்த இரண்டு பெண் குழந்தைகளுக்கும் வானதி, குந்தவை என்று பெயர் வைத்துவிட்டான்" என்கிறார் பழநிகுமாரின் தந்தையும் முன்னாள் காவல்துறை அதிகாரியுமான ஞானசம்பந்தம் ஐ.பி.எஸ்.

"மூன்று முறை அந்த நாவலைப் படிச்சிருக்கான் பழநிகுமார். இங்க இருக்கும்போது அடிக்கடிச் சொல்வான் கரிகாலனை சாகடிச்சிருக்கக் கூடாதுன்னு. இன்னும் அந்த நாவல் பற்றி அதிகமா விவாதிச்சிட்டே இருப்பான். இப்பவும் அமெரிக்காவுல அவன் வீட்ல அந்த நாவலை வைத்திருக்கான்" என்கிறார் பழநிகுமாரின் அம்மா.

மும்பையில் தாரிணி!

"கல்கியின் பெரும்பாலான நாவல்களை நான் படித்திருந்தாலும் 'அலைஓசை' நாவல் நெஞ்சைத் தொட்ட ஒன்று. அதில் வரும் தாரிணி கேரக்டர் என் மனத்தைப் பாதித்தது. திருமணத்திற்குப் பிறகு கணவர் அனுமதியுடன் என் மகளுக்கு அப்பெயரை வைத்தேன்" என்று சொல்லும் மைதிலி சீனிவாசன் இப்போது மும்பையில் வசிக்கிறார். பத்து வயதான தாரிணி படித்துக் கொண்டிருக்கிறார்.

எம்.சி.ஏ வானதி!

'பொன்னியின் செல்வனால்' கவரப்பட்ட ஏராளமான வாசகர்களில் குமரேசனும் ஒருவர். மனம் மகிழ்ந்த பொ.செ. கேரக்டர்களில் ஒன்றின் பெயரை தம் குழந்தைகளுக்குச் சூட்டுவதென்று முடிவெடுத்தார். அதன்படி பெண் குழந்தை பிறந்ததும் 'வானதி' என்று பெயரிட்டார் குமரேசன். இப்போது எம்.சி.ஏ முடித்து விட்டு கம்ப்யூட்டர் கோர்ஸ் படித்து வருகிறார் வானதி.



• தாரிணி

இளைய குந்தவை •

ரிமோட்

The only war that brings no casualty is the war of genders என்பார்கள். லேட்டஸ்ட் உதாரணம் : பெண்கள் வேலைக்குப் போகலாமா என்பது குறித்த பட்டிமன்றம்.

"எதைச் சொன்னாலும் இந்த ஆண்கள், சங்க காலத்திலிருந்து மேற்கோள் காட்ட ஆரம்பித்து விடுகிறார்கள். இல்லாள், மடவாள் என்று அடுக்குகிறார்கள். சங்க காலத்தில் காளையை அடக்கினால் தான் எந்த ஆண்மகனும் கல்யாணம் செய்து கொள்ளலாம். இன்று அதைப் பின்பற்றினால் எத்தனை ஆண்களுக்குத் திருமணமாகியிருக்கும்?" என்று முழங்கினார் ஒரு மங்கை.

ஆண்கள் தரப்பில் பேசிய ஒருவர், "பெண்களுக்குப் புருஷனைக் காட்டிலும் டீ.வி. தொடர்தான் முக்கியமாகிவிட்டது" என்று கிண்டலடித்தார். "சாப்பிட உட்கார்ந்தால், முதல் விளம்பர இடைவேளையின்போதுதான் சாதம் வருகிறது. இரண்டாவது இடைவேளையின்போது குழம்பு. மூன்றாவது இடைவேளையின்போது கூட்டு..." என்றார் இந்தத் தவணை முறை சாப்பாட்டுக்காரர்.

தலைமை : பட்டிமன்றத்துக்குப் பட்டா வாங்கியுள்ள சாலமன் பாப்பையா. சாலமன் இருக்கும் இடத்தில் சிரிப்பு இருக்கும், பாப்பையா இருக்கும் இடத்தில் 'பஞ்ச்'சுக்குப் பஞ்சமிருக்காது என்பது மீண்டும் ருசுவாயிற்று.



திவ்யா உன்னி

"நாட்டுப் பற்று முக்கியமானது என்பதைச் சொல்லும் பல படங்களில் நான் நடித்திருக்கிறேன். வீட்டுப்பற்று அவசியம் என்பதை என் 'வேதம்' படம் வெளிக்காட்டும்" என்று அர்ஜுன் தெரிவித்தார் சன் டீவியில். படத்திலிருந்து சில காட்சிகளைப் பார்த்த போது நாட்டுப் பற்றையும் வீட்டுப் பற்றையும் காட்டிலும் வேட்டுப் பற்று அதிகம் இருக்குமோ, என்ற ஐயம் ஏற்பட்டது. யத்ர யத்ர அர்ஜுன் இருக்கிறாரோ தத்ர தத்ர அடிதடி இடம் பெறும். Never forsake the winnable formula.



• சாலமன் பாப்பையா

"குடும்பம்னா ஒற்றுமை எவ்ளோ முக்கியம்னு நம்பளுக்கு இந்தப்படம் சொல்து" என்று திவ்யா உன்னி

தவணை

நற்சான்றிதழ் நல்கினார். குழல் இனிது, யாழ் இனிது, அதையெல்லாம்விட திவ்யா உன்னியின் மழலைத் தமிழ் மகா இனிது!

விநாயக சதுர்த்தி என்ற சாக்கில் பல சிறப்பு (!) நிகழ்ச்சிகள் பல சேனல்களில் நடந்தன. அவற்றிற்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்று மூஷிக வாகனர் ஓர் அறிக்கை விட்டிருந்தால் நன்றாகயிருந்திருக்கும். விடவில்லை. People do not read statements except when they come from 'J' or 'K' என்பதை அறிந்த ஞானி அவர்!

எனினும், நூற்றுக்கு நூறு பொருத்தமான நிகழ்ச்சி ஒன்றும் இருந்தது. கொழுக்கட்டை செய்வது எப்படி என்று ஒரு பெண் மணி சமையல் குறிப்புக் கொடுத்ததுதான் அது. வெல்லத்தையும் தேங் காயையும் கலந்து 'பூரணம்' செய்து, உள்ளங் கையில் மேல் மாவை நைஸாகப் பரப்பி, பூரணத்தை அதன் நடுவே வைத்து மூடி, ஆவியில் வேகப் பண்ணினால்...! ஆ! பார்த்தாலே இனிப்பு.

ருசிகரம். மத்தியில் ஒரு பயங்கரம்.

"மாவு மூடிய கொழுக் கட்டையை உடனுக் குடன் வேக வைக்கா விட்டால் வெடிக்கும்'' என்றார் அம்மையார். ஒரு வினாடி உடம்பு நடுங்கியது - வெடிகுண்டு எங்கே வந்தது என்று. பிறகு புரிந்தது. மாவு உலர்ந்து போனால் மூடிய இடம் பிண்டுவிடும் என்பதைத்தான் அப்படிக் குறிப்பிட்டார் என்று.

நிமிர்ந்து நிற்கும் அளவுக்குக்கூட உயரமில்லாத குடிசை. இருவரேயாயினும் கூனிக் குறுகி எதிரெதிர் உட்கார்ந்து, தகரக் குவளையில் கஞ்சியோ கூழோ குடிக்கிறார்கள்.

"நச்சுக் கீரையைச் சமைத்துத் தின்றதால் பல பேர் இறந்து போகிறார்களே? ஏன் அதைச் சாப்பிடுகிறீர்கள்?'' என்று கேட்டதற்கு, ஒரு கிழவி, "செத்தால் செத்து விட்டுப் போகிறோம்! பசி வாட்டும்போது எதையாவது தின்றாகணும் இல்லையா?'' என்று பதிலளிக்கிறாள். என்ன கொடுமை!

ஒரிஸ்ஸாவில் நிகழும் பட்டினிச் சாவுகளைக் காட்டி, அதே சமயம், அரசு கிடங்குகளில் மூட்டைக்குமேல் மூட்டையாக வீணாகிக் கொண்டிருக்கும் உணவுக் கையிருப்பையும் காட்டியது ஸ்டார் நியூஸ்.

இந்த மயான அமைதி எத்தனை நாளைக்கு நீடிக்கும்? மார்ட்டின் லூதர் கிங் சொன்னதைப்போல, A riot is the language of the unheard.

வினோத்



* ஸ்ரீகாந்த்

முறையில் சாப்பாடு!

நடிகர் ஸ்ரீகாந்த்தின் அசல் பெயர் வெங்கடராமன் என்பது பழைய செய்தி. இவர் நடித்த ஒரு நாடகத்தின் கதாநாயகனுடைய பெயர் ஸ்ரீகாந்த். அதையே இவருக்கு டைரக்டர் ஸ்ரீதர் 'வெண்ணிற ஆடை'யில் சூட்டினார் என்பதும் பழைய நியூஸே. ஆகவே, ஜெயா பேட்டியில் என்னத்தைப் புதுசாய்ச் சொல்லப் போகிறார் என்றே முதலில் எண்ணத் தோன்றியது. ஆனால், There is nothing new under the sun என்பது தப்பான பழமொழி.

"நான் பத்தாவது வரையில்தான் படித்தேன். ஆனால் அமெரிக்க தூதரகத்தில் வேலை பார்த்தபோது, அமெரிக்காவுக்குப் போவதற்கான பரீட்சைகளை எப்படி எழுத வேண்டுமென்று பலருக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறேன்'' என்று ஸ்ரீகாந்த் சொன்னது புதிய தகவலாகவே இருந்தது.

இன்னொரு செய்தி : மத்திய அரசு அலுவலர்கள் நடிப்பதற்காக ஒரு நாடகம் தயாரிக்கப்பட்டபோது, அதை எழுதுவதற்கு ஓர் இடம் வேண்டும் என்று ஒருவர் இவரிடம் வந்து கேட்டார். இவர் தம் பிரம்மசாரி அறையில் இடம் கொடுத்தார். அவரும் தன் முதல் நாடகத்தை எழுதினார். அவர் பெயர் : கே. பாலசந்தர்.

ராசிக்கும் திறமைக்கும் தொடர்பில்லை!

முன்னணி நடிகர்கள் திடீரென்று காணாமல் போவதும், புதுமுகங்கள் ஓரிரவில் புகழ்பெறுவதும் தமிழ் சினிமா யதார்த்தம். இதை உடைத்துக் காட்டியவர் நடிகர் விக்ரம். மீரா படத்தில் ஒரு துடிப்புள்ள இளம் நாயகனாக அறிமுகமான இவர், 'ராசியில்லாத நடிகர்' என்ற கோடம்பாக்கத்து முத்திரையால் குத்துப்பட்டவர். ராசிக்கும் திறமைக்கும் தொடர்பில்லை என்பதை நிரூபித்துக்காட்ட, பத்தாண்டு காலம் போராடி, பாத்திரத்திற்காக தம்மை வருத்திக் கொண்டு, சேது படம் மூலம் ஜெயித்துக் காட்டியவர். 'தில்'லான தனது போராட்டத்தைத் திரும்பிப் பார்க்கிறார் விக்ரம்.

"நீ என்னவாகப் போகிறாய் என்று சிறுவயதில் என்னைப் பார்த்து, அம்மா, அப்பா கேட்டதுண்டு. அவர்களிடம் டாக்டர் என்று சொல்லுவேன். வேறு சில உறவினர்களிடம் எஞ்சினியர் என்றுச் சொல்லியிருக்கிறேன். ஆனால், நான் எட்டாம் வகுப்பை எட்டியபோது எனக்குள்ளிருந்த டாக்டரும், எஞ்சினியரும் வெளியேறிவிட்டார்கள். எனது துறுதுறுத்தனத்தைப் பார்த்துவிட்டு, மூன்றாம் வகுப்பு முதலே என்னைப் பள்ளி நாடகங்களில் பயன்படுத்திக் கொண்டார்கள். எட்டாம் வகுப்பு படித்தபோது நாடகத்திற்கு நானே ஹீரோ. அப்போதுதான் நடிப்பும், நடிகனாக வேண்டும் என்ற கனவும் என்னை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டன.

அதுவரை படிப்பில் முதல் ஐந்து மாணவர்களில் ஒருவனாக வந்து கொண்டிருந்த நான், வகுப்பிலேயே கனவு காணத் தொடங்கியதால் நாற்பதாவது மாணவனாக மாறினேன். டாக்டராகவோ, எஞ்சினியராகவோ ஆவதில் போராட்டம் குறைவாக இருக்கலாம். ஆனால் ஒரு வெற்றிகரமான நடிகன் ஆக வேண்டும் என்ற கனவு அத்தனைச் சீக்கிரம் நனவாகிவிடாது. அதற்கு மிகப் பெரிய தயாரிப்பு வேண்டும் என்று பயமுறுத்தினார்கள். படத்தின் ஹீரோ ஒரு ஃபுட்பால் சாம்பியன் என்றால், அதை ஏற்றுக் கொள்ளும் நடிகனுக்கும் முறையாக ஃபுட்பால் விளையாடத் தெரிந்திருக்க வேண்டும். நடிகன் எல்லாவற்றையும் கற்றுக்



கொண்டவனாக இருக்க வேண்டும். தனக்கு இது தெரியாதென்று அவன் சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் வாய்ப்பு கிடைக்காது என்று என்னைத் திசை திருப்ப நினைத்தார்கள். எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்பதுதான் ஒரு நடிகனின் தகுதியென்றால் அதற்குத் தயாராக வேண்டும் என்ற உத்வேகம் எனக்குள் பீறிட்டுக் கிளம்பியது.



பள்ளி விடுதியில் தங்கிப் படித்ததால், நிறைய கற்றுக் கொண்டேன்.

அங்கே நீச்சல், குத்துச் சண்டை, குதிரையேற்றம் என்று பழகினேன். பத்திற்கும் அதிகமான இசைக் கருவிகளை ஈடுபாட்டோடு வாசிக்கக் கற்றுக் கொண்டேன். நடிகனாக வேண்டும் என்கிற வெறி அதிகரித்துக் கொண்டேதான் இருந்தது. ஐஐடியில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தபோது, ஆண்டுவிழா நாடகத்தில் நான்தான் ஹீரோ. இருட்டில் தொடங்கி வெளிச்சத்தில் முடிவது போன்ற நாடகம் அது. ஐஐடியில் நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு நல்ல நாடகம் பார்த்தோம் என்று எல்லோரும் பாராட்டினார்கள். நடித்த எங்கள் எல்லோருக்கும் தலைகால் புரியாத சந்தோஷம். நாடகம் முடிந்து வரும் வழியிலேயே லாரிமோதி விபத்திற்கு உள்ளானேன். வலது கால் முழுவதும் நொறுங்கிவிட்டது. "இன்னும் கொஞ்சம் தாமதமாகக் கொண்டு வந்திருந்தாலும், காலையே வெட்டி எடுக்கும்படி ஆகியிருக்கும்" என்றார் டாக்டர். கால் இருக்கும். ஆனால் நடக்க முடியாது. ஸ்டிக் வைத்துதான் முயற்சி செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டார். அய்யோ! நான் நடிக்க வேண்டுமே என்று மருத்துவமனையிலேயே கதறினேன். சினிமா என்றால் ஓட வேண்டும், குதிக்க வேண்டும், படியேற வேண்டும், சண்டை செய்ய வேண்டும். ஆபரேஷனுக்குப் பிறகு காலை மடக்கவே முடியாது. பிறகு இதற்கெல்லாம் வாய்ப்பே இல்லை என்று டாக்டர் சொல்லிவிட்டார். ஆனால் நான் நம்பிக்கை இழக்கவில்லை.

மூன்று வருடம் மருத்துவமனையில் படுத்தபடுக்கையாக இருந்தேன். காலில் மொத்தம் இருபத்து மூன்று அறுவை

நடிகர் விக்ரம்

சிகிச்சைகள் செய்தார்கள். அப்படியும் ஒன்றும் பலனில்லை. வீட்டில் நான் ஒரு உயிருள்ள பொம்மை போல பாதுகாக்கப்பட்டேன். ஆனால் எனக்குள்ளிருந்த நடிகன் என்னைப் பார்த்து ஏளனமாய்ச் சிரிக்க ஆரம்பித்தான். நான் காலை ஆட்டி மெல்ல மெல்ல பயிற்சி செய்வது, வீட்டில் இருப்பவர்களுக்கு வலித்தது. வேண்டாம் என்றார்கள். நான் விடவில்லை.

நான் நடப்பேன் என்கிற மன உறுதியை எனக்கு கொடுத்தது 'மயூரி' திரைப் படம்தான். அதை அம்மா எனக்கு வீடியோவில் போட்டுக் காட்டினார்கள். அதைப் பார்த்து வெகுண்டு எழுந்த நான், "எனது காலை வெட்டி எடுத்துவிட்டால் சுதாச்சந்திரன் போல செயற்கை கால் பொருத்திக் கொண்டு ஜெயித்துக் காட்டுவேன். தயவு செய்து என் காலை வெட்டுங்கள்" என்றேன்.

"சினிமா மீது இத்தனை மரியாதை வைத்திருந்தால் ஒரு கேமராகாரனாகவோ, இயக்குனராகவோ போய்விடேன். ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாய்?" என்றார்கள். நான் விட வில்லை. இரண்டாண்டுகள் போராடி நடந்து காட்டினேன். "நீ நடப்பது ஆச்சர்யம்தான்! ஆனால் நடிப்பென்று இறங்கினால் மறுபடியும் ரிஸ்காகிவிடும்" என்று டாக்டர் எச்சரித்தார்.

நான் நடித்தேன். "வாழ்க்கையே போய்விட்டது என்ற நிலையில், சினிமா கனவு எல்லாம் தவிடு பொடியாகி இருக்க வேண்டும். ஆனால் நீ மறுபிறவி எடுத்து, உனது கனவை நனவாக்கியிருக்கிறாய்." என்றார்கள் நண்பர்கள்.

இயக்குனர் ஸ்ரீதர்தான் என்னை அறிமுகப்படுத்தினார் என்றாலும், விக்ரம் என்கிற நடிகன் நம்பிக்கையூட்டுகிறான் என்று நினைக்க வைத்த படம் மீரா. பி.சி.ஸ்ரீராம், விக்ரமன், பார்த்திபன் என்று தேர்ந்த இயக்குனர்களின் படங்களில் நடித்த போதும் அந்தப் படங்களின் தோல்வியையும், எனது ராசியையும் முடிச்சுப் போட்டது பற்றி நான் வருந்தவில்லை. நான் இராசியில்லாத நடிகன் என்றால், மலையாளத்திலும், தெலுங்கிலும் நான் நடித்த படங்கள் ஏன் வெற்றி பெற வேண்டும்?

> ***"கல்யாணத்தில் என்ன தகராறு?"***
> ***"மாப்பிள்ளை போலீஸ் காரராம். கல்யாணத்தை வீடியோ எடுக்கிறவரைப் பார்த்ததும் பழக்க தோஷத்துல அடிச்சு நொறுக்கிட்டாராம்."***
> ***- வடுவூர் சிவ. முரளி***

ஆதலால் ராசிக்கும் திறமைக்கும் தொடர்பில்லை என்று உறுதியாக இருந்தேன்.

அப்பாஸ், இல்லையென்றால் சூர்யா, அவரும் இல்லையென்றால் விக்னேஷ். அதற்கும் அப்பால் விக்ரமை கூப்பிடு என்று பிஸி நடிகர்களின் கால்ஷீட் கிடைக்காத போது ஸ்பேர் நடிகனாக என்னை அழைப்பார்கள். அந்தச் சூழ்நிலையிலும் நான் கண்மூடித்தனமாகப் படங்களை ஒப்புக் கொண்டதில்லை. வில்லனாகவோ, பாம்புப் படத்திலோ, பேய் படத்திலோ நடிக்க மறுத்திருக்கிறேன். பத்து வருட போராட்டத்தில் பெரிய ஹிட் கொடுக்காவிட்டாலும், பீல்டில் இருக்கிற ஒரு நடிகனாக என்னைத் தக்க வைத்துக் கொள்ள நிறையவே

போராடினேன். நேர்மையோடு போராடினேன்.

இந்தப் போராட்ட காலத்தில்தான் 'சேது' கதையை எனக்காகவே உருவாக்கியதுபோல இயக்குனர் 'பாலா' சொன்னார். எனது நடிப்புலக வாழ்க்கையை மாற்றி அமைக்கப் போகிற படம் என்று நான் அந்தக் கணமே முடிவு செய்தேன். 'சேது' பாத்திரத்திற்காக பட்டினி கிடந்து, உடலை வருத்தி, மொட்டையடித்து, கிட்டதட்ட ஒரு மனநோயாளியாக மாறினேன் என்று ரசிகர்கள் சொல்கிறார்கள். ஆனால் நான் பாத்திரத்துக்காக செய்த இந்த முயற்சிகளைத் தியாகம் என்று சொல்ல மாட்டேன். 'சேது' படம் முடிகிறவரை, கன்டிநூனிட்டி போய்



விடக் கூடாதே என்கிற கவலையில் இரண்டாண்டு காலம் எந்தப்படத்திலும் நடிக்காமல், பல்லைக் கடித்து கொண்டு இருந்தேன். 'சேது' என்னைக் கரை சேர்க்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. "ஒவ்வொரு படத்தின்போதும் இப்படித்தான் சொல்கிறீர்கள். இப்போது இந்தப் படத்திற்குப் பைத்தியக்காரன்போல பட்டினி கிடக்க வேண்டுமா?' என்று அம்மாவுக்குப் பதிலாக இப்போது மனைவி கேட்டாள்.

ஒரு வழியாகப் படம் முடிந்தது. விநியோகஸ்தர்களுக்கு அறுபத்து நான்கு ப்ரிவியூ காட்சிகள் திரையிட்டுக் காட்டினோம். ஆனால் படத்தை யாரும் வாங்க முன் வரவில்லை. படத்தைப் பார்த்த விநியோகஸ்தர்கள், "விக்ரமிற்குப் பதிலாக அஜீத்தையோ விஜய்யையோ போட்டு எடுத்திருந்தால் படம் பிச்சக்குமே" என்று 'பரணி' பாடினார்கள்.

மனைவி கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள், "உனக்குத்தான் மல்டி மீடியா தெரியுமே, எனக்குத் தெரிந்த நண்பர்களிடம் சொல்லி விட்டேன். இன்னும் ஆறு மாதத்திற்குள் சேது படம் வராவிட்டால் நாம் அமெரிக்கா போய்ச் செட்டிலாகிறோம்" என்றாள். படம் வெளியானது. பத்து நாட்களுக்குப் பிறகு தியேட்டர்களில் ரசிகர்கள் வெள்ளம். எனக்குள் இருந்த நடிகனை முழுமையாக வெளிப்படுத்திய இயக்குனர் பாலாவுக்கு வெற்றி கிடைத்தது. நடிகன் விக்ரமுக்கும்தான்.

எந்தத் துறையென்றாலும், தோல்விகள் உண்டு. தோல்விகள் நம் தோழன். தோல்விகளில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது தொழில் சுத்தம். செய்யும் தொழிலில் பர்பெக்ஷன் தேவை. ஒரு நடிகனாக நான் உணர்ந்து கொண்டது 'நடிக்கிறோம் என்று தெரியாதபடி' நடிக்க முயற்சி செய்கிறேன். கதாபாத்திரத்திற்காக என்னை மாற்றிக் கொள்கிறேன். அல்லது பாத்திரமாகவே மாறிவிட வேண்டும் என்று விரும்புகிறேன். எனது வெற்றியின் சூத்திரம் இது வாகவும் இருக்கலாம்.

- சந்திப்பு : **ஜெயந்தன்**

ஆறு வருடங்களாகப் பழைய புத்தகங்களை வைத்துக் கொண்டே, பாடம் நடத்திக் கொண்டிருந்திருக்கிறார்கள், இங்குள்ள தமிழ் முனிசிபல் பள்ளிகளில்! இந்த வருடம் தான் இவர்களுக்குப் "போகி"- பழையன கழிந்து புதியன புகுந்திருக்கின்றனவே?

சுதந்தர தினத்தையொட்டி, மாதுங்காவில் நடந்த இந்தப் புத்தக வெளியீட்டு விழாவில், புதுப்புத்தக வாசனையை நுகர்வதற்குள் அவர்கள் பட்ட பாட்டை-ப்யூனிலிருந்து பெரிய அதிகாரிவரைப் பந்தாடிய கண்ணீர்க் கதையை, வேதனையுடன் விவரித்தார், இவ்வாண்டு தம் முயற்சியில் வெற்றிபெற்ற, தென்னிந்திய மொழிப் பள்ளிகளின் சூப்ரின்டென்டென்ட் சாம்பவி ஜோகி. "கன்னடத்திற்கும் தெலுங்கிற்கும் இங்கேயே புத்தகங்கள் பிரிண்ட் ஆகும் போது, தமிழுக்கு மட்டும் ஏன் இந்த ஓரவஞ்சனை? என்று கொதித்தெழுந்தவர், தெலுங்கு பீட அதிகாரி மல்லிகார்ஜுன்! மராத்திய அரசைக் கேட்டால், இங்கே போதிய தமிழர்கள் இல்லை என்கிறதாம் விழாவுக்கு வந்திருந்த தமிழ் இயக்கங்களையும், நல்லிதயங்களையும் குரல் கொடுக்கச் சொன்னார்கள். மராத்தியத் தமிழர்களே... எல்லோருமாகக் குரல் உயர்த்துங்களேன். விழாத் தலைவர், காங்.கார்ப்பொரேட்டர் ரவி ராஜா (உடனேயே கிளம்ப வேண்டிய நிர்பந்தம்), சீஃப் செகரட்டரி ரங்கநாதன் போன்ற தமிழர்களின் காதுகளில் விழாமலா போகும்?

காதில் விழுந்தாலும் விழாதது போல் பாவ்லா செய்பவர்களும் உண்டு- உதாரணத்துக்கு, முன்னாள் அஸ்ஸாம் சி.எம்., பிரபுல்ல குமார் மஹாந்தா! அசெம்ப்ளி செகரட்டேரியட்டில் வேலை செய்யும் சங்கமித்ரா பராலியை, 'கப்சாப்'பாக, அந்தேரியிலுள்ள விக்னேஷ்வர் கணேஷ் மந்திரில், இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டு பிரபல ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் மூன்று நாள் தங்கியிருக் கிறார். தேர்தலில் வென்றால், மும்பையிலுள்ள 'அஸ்ஸாம் பவனி'ன் பொறுப்பைப் பராலியிடம் ஒப்படைப்பதாக வாக்குறுதி வேறு அளித்திருக்கிறார். அரசியல்வாதியின் வாக்குறுதிதானே? கோவிந்தாவாகி விட்டது! மோகம் மூன்றே நாளில் முற்றுப்பெற மனிதர் கம்பி நீட்டிவிட்டார். "கல்யாணமா? எனக்கா? பராலியுடனா?" என்கிறார். பராலியிடமோ திருமணத் துக்கான சாட்சி எதுவுமில்லை! ஏதோ அந்தேரி யிலுள்ள ஒரு ஃப்ளாட்டை, மஹாந்தா, பராலியின் பெயரில் மாற்றி யிருக்கிறார். கிடைத்தவரை லாபம் என்றில்லாமல், பராலி இப்போது பத்திரிகையாளர் களை நோக்கிப் படை யெடுத்துக் கொண்டிருக் கிறார். இத்தனைக்கும் இவருக்கும் இது இரண்டாம் திருமணம்தான்! ஏற்கெனவே ஒருவரைத் திருமணம் செய்து கொண்டு ஒரு குழந்தையும் இருக்கிறது!

இன்னொரு

இன்னொரு மனைவி, இன்னொருகார், இன் னொரு வீடு... இப்படி அதிகப்படியான எதைக்



மும்பை மசாலா



• ஸ்மிதா



• மஹாநந்தா



• பூட்டாசிங்

மனைவி, கார்; ஜூட்!

கண்டாலுமே அலர்ஜியாகிவிட்டது எங்கள் சி.எம்முக்கு! அரசு வேலையிலிருக்கும் அதிகப்படி ஊழியர்களைப் (பத்து வருஷம் சர்வீஸ் இருந்தால்), பொற்கைக் குலுக்கலுடன் வி.ஆர்.எஸ். வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். இனி புதிய 'போஸ்ட்டு'கள் எதுவும் கிடையாதாம்; மந்திரிகளெல்லாம் 'எகானமி கிளாசில்'தான் பயணிக்க வேண்டுமாம், உதவியாளர்களுக்கு ஓசிப் பயணம் கிடையாதாம்; இரண்டுமாத ஃபோன் பில் ரூ. 65,000க்கு மேற்படக் கூடாதாம்! பழைய கார்கள் எதையாவது விற்றால்தான் இனி புதுக் கார்களை வாங்க முடியுமாம்! காருக்குப் பதில் பைக்கையோ, ஜீப்பையோ, ரயிலையோ உபயோகிக்க வேண்டுமாம்! காலியான கஜானாவை எப்படியாவது சிணுங்க வைக்க வேண்டும் என்று முயற்சி செய்கிறார் விலாஸ்ராவ்!

வேண்டாத செலவையும் செய்துவிட்டு, அதை நியாயப்படுத்தவும் சிலரால்தான் முடியும். சர்தாருக்கல்லாமல் வேறு யாருக்கு அந்த 'தில்' இருக்கும்? முன்னாள் யூனியன் மினிஸ்டர் பூடா சிங்கைத் தான் சொல்கிறோம். அண்மையில் மும்பை வந்திருந்த அவர், முன்பு நரசிம்மராவ் அரசைக் காப்பாற்றுவதற்கென்று எம்.பிக்களை விலை கொடுத்து வாங்கினாரே, அதைத் தப்பேயில்லை என்று அடித்துச் சொல்லிவிட்டார். "நாட்டு நலனுக்காக, நாட்டைக் காப்பாற்றுவதற்காக அப்போது செய்தேன்... எப்போதும் செய்வேன்" என்று போட்டாரே ஒரு போடு!

வரவர நாட்டு நலனில் அக்கறை கொண்ட அரசியல்வாதிகள் பெருகிக் கொண்டே வருகிறார்களே... தாக்கரேவைப் பாருங்களேன்... "தனிக் கட்சியாக நிற்க முடியும். இருந்தாலும் நாட்டு நலனுக்காகத்தான் தேஜகூவை ஆதரித்துக் கொண்டு, பா.ஜ.கவைக் கட்டிக் கொண்டு மாரடிக்கிறேன்" என்கிறாரே! 'பவாருடன் ஜூட்டா?' என்றாலே கொதிக்கிறார். வெங்காய மூட்டை என்று இவரால் கிண்டலடிக்கப்பட்டவருடன் ஜோடி சேர்ந்தால், இவரை உருளைக் கிழங்கு மூட்டை என்று சொல்ல மாட்டார்களா?

மூட்டை மூட்டையாக கரன்சியை பிறந்த நாள் பரிசாக எதிர்பார்க்கும் வர்க்கத்திடையே, மூட்டை மூட்டையாக அன்பைப் பகிர்ந்து கொள்பவர்களும் இருப்பார்கள் போலும். தாக்கரேயின் மருமகள் ஸ்மிதாவை எடுத்துக் கொள்ளுங்கள். தம் பிறந்த நாளையொட்டி 'எய்ட்ஸ்' குழந்தைகள், பார்வையற்றோர், செவி கேளார் ஆகியோருக்கான விடுதிகள், மருத்துவமனைகளைத் தேடிச் சென்று இனிப்பும் அன்பளிப்பும் விநியோகித்திருக்கிறார். கேட்பதற்கு நன்றாகத்தானிருக்கிறது.

கேட்பதற்கு இனிமையான விஷயங்களில் தலையாயது இசை; அதுவும் நம் ரஹ்மானும் மைக்கேல் ஜாக்சனும் சேர்ந்து கான மழை பொழிகிறார்கள் என்றால் கேட்கவும் வேண்டுமா? 'ஏகம் சத்யம்' என்ற டூயட்டில் ஒரு பாதி சமஸ்க்ருதம்; ஒரு பாதி ஆங்கிலம்; முன்னதை ஏ.ஆர். பார்த்தசாரதி இயற்ற, ரஹ்மான் பாடியுள்ளார். பின்னதை கனிகா மையர் பரத் இயற்ற, எம்.ஜே. குரல் கொடுத்துள்ளார். சூப்பர் டூயட்தான்!

— ஜெயஸ்ரீ ராஜ்

'பக்'கென்ற உண்மை!



✉ பெட்டி படுக்கையுடன் கூட்டணியிலிருந்து வெளியேறத்தயாராய் உள்ள பால் தாக்கரேயின் நிலையையும் கூட்டணியில் சேரத் துடிக்கும் பா.ம.க. ராமதாஸின் நிலையையும் விளக்கிய கார்ட்டூன் அருமை!

போடிநாயக்கனூர்,
எஸ். எம். பாலசுப்ரமணியன்.

✉ 'நள்ளிரவில் கொடி' எனும் கட்டுரை படித்தேன். சுதந்திரப்போராட்ட வீரர்கள்-தியாகிகள் வி. சுப்பையா, ஆர்யா, மௌலானா சாகிப், மாவீரன் புலித்தேவன் ஆகியோரின் தணியாத சுதந்திரதாகத்தை, நமது இளையதலைமுறையினருக்கு எடுத்துரைக்கும் பணியில் 'கல்கி'யின் பங்கு சிரானது; சிறப்பானது; வாழ்த்துகள்!

நெல்லை, இ.க. சிவசங்கரன்

✉ செயல்படாத அமைச்சர்கள் ஒரு டஜன் பேருக்குக் கல்தா என்று காதில் விழுந்தவையில் போட்டு விட்டீர்கள்; எத்தனை அமைச்சர்கள் இதைப் பார்த்து வயிற்றில் புளியையும், இரவு தூக்கத்தையும் தொலைத்தனரோ?

நெய்வேலி, சாந்தி சுந்தர்.

✉ வாழும் கல்கி சுதாபாத்திரங்களைப் பேட்டிகண்டு, அவர்களுடையத் தனித் திறமை மற்றும் பெயர்க் காரணம் போன்றவற்றை வெளியிடுவது நல்ல முயற்சி.

சின்மயாநகர்,
என். ரஜினி

✉ 'தண்ணீர் விட்டோ வளர்த்தோம்...?' தலையங்கம் படித்தேன். ஏர்வாடி சம்பவத்தைப் பற்றிய கல்கியின் கருத்துக்களை அப்படியே வழிமொழிகிறேன். ஏர்வாடி மன நோயாளிகளின் மரணம் நமக்கு எந்த மாதிரியான விழிப்புணர்வைத் தந்திருக்கிறது? இச்சம்பவத்திலிருந்து நாம் கற்றுக் கொண்ட வாழ்க்கை, சமுதாயப்பாடம் தான் என்ன? ஒரு பிரச்னையின் தீவிரத்தை அமுக்க, மற்றொரு பிரச்னை கிளம்பி விடுகிறது. இது சமீபகால தொடர்கதை. இது இப்படியே போனால், நாட்டை முன்னேற்றப்பாதைக்கு எவராலும் அழைத்துப் போக முடியாது!

மொரட்டுப்பாளையம்,
விஜயஸ்ரீ இராஜேஸ்வரன்

✉ எதையும் அரை குறையாகத் தெரிந்து கொண்டு செயல்படுவது ஆபத்து மட்டுமல்ல; பெயரும் கெட்டுப்போகும் என்பதை அழகாகச் சுட்டிக் காட்டிய கட்டுரை 'ஃபேக்ஸில் தயிர்சாதம்.'

திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்

✉ "மௌனங்கள்" கவிதையை படித்து விட்டு எப்படி மௌனமாய் இருப்பது? அசத்தல் கவிதை!

திண்டுக்கல், செ. ரா. ரவி.

✉ கிரெடிட் கார்டு, பேஜர், செல்ஃபோன், இண்டர்நெட், இ-மெயில் என்று எவ்வளவு நுணுக்கமாக உலகம் முன்னேறி விட்டது. இல்லை மனிதன் முன்னேறி விட்டான். சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் லலிதா வெங்கடேஷின் கடைசி வரிகள் மனிதன் இயற்கையுடன் போட்டியிட முடியாது அதை உருவாக்கவும் முடியாது என்ற உண்மையை 'பக்'கென்று உணர்த்தியது!

சாத்தூர்,
செ. சரவணக்குமார்

வட்டமேஜை

டூ-வீலர் ஒன்றை வாங்கிக் கொள்ளலாமா என்ற எண்ணம் எழுந்தது சிவப்ரியாவுக்கு. இதே யோசனையை டாக்டர் ராம்ஷேகர், முன்பு வெளியிட்டபோது மறுத்துவிட்டாள். "என்ன டாக்டர் பெரிய தூரம், வீட்டிலேயிருந்து கிளம்பினால் அரை மணி நேரத்திலே க்ளினிக்கிலே இருக்கப் போறேன். நடந்தா நல்லதுதானே'

ஆனால் சிவப்ரியாவின் நடைக்கு மற்றொரு காரணமும் இருந்தது. தன்னைச் சுற்றியிருக்கும் சந்திரவட்டம் அழிய வேண்டும். அதற்கு நடந்துபோவது உதவும். ஒரு விதத்தில் அவளது நோக்கம் கைகூடியது என்றே சொல்ல வேண்டும்.

முதல்நாள் அவள் நடந்தே கிளினிக்கிற்குச் சென்றபோது பலரும் அங்கங்கே சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து அவளையே உற்றுப் பார்த்து விமரிசித்துக் கொண்டிருந்தனர். ஒரு கதாநாயகி நடந்து செல்வது என்பது அவர்களைப் பொறுத்தவரை ஒரு விந்தை. சிலர் நேரிடையாகவே அவளிடம் ஓரிரு கேள்விகளைக் கேட்டனர். "ஏம்மா சினிமாவிலே தொடர்ந்து நடிக்கல்லே.

அருண் சரண்யா

21

சூப்பர் ஸ்டார்கூட ஒரு படத்திலே நடிக்கலாமே! லண்டனிலே ரொம்ப குளிரா?"

அவள் பதிலளிக்காமல் சிறு புன்னகையுடன் நகர்ந்தாள். "கர்வி, தலைக்கனம் பிடித்தவள்!" என்று முடிவெடுக்க முடியாதபடி அமைந்தது அந்த சிநேகப் புன்னகை.

நாளாக நாளாக அவள் ஒரு சிறந்த மருத்துவர் என்ற பெயர் எப்படியோ கசிய, அவள் மீது அந்தப் பகுதி மக்கள் கொண்ட மதிப்பு உயர்ந்தது. மதிப்பீடு மாறியது. 'டாக்டராக வேலை செய்யும் நடிகை' என்பதிலிருந்து 'ஒரு திரைப்படத்தில் தலை காட்டிய டாக்டரம்மா' என்று குறிப்பிடப் பட்டாள்.

தினமும் அவள் நடந்து வரத் தொடங்கியதில், நாளடைவில் அவளை நின்று பார்ப்பவர்களின் எண்ணிக்கை குறைந்தது. அவள் ஒரு சகஜமான பெண்மணியானாள்.

என்றாலும் அதிகாலையில் அனு க்ளினிக்கில் அறுவை சிகிச்சைகள் நடக்கும்போது சிவப்ரியாவின் உதவி இன்றியமையாததாகிவிடுகிறது. அந்த நேரங்களில் ஒரு டூவீலர் இருந்தால் வேகமாக க்ளினிக்கை அடைய முடியும் என்பதோடு, நடைக்குப் பிறகு ஏற்படும் தற்காலிக சோர்வையும் நீக்கிவிட்டுப் புத்துணர்வு கலையாமல் க்ளினிக்கில் காலெடுத்து வைக்கலாம்.


யோசித்தபடியே நடையின் வேகத்தை அவள் கூட்டியபோதுதான் சற்றுத் தொலைவில் தெரிந்த சிறு செந்நிறப்புள்ளி அகன்று பரவ, கூக்குரல்கள் பலவாகி காதுகளைத் தாக்கின. சட்டென்று புரிந்தது சிவப்ரியாவுக்கு. க்ளினிக் இருந்த இடத்திற்கு மேற்குப் பகுதியில் அமைந்திருந்த குப்பத்தில் தீ விபத்து! வேகமாக நடந்தாலும் இன்னும் ஐந்து நிமிடங்களாவது ஆகும் அந்த இடத்தை அடைய என்ற நிலையில், சட்டென்று அருகிலிருந்த பொதுத் தொலைபேசியின் மூலம் தீயணைப்பு நிலையத்துக்குத் தகவல் தெரிவித்தாள்.



அடுத்து வந்த காரைக் கைநீட்டி நிறுத்தினாள். டாக்டர் ஆனந்த் வியப்புடன் காரை நிறுத்தினான். இதற்கு முன்பு ஓரிரு சமயங்களில் காரை அவள்புறமாக நிறுத்திய

போது அவள் உறுதியாக மறுத்திருக்கிறாள். 'நீங்க ஒரு டாக்டர். வாக்கிங்கின் அருமை உங்களுக்கே தெரிஞ்சிருக்கணும்' என்ற முத்தாய்ப்பு வாசகம் வேறு உதிரும் அவளிடமிருந்து. இப்போது தானாக லிஃப்ட் கேட்கிறாள்.

காரில் ஏறிக்கொண்டு தீத்திசையை ஆனந்துக்குச் சுட்டிக்காட்டினாள். காரின் வேகம் கூடியது.



மனம் மனமறிய ஆவல்

சிவப்ரியாவின் வேகமும் திறமையும் அந்தக் குப்பத்து மக்களின் நன்றியை ஈட்டியது பெரிய விஷயமல்ல. ஆனால் சக டாக்டர்களே வியந்தனர். அவர்களில் பலரும் மருத்துவத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள் என்றாலும் மிகச் சுத்தமான சூழ்நிலையில், தேவைப்படும் எல்லா மருத்துவக் கருவிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை அளித்தே பழக்கப்பட்டவர்கள்.

இங்கோ ஒழுங்குமுறை என்பது சிறிதும் இல்லை. மேடுபள்ளமான தரைப்பகுதி. கீழே பார்க்காமல் காலை வைத்தால் விழும் வாய்ப்பு அதிகம். போதாக்குறைக்கு இடித்துத் தள்ளிக்கொண்டு தங்களுக்கு வேண்டியவர்களையும், தங்கள் அற்ப உடைமைகளையும் காக்க வேண்டி அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருக்கும் கூட்டம். முதலுதவிப் பொருள்கள்கூட வெகு சீக்கிரம் தீர்ந்து கொண்டிருந்தன.

ஆனந்தின் மூலம் அனு க்ளினிக்கில் உள்ள ஆறு டாக்டர்களையும், எட்டு நர்ஸ்களையும் வரவழைத்திருக்கிறாள் சிவப்ரியா. அத்தனை பேரும் பரபரப்பாகச் செயல்பட்டனர்.

கோகிலவாணி மட்டும் முணுமுணுத்தாள். ''க்ளினிக் நேரத்திலே பெரிய டாக்டரின் அனுமதி இல்லாம இப்படி வரலாமா?''

சிவப்ரியா உடனடியாக பதிலளித்தாள். ''டாக்டர் ராம்ஷேகர் இப்போ ஆபரேஷன் தியேட்டரிலே பிஸியா இருக்கார். வெளியே வர இரண்டு மணி நேரமாகும். ஆபத்துக்கு உதவுவதுதான் மருத்துவர்களின் கடமை!''

இதை ஆனந்த் உட்படப் பிற மருத்துவர்கள் ஒப்புக் கொண்டாலும் வேறொரு விஷயத்தில் வேறுபட்டனர். க்ளினிக்கில் உள்ள விலை உயர்ந்த மருந்துகளையெல்லாம் சிவப்ரியா தடையின்றி குப்பத்தில் தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பயன்படுத்தியது குறித்து அந்த வேறுபாடு.


'முதலுதவி செய்தாச்சு. அரசு மருத்துவமனைக்கு இவங்களை அனுப்பிச்சிடலாமே'' என்றார் டாக்டர் முகர்ஜி.

''உயிருக்குப் போராடிக்கிட்டு இருக்காங்க சில பேர். அவங்களுக்கு உடனடி சிகிச்சை தேவை டாக்டர். இவங்க அரசு மருத்துவமனைக்குப் போய்ச் சேர அரை மணி நேரம் ஆகும். கவலைப்படாதீங்க. டாக்டர் ராம்ஷேகரை இதற்குச் சம்மதிக்கும் பொறுப்பை நான் ஏத்துக்கிறேன். நான் சொல்றேன்.''

பதற்றமான சூழலையும் சிவப்ரியா சிக்கலின்றிக் கையாண்டது பலரையும் பாராட்ட வைத்தது. யார் யார் எந்தப் பகுதியில் மருத்துவம் செய்ய வேண்டும். சின்ன காயத்திற்கு யார் மருந்திடுவது? நடக்கவே முடியாதவர்களுக்கு யார் எப்படிச் சிகிச்சை

செய்வது? என்றெல்லாம் உடனடியாக ஒரு திட்டத்தை அறிவித்துச் செயல்பட்டாள். சூழலின் தீவிரத்தைப் புரிந்து கொண்ட மருத்துவக் குழு உடனடியாக அதை ஏற்றுச் செயல்பட்டது.,

ஒருபுறம் தீயுடன் தீயணைப்புப் பகுதியினர் போராடிக் கொண்டிருக்க, மறுபுறத்தில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. தொடர்ந்து சிவப்ரியா விரைவாகச் செயல்பட்டாள். அந்தப் பகுதியைச் சேர்ந்த சில இளைஞர்களையும் தனக்குத் திடீர் உதவியாளர்களாக நியமித்துக் கொண்டாள். நர்ஸ்"களே டாக்டர்கள் போலச் செயல்பட வேண்டிய சூழலில், இந்தத் திடீர் ஏற்பாடு தேவைப்பட்டது.



மனித முயற்சிகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டதில் சில உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது. பலரது தீக்காயங்களின் பாதிப்பை மட்டுப்படுத்த முடிந்தது.

சிவப்ரியாவின் உடலில் சோர்வு தெரிந்தாலும் அவள் முகத்தில் அதையும் மீறிய திருப்தி தெரிந்தது.

டாக்டர் ராம்ஷேகர் அவளையும், மருத்துவக் குழுவையும் பாராட்டிவிட்டார். ''நல்ல காரியம். உடனடியாகச் செயல்பட்டது பாராட்ட வேண்டிய செயல்.''

''தவிர அனு க்ளினிக்கிற்கு இதனால் இமேஜ் உயர்ந்தது'' என்ற வார்த்தையைக் கஷ்டப்பட்டு உள்ளுக்குள் விழுங்கினார்.

ஆனால் அதைச் சிவப்ரியாவால் உணர முடிந்தது. தனது வழிகாட்டியாக விளங்கியவரின் மருத்துவமனைக்கு நல்ல பெயர் கிடைத்ததற்குத் தானும் ஒரு சிறு காரணமாகிவிட்டோம் என்ற எண்ணமே உவகை அளித்தது.

''என்ன சிவப்ரியா, ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க போல'' என்றபடியே ஆனந்த் அவளருகே வந்து அமர்ந்தான். அவனது மனத்தில் அவள் குறித்து ஏற்பட்டிருந்த வெறுப்பு இப்போது சுத்தமாக மறைந்து விட்டிருந்தது.

''மிக அற்புதமாகச் செயல்பட்டீங்க'' என்றான் மனப்பூர்வமாக.

அது ஒரு பெரிய விஷயமல்ல என்பது போல் தலையை ஆட்டிக்கொண்ட சிவப்ரியா, சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு 'இந்தத் தீ விபத்து ஒரு உண்மையை உங்களுக்குச் சுட்டிக் காட்டல்லையா ஆனந்த்?'' என்றாள்.

எதை? அவனுக்குப் புரியவில்லை. 'நிலையாமையை' என்று சிவப்ரியா குறிப்பிட்ட போதும் அதை மறுத்தான்.

''மாறாக நிலைத்த தன்மையைத்தான் உணர்த்தியது. சாக இருந்த சில பேரை நாம் காப்பாற்றி இருக்கிறோமே!''

''அதில்லை ஆனந்த். பத்தே நிமிடங்களிலே எவ்வளவு பேர் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டுவிட்டது அந்தத் தீ விபத்து! நம் முயற்சிகளையும் மீறி எட்டு உயிர்களைக் காவு வாங்கியிருக்கு அந்த விபத்து. நாம எல்லாருமே இறப்புன்றதை நோக்கி மெல்ல மெல்ல அடியெடுத்து வச்சுக்கிட்டிருக்கோம். இதைத்தான் அந்த விபத்து தெரிவிக்கிற மாதிரி இருக்கு.''

''என்ன சொல்றீங்க? இப்படியெல்லாம் யோசிச்சுக்கிட்டிருந்தால் உயிர் போகும் நிலையிலே வரும் நோயாளிகளுக்கெல்லாம் நாம சிகிச்சையே அளிக்க வேணாமே. இன்னைக்கு இல்லேன்னா நாளைக்குப் போகப் போற உயிர்தானேன்னு சும்மா விட்டுடலாமா?''

''அது வேற ஆனந்த். நம்மாலே முடிஞ்ச எல்லா முயற்சிகளையும் செய்துதான் ஆகணும். அது நம்ம கடமை. அதுக்காகத்தான் இந்தத் துறைக்கு வந்திருக்கோம். ஆனால் அதேசமயம் இந்தத் துறையிலே இருக்கும் நமக்கு மத்தவங்களைவிட அதிகம் நிச்சயமாகத் தெரிஞ்சிருக்கணும், வாழ்க்கைன்றது நிரந்தரம் இல்லைன்றதும், வாழும் வரை அதைச் சிக்கலில்லாமல், பிறரைப் புண்படுத்தாமல் அனுபவிக்கணும்கிறதும்...''

எதற்கோ அடிபோடுகிறாள் சிவப்ரியா என்று புரிந்தாலும் திட்டவட்டமாக யூகிக்க முடியவில்லை ஆனந்தால்.

''உஷா எப்படி இருக்காங்க?'' என்று அடுத்து சிவப்ரியா கேட்ட கேள்வி சிவப்ரியா தொடவரும் விஷயத்தைத் தெளிவுபடுத்தியது.

''நல்லாயிருக்கான்னு சொல்ல முடியாது. ஏகப்பட்ட வியாதிகள் அவளுக்கு. ஏதோ

ஒரு வேகத்திலே எடுத்த முடிவு. இப்போ தினசரி ஏமாற்றமாயிருக்கு.''

சிவப்ரியாவுக்குப் புரிந்தது. தன்னை அவன் குற்றம் சாட்டுகிறான்.

''ஓகே ஆனந்த், ஒரு நோயாளியோடு வாழ்க்கை நடத்துவது கஷ்டம்தான்.''

இவ்வளவு வெளிப்படையாக சிவப்ரியா இதை ஒப்புக் கொள்வாள் என்பதை ஆனந்த் எதிர்பார்க்கவில்லை.

''ஒரு விதத்தில் இதைத் தியாகம்னே சொல்லலாம்'' என்று தொடர்ந்தவளைப் பெருமையுடன் பார்த்தான்.

''இப்படி ஒரு தியாகம் செய்துக்கிட்டிருக்கும் உன் மனைவியை நீ புரிஞ்சுக்க வேண்டாமா?''

புரியாமல் திகைத்தான் ஆனந்த். உஷா தியாகியா? அவள் ஒரு நோயாளியோடு வாழ்க்கை நடத்துகிறாளா? என்ன உளறுகிறாள் இவள்?

''நீங்க ஒரு நோயாளின்னு சொல்றேன் ஆனந்த். மனநோயாளி. ஒரு மனநோயாளியோடு வாழ்க்கை நடத்துவதுதான் ரொம்ப சிக்கல்.''

''என்ன சொல்றீங்க சிவப்ரியா?'' என்று சற்றே உரத்த குரலில் அவன் கேட்டான். நல்லவேளை அருகில் யாருமில்லை.

''மாற்றிக் கொள்வது தப்பில்லேன்னு சொல்றேன். நிதர்சனத்தை உணரணும்னு சொல்றேன். என்னை மனசிலே நினைச்சுக்கிட்டே உஷாவை அணுகக் கூடாதுன்றேன். அவளுக்குச் சில வியாதிகள் இருப்பதைச் சாக்காக வச்சுக்கிட்டு விலகக் கூடாதுன்றேன். நீங்க ஒரு டாக்டர். அப்படி இருக்கும்போது நோய்களைச் சவாலாகத்தான் ஏற்கணுமே தவிர, பிரச்னையா எடுத்துக்கக் கூடாது.''

''என்னால் பச்சோந்தியாக இருக்க முடியவில்லை'' என்றான் ஆனந்த் சட்டென்று.

'கொஞ்சம் பொறுத்திருந்து விட்டுப் பிறகு தாக்குதலைத் தொடருங்கள்' என்பதுபோல் புன்னகை செய்தாள் சிவப்ரியா. ''ஒரு காலத்தில் என்னை ஷிவ்னுதான் கூப்பிடுவீங்க. இப்ப டாக்டர்னு கூப்பிடறீங்க. நீங்கன்னுதான் சொல்றீங்க. இதையெல்லாம் மாத்திக்க முடிஞ்ச உங்களாலே 'உஷாவைப் புரிஞ்சுக்கிட்டு அன்பு செலுத்த முடியும்' தீர்மானிச்சால் அதையும் செய்ய முடியும்''

சிறிது அமைதியாக இருந்த ஆனந்த் ''உன் மனசிலே இப்போ நானில்லையா? நாம் காதலிச்ச நாட்களைப் பற்றி உன் மனசு அடிக்கடி நினைச்சுப் பார்க்கல்லியா?''

ஒரு சின்ன குழப்பம். சட்டென்று மாறும் முகபாவம். வேறெங்கோ பார்வையை வீசுதல். வார்த்தைகளில் சிறு தடுமாற்றம். இவற்றை எதிர்பார்த்தான் ஆனந்த். ஆனால் ஒட்டுமொத்தமாக அவனை ஏமாற்றினாள் சிவப்ரியா.

''நிச்சயம் இல்லே ஆனந்த். மருத்துவத்தைத் தவிர வேறெதிலுமே என் கவனம் போவதில்லை.''

ஆனந்தின் நினைவுகள் அப்படியே புரட்டிப் போடப்பட்டன. கல்மனக்காரி என்றோ துரோகி என்றோ அவளை ஒதுக்க மனம் வரவில்லை. தீவிபத்தின் போது அவள் செயல்பட்ட விதம் அவள்மீது தனி மரியாதையை ஏற்படுத்தியிருந்தது. இவள் தனக்கு மட்டுமல்ல எந்தத் தனிநபருக்குமே சொந்தமானவள் அல்ல என்ற உறுதியை உண்டாக்கியிருந்தது அந்த நிகழ்ச்சி. அவளை இழந்ததற்காக வருத்தப்படக் கூடாது என்ற எண்ணம் அப்போதே ஏற்பட்டிருந்தது.

''உங்கள் மனைவியை அவங்க கோணத்திலேயிருந்து பார்க்க முயற்சி செய்யுங்களேன். ஆல் தி பெஸ்ட்.''

''ஓகே. கொஞ்சம் டைம் கொடுங்க'' என்ற ஆனந்த், 'நீங்க எப்போ கல்யாணம் செய்துக்கப் போறீங்க?'' என்றான்.

''அது பற்றி எந்த எண்ணமுமே யில்லை ஆனந்த். என் வாழ்க்கையில் கல்யாணம் என்பதே இல்லேன்னாலும் ஆச்சரியப் படறதுக்கில்லே. என் லட்சியம் என்னன்னுதான் உங்களுக்குத் தெரியுமே.''

''சந்தேகமில்லலாமல் நீங்க ஜெயிப்பீங்க. அட்வான்ஸ் வாழ்த்துக்கள்.''

சிவப்ரியாவின் மனத்தில் ஏற்கெனவே இருந்த தெளிவுடன் இப்போது நிறைவும் சேர்ந்து கொண்டது. ஆனந்தின் மனத்தில் அந்த இரண்டும் வேர்விடத் தொடங்கியிருந்தன.

(தொடரும்)

''என்னப்பா... தேங்காய் என்ன விலை.... மூணு பத்து ரூபாயா?''

''இது தேங்காய் இல்ல ... நாட்டு வெடிகுண்டு... நாலு பத்து ரூபாய்!''

— புளியரை கணேசன்

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்®

அறிமுகப்படுத்தும்

கல்யாண சீர்பலகாரங்கள்



எல்லா சீர்பலகாரங்களையும் வகைக்கு ஒன்றாக வைத்து அதற்காகவே வடிவமைக்கப்பட்ட அழகிய சீர்பலகார பெட்டிகளில் வழங்குகிறோம்.

பரிசளிக்க, சீர்வரிசைக்கு புதுமையானவை.

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்®

பாண்டி பஜார், சென்னை, போன் : 4312345
காந்தி நகர் முதல் மெயின் ரோடு, அடையார், சென்னை, போன் : 4413805
அண்ணா நகர், சென்னை, போன் : 6192345

DIMENSIONS




14 வயதில் பட்டம்!

ஆப்ரிக்காவில் மிகவும் வறுமையான நிலையில் குடிசையில் பிறந்த சிறுவன் கேயாமி. இவன் படிப்பு உதவிகேட்டு பிரான்சுக்கு விண்ணப்பிக்க, அதை ஏற்று பிரான்சில் படிக்க அழைத்திருக்கிறது அந்நாடு. பதினான்கு வயதிலேயே பி.ஏ.படிப்பை முடித்துவிட்டான் இந்த இளம்மேதை. இந்த வருடம் முதுகலைப் படிப்புக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறான்.



‘முடி’வான உண்மை!

படத்தைப் பார்த்ததும் நெளிந்து சுருண்டுகிடக்கும் பாம்பின் ஒரு பகுதி தான் என்று நினைத்து விடாதீர்கள். நாநூறு முறை பெரிதாக்கப்பட்ட மனித தலைமுடியின் படம்தான் இது.





தேன்கூடு

ஒவ்வொருவரின் தலையில் (ஆண், பெண் இருவருக்கும்) ஒரு லட்சத்து இருபதாயிரம் முடிகள் இருக்கிறது. அவரவர் உடல் தகுதி, தன்மை மற்றும் பரம்பரை ஆகியவற்றை வைத்தே முடி வளர்வதும், உதிர்வதும் அமைகிறதாம். புதிதாக வளரும் முடிகள் ஏழு, எட்டு ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழக் கூடியது. முடி வளர இதுவரை மருந்தே கண்டுபிடிக்கப்படவில்லை என்பதுதான் உண்மையாம்.

கொலை குற்றவாளிக்கு நோபல் பரிசு?

அமெரிக்காவிலுள்ள சான்பிரான்சிஸ்கோவின் முன்னாள் தாதா ஸ்டான்லி

வில்லியம். 1981ம் ஆண்டு நான்கு பேரைக் கொலை செய்த குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டு இறப்பதற்குக் காத்திருக்கிறார். கடந்த இருபது வருடமாக சிறையிலிருக்கும் இந்த தாதா, சிறையிலிருந்தபடியே, 'குற்றம் புரிவதால் என்னென்ன கெடுதல் ஏற்படுகிறது?' என்பது பற்றி, எட்டு புத்தகங்களை எழுதி தள்ளிவிட்டார். இந்தப் புத்தகங்கள் அனைத்தையும் பிரிட்டன் பதிப்பகம் ஒன்று வெளியிட்டுள்ளது!

புத்தகத்தைப் படித்த பிரிட்டன், சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவரை விடுதலை செய்ய வேண்டுமென்றும் இவருக்கு நோபல் பரிசு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைக்க ஆரம்பித்துவிட்டார்களாம்! சிறைக்குச் சென்று இவரை வாழ்த்திவிட்டு வந்திருக்கிறார் வின்னி மண்டேலா.''

— பாரிஸ் பார்த்தசாரதி.



ஈபிள் டவரில் சாய்ந்த கோபுரம்?


தலைகீழாக ஒருவர் நீண்ட நேரம் நிற்க முடியும். கையை மட்டுமே நிலத்தில் ஊன்றி சரிவான நிலையில் நிற்க முடியுமா? முடியும் என்கிறார் இந்த நீக்ரோ இளைஞர்(படம்). ''பத்து நிமிடம் வரை இப்படியே நிற்க முடியும்'' என்கிறார். ஈபிள் டவர் அருகே பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் மாதிரி இவர் நிற்பதைப் பார்த்து பொதுமக்கள் நின்று பாராட்டிவிட்டுத்தான் சென்றார்களாம்!

— அ. சங்கரன்.

வால் டாக்ஸ் (wall Tax) சாலை

கிழக்கிந்தியக் கம்பெனியின் வசம் சென்னை இருந்த காலத்தில், பட்டணத்தைச் சுற்றியிருந்த பாதுகாப்பு அரணைப் பழுது பார்த்து, இடிந்து போன பகுதியைப் புதுப்பிக்க வேண்டும் என்று நகர மக்கள் கேட்டுக் கொண்டனர். புதிதாகச் சுவரைக் கட்டுவதற்குக் கிழக்கிந்தியக் கம்பெனி விதித்த வரியே 'சுவர் வரி' (wall tax). அந்தப் பெயராலேயே அச்சாலை சுவர் வரிச்சாலை (வால் டாக்ஸ் ரோடு) என்று அழைக்கப் பெற்றது.

பெயர் பிறந்தது எப்படி? என்ற நூலிலிருந்து - ஏ.எஸ். யோகானந்தம்



யானைத் தாமரை!

திருவனந்தபுரத்தில் யானைத்தாமரை என்று ஒரு தாமரை இலை உள்ளது. இது பத்து கிலோ எடையுள்ள பொருட்களைத் தாங்கக் கூடியது. இந்த இலை திருவனந்தபுரம், பாலோடு தாவர இயல் பூங்காவில் உள்ளது. இந்த இலையில் சிறு குழந்தைகளைப் படுக்க வைத்துப் படம் எடுத்துக் கொள்கின்றனர் பார்வையாளர்கள்.

— பி. ருக்மிணி, சிதம்பரம்

சாவும் சாதியும்

மு. சித்தநாதபூபதி

தூரத்தில் மேளச்சத்தம் கேட்டது. கொல்லபட்டி மூக்கம்மாள் வாங்கின துட்டுக்கு வஞ்சனையில்லாமல் செல்லச் சாமிய மகராசனாக்கி, மைக்கில் ஒப்பாரி வைத்து மூக்கைச் சிந்திக்கொண்டிருக்கிறார்.

முன்பு பாண்டியனா இருந்து இப்ப அரசா மாறியிருக்கும் பஸ்ஸை விட்டு எறங்குன எல்லாருக்கும் எளவுச்சத்தம் காதுல விழுந்தது.

இன்னும் ஒரு மைல். ஒரு கம்மாயி. ஒரு நதி. இதுகளைக் கடந்தாதான் ஊரு எல்லை வரும். மாரியம்மா தலைக்குத் தண்ணி ஊத்துனப்போ வந்தது. அப்ப ஆத்துல இடுப்புக்குத் தண்ணி இருந்தது. இப்பக் காஞ்சு கணப்பரந்து போயிக் கெடக்கு. செத்துப் போனானே செல்லச்சாமி, எந் தங்கச்சிக்குக் கொழுந்தன். சொத்து பிரிக்கறதுல அவுகளுக்குள்ளச் சடவு. இருக்குற காடு, கரை, தோட்டந் தொரவு எல்லாத்தையும் வித்துட்டு எந்தங்கச்சி ஸ்ரீவில்லிபுத்தூர்ல குடியேறிட்டா. அவுகளுக்குள்ளேயே சண்டைன்னு வந்தப்பறம் பொண்ணக் குடுத்த நாம புதூருக்குப் போக என்ன சோலியிருக்கு? கணக்கு வச்சுப் பார்த்தா பத்துப் பாஞ்சு வருசம் இருக்கும்.

கொஞ்ச நாளாவே அவனுக்குச் சேட்டமில்லன்னு கேள்வி. என்னத்தையோ தின்னு, செரிக்காம வாந்தியாகி, அங்க அது, இங்க இதுன்னு என்ன எழவெல்லாமோ சொல்றாரு ராசபாளையம் டாக்டரு. நமக்கு என்ன தெரியுது. அவனுக்கு ஏழலை - மண்டையப் போட்டுட்டான்.

துஷ்டித் தள்ளக்கூடுமோ? அதுனாலதான் மாலைய வாங்கிட்டு வந்தாச்சு. எங்கூடவே எறங்குன அவன் தாயாதிகள் நடந்த வாக்கிலேயே அரசாங்கம் எங்க சாதிக்குச் செய்கிற கொடுமைகள் பற்றியும்- அந்தச்

சாதிக்குச் செய்கிற கொடுமைகள் பற்றியும் பேசினார். அந்தக் காலப் பெருமைகள் பற்றிப் பேசிக்கொண்டு வந்த பெண்கள், கண்ணுல தண்ணி வர, அரற்ற ஆரம்பித்தார்கள். அப்படியும் கண்ணீர் வராத புண்ணியவதிகள் முந்தானையை இழுத்து முக்காடு போட்டுக்கொண்டார்கள்.

எல்லாச் சப்தமும் பக்கத்தில் கேட்க ஆரம்பித்தது. ஊரும் வந்திடுச்சி. ரெண்டு பக்கமும் கருவேல முள்ளு, எதுக்க வந்த சில பெரிசுக பத்து வருசத்துக்கு அப்புறம்னாலும் அடையாளம் கண்டுக்கிட்டாங்க. அதுக்காக வான்னு கேட்க முடியுமா?

"ஆரு கூமாப்பட்டிக் காரவுகளா?"

"ஆமா, சின்னைய்யா."

"இப்பன்னாலும் வழி தெரிஞ்சதே. போங்க, போங்க தேனிலர்ந்து நேர் மச்சினன்மாருக வரலை எதிர்பார்த்து தூக்காம வச்சிருக்கு."

"ஆட்டும்."

இத ஊருன்னு கூடச் சொல்ல முடியாது. எண்ணி நூத்திப்பத்து வீடுகள். அறுவது வீடுகள் எங்க ஆளுகளோடது. நாப்பத்தஞ்சு வீடுக அவனுகளோடது.

போறப்பவே முக்கால்வாசி வேலைகள் முடிந்திருந்தன. பொம்பளைக நீர் மாலைக்குப் போயி குளிச்சடையில் அரளிப் பூவுமாய் அழுதுகொண்டிருந்தார்கள். செல்லச்சாமியின் மனைவி, நாய் குரைத்ததையும், தேங்காய் சில்லுச் சில்லாய் உடைந்த கெட்ட சகுனத்தையும் சொல்லிப் புலம்பிக்கொண்டிருந்தாள்.

ஆம்பளைக நீர்மாலைக்குக் கிளம்பினர். நாலைந்து பேர் வெள்ளைத்துணியக் குடை போல பிடிக்க, செல்லச்சாமியின் மகன்

மஞ்சனத்திடக்கொடம் எடுத்து மாறு பூணுலொட நடந்து வர்றான். எல்லாருமே தரையில் நடக்க ஆரம்பித்தார்கள். இது என்ன கூத்து?

"என்னது தரையில நடக்குறாக. மாத்துப் பொடவையைத் தரையில விரிக்கக் காணோம்" என்றேன் பக்கத்தில் இருந்த வரிடம்.

அந்த ஆள் விரக்தியாச் சிரிச்சுட்டு அப்புறம் சொல்றேன்னார். எனக்குன்னா ஆச்சரியமான ஆச்சரியம். ஒன்னும் புரியல. சங்கு ஊதுறவன் பேண்ட் சட்டை போட்டுக்கிட்டு, மைனர் செயின் வெளிய தெரியுறாப்புல என்னமோ கல்யாணவீட்டுல ஃபோட்டோ பிடிக்கறவனாட்டம்ல வந்துருக்கான்.

"என்ன ஆச்சய்யா ஒங்க ஊருக்கு; செல்லச்சாமியக்கூட பவுடர் போட்டுத்தான் புதைப்பீங்க போல இருக்கே. இப்படித் தெரிஞ்சா



நான்கூட ஒரு டப்பா வாங்கியாந்திருப்பேனே!"

"ஆனாலும் ஒமக்கு இம்புட்டு நக்கல் ஆகாதுய்யா. இப்பம் என்னத்தக் கண்டுட்டீரு?"

"பின்னே என்ன, அவன் செத்த வீட்டுக்கு வந்தாப்புலயா வந்திருக்கான்."

"பெரிசு கொஞ்சம் மெதுவாப் பேசும். இவனும் போயிட்டா செத்தவனுக்கு நாம தான், செரைக்கணும்."

"இவனையே வத்தறாப்புல இருந்து எறநூத்தைம்பது ரூவா பேசிக்கூப்பிட்டு வந்திருக்கு. பத்து வருசமா நீர் வராததுனால ஒமக்கு இங்க நடந்த சமாசாரம் தெரியாமப் போயிடிச்சு போல."

"அப்படி என்னதான்யா நடந்தது ஒலகத்துல இல்லாத அதிசயமா, கொஞ்சம் வெவரமாத்தான் சொல்லும்."

"ஒரு எட்டு வருசத்துக்கு முன்னாடி இருக்கும். அப்பல்லாம் ஊர் நல்லாத்தான் இருந்தது. ஒருநாளும் இல்லாத திருநாளா நம்ம ஊருக்கு எம்.எல்.ஏ வந்திருந்தாரு. வந்து தண்ணிப் பிரச்னையைத் தீர்த்து வைக்கிறேன்னுட்டு டாங்கி கட்டுனாகளா, அப்பமே ஒரு பிரச்னை வந்தது பாரும்..."

தேனி மச்சினன்க வந்தாச்சு. இறுதி யாத்திரைக்கு எல்லா ஏற்பாடும் முடிந்திருந்தது. செல்லச்சாமியின் மருமகள்கள் நிறை நாழி நெல்லெடுத்து சீதேவி எடுத்தார்கள். பொண்டாட்டியின் தாலி வாங்கி பால்ல போட்டு, பொறந்த வீட்டுக்கோடியா, பார்டர் போட்ட வெள்ளச் சேலையைப் போட்டு உள்ள கூப்பிட்டுப் போயி கலர் குடிக்க வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள்.

"கோவிந்தா! கோவிந்தா" நாங்கள் சப்பரத்தின் பின்னாடி நடக்க ஆரம்பித்தோம்.

"மீதியச் சொல்லும்வே."

"ஒருநாள் அவனுக கெணறு வத்திப் போச்சு. இருந்தாலும் பக்கத்து ஊர்ல போயி சமுதாயக் கெணத்துல தண்ணி எடுத்துக்கிட்டு இருந்தானுக. ஒருநாள் மத்தியான நேரத்துல யாருமில்லைன்னு நெனச்சுக்கிட்டு, குருவம்மா நம்ம கெணத்துல தண்ணி எடுத்துட்டா. அவ கெட்ட நேரம் பாரு, இத ஒண்ணுக்குப் போன நொண்டி மாயாண்டி பாத்து ஊர்ல சொல்ல, பஞ்சாயத்துக் கூடி, அபராதம் போட்டாக. அதோட விட்டாப் பரவாயில்லயே. ரெண்டு பயலுக நாலு வப்பு வச்சிட்டானுக.

"கோவிந்தா! கோவிந்தா!" செல்லச்சாமியின் மகள்கள் கொள்ளிக்குடம் உடைத்துத் திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

"அத மனசுல வச்சுக்கிட்டு கறுவிக்கிட்டிருந்திருக்கானுக. ரெண்டு கெணத்தையும் மூடித் தனித்தனியா தண்ணி டாங்கி கட்டி, திருக்குக் கொழாயி போட்டுத் தண்ணி பிடிச்சுக்கிட்டு இருந்தமா, சோதனையா நம்ம கொழாயீ ஒருநா மக்கர் பண்ணிடிச்சு. நம்ம சனங்க தண்ணிக்கு அல்லாடிப் போயிட்டாங்க. எல்லாரும் தோட்டத்துல போயி தண்ணி எடுத்து வர, நம்ம பேச்சியம்மா சிறுக்கியில்ல, நடக்க மாட்டாதவன் சித்தப்பா வீட்டுல பொண்ணெடுத்தக் கதையா ஒரு நா ராவுல அவனுக கொழாயில தண்ணி பிடிச்சுப்புட்டா. திட்டம் போட்டே காத்திருந்தானுகளோ என்னவோ, பிடிச்சு அடிச்சுப் போட்டானுக.

நம்மானுகளால ஒண்ணும் பேச முடியல. வயக்காட்டு வேலைகளுக்கு அயலூர் ஆளுகளப் பிடிச்சு வேலை பாத்தானுக. அவனுக கூட்டத்துல ஒரு படிச்ச பய இருக்கான். எல்லோரும், மூக்குத்தி, அண்டா, குண்டா எல்லாத்தையும் வித்து காசாக்கி ஒவ்வொரு தலக்கட்டுக்கும் இம்புட்டுன்னு பொதுக்கணக்குப் போட்டுத் தீப்பெட்டி ஆபீஸு ஆரம்பிச்சானுக. அப்புறம் அவனுக காட்டுல மழைதான். பொம்பளைக கட்டு ஒட்டுறது என்ன? கட்டை அடுக்குறது என்ன? ஆம்பளைங்க மருந்த முக்க, சைடு அடிக்க, அந்த வேல்சாமி மேனேசர் போல யார் யாரெல்லாம் எம்புட்டு பணம் போட்டாகளோ அதுக்கேத்த மாதிரி பிரிச்சுப் போட்டான். அம்புட்டுத் தீப்பெட்டி பண்டலயும் ஸ்ரீவில்லிபுத்தூர்காரர் ஒருத்தர் வாங்கிட்டுப் போயிடுறாரு. சேந்தாப்புல நாலு வருஷம் மழை பெய்யாம பஞ்சம் வந்ததுல நாம கொஞ்சம் நொடிஞ்சுப் போயிட்டோம். உருட்டிப் பாத்தோம்.



"சென்னையிலே தண்ணீர் கஷ்டம் ரொம்ப அதிகம்னு எப்படி சொல்றீங்க?"

"25 இஞ்ச் கலர் டீ.வி வாங்கினால் 5 லிட்டர் மினரல் வாட்டர் முற்றிலும் இலவசம்னு விளம்பரம் பண்றாங்களே!"

— எஸ். மங்கை

மெரட்டிப் பாத்தோம் வயல் வேலைக்கு. ம்ஹூம். ஒன்னும் பலிக்கல.

"நாங்களா நின்னோம். நீங்கதானே கம்மாய்ப்பட்டி ஆளுகளக் கூப்பிட்டு வந்திக. அவுகளயே கூப்பிட்டுக்கோங்கன்னுட்டானுக. இப்படியே போனதா? திமிர்னு ரத்த ரத்தமா கக்கி மாயக்கண்ணு செத்துப் போனான்."

"யாரு முக்குரோட்டுக் கடைக்காரனா?"

"ஆமாமா. மாத்துவிரிக்க அவனைக் கூப்பிட்டா என்ன சொல்லிட்டா தெரியுமா?"

"நான்தான ஒங்களுக்கு வெளுக்க வேண்டாம்னுட்டு குச்சி உருவ போயிட்டேன்ல. இப்ப எங்கிட்ட மாத்து எப்படி இருக்கும்?"

"நாங்க வேண்ணா துணி தர்றோம். சாங்கியம் விட்டுப் போயிடக் கூடாது" நம்ம ஆளுக சொல்ல,

"அதான் நாங்களே வேணாம்னு ஆயிப் போச்சு. அப்புறம் என்ன எங்கள வச்சு சடங்கு கழிக்கிறது?" பேசிக்கிட்டே மரியாதை இல்லாம டீவில ஒலியும் ஒளியும் பாக்க ஆரம்பிச்சுட்டாளாம்!

"பெறகு?"

"ஒங்களுக்குக் கதை போலத் தெரியுது. சரி எல்லாம் ஒழியட்டும் குழி வெட்டவாவது வெட்டியானக் கூப்பிடப் போனா என்ன சொல்லிட்டான் தெரியுமா?"

சுடுகாடு வந்திருந்தது. மற்ற எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகியிருந்தன. சவத்தை இறக்கி வைத்திருந்தார்கள்.

"ம்... சொல்லுங்க. அவனுக என்ன சொன்னானுகன்னுட்டு."

"ஒங்காளுக செத்தா நாங்க குழி வெட்ட வர்றோம். எங்காளுக செத்தா நீங்க குழி வெட்ட வர்றீகளா?" நாக்கப்புடுங்கிக்கிறாப்புல கேள்வி கேட்டான். எளவட்டப் பயக வரிஞ்சு கட்டிட்டு அடிக்கப் போக, தீண்டாமைன்னு சொல்லி ஏழெட்டு பேரை உள்ள தள்ளிட்டான்."

"அன்னக்கிலிருந்து யாரும் செத்துப் புட்டா குழி வெட்டுறது மச்சினன் மொறைக்காரங்கதான்."

"அடக்கடவுளே!"

"ஓய் கூமாப்பட்டிப் பெருசு! நீரும் செல்லச்சாமிக்கு மச்சினன் மொறைதான். மம்பட்டியப்பிடிச்சு ரெண்டு வெட்டு வெட்டும்."

நானும் மகிழ்ச்சி பொங்க மண் வெட்டிய பிடிச்சேன்.

கரிசல் குருக்ஷேத்திரத்தில் வத்திராயிருப்பு சங்கு முழங்கியது. ○

சிவகாமியின் சபதம்



ஒன்பதாம் அத்தியாயம்

விடுதலை

கயிற்றின் வழியாக மேலே ஏறிய பரஞ்சோதி கூரையை அணுகிய போது, இரண்டு இரும்புக் கரங்கள் தன் புயங்களைப் பிடித்து மேலே தூக்கி விடுவதை உணர்ந்தான். மறுகணமே தான் மேற்கூரையில் நிற்பதையும், தனக்கு எதிரில் 'பேச வேண்டாம்' என்பதற்கு அறிகுறியாக உதட்டில் ஒற்றை விரலை வைத்துக்கொண்டு புத்த பிக்ஷு நிற்பதையும் பார்த்தான். அவருக்குப் பின்னால் இன்னொரு இளம் புத்த சந்நியாசி நிற்பதும் தெரிந்தது. பெரிய பிக்ஷு ஜாடை காட்டியவுடன் இளம் புத்தன் கயிற்றை மேலே இழுத்துச் சுருட்டி ஒரு காவித் துணிக்குள் அதை வைத்துக் கட்டினான்.

பரஞ்சோதி கூரைமேல் நின்ற வண்ணம் சுற்றும் முற்றும் பார்த்த போது, கண்ணுக்கெட்டிய தூரம் காஞ்சி நகரத்து மாட மாளிகைகளின் உப்பரிகைகள் வெண்ணிலாவில் தாவள்யமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

இதற்குள் பெரிய பிக்ஷுவானவர் சிறைச்சாலைக் கூரையின் துவாரத்தை ஓடுகளைப் பரப்பி அடைத்துவிட்டு, பரஞ்சோதியை ஒரு விரலால் தொட்டுத் தம் பின்னால் வரும்படி சமிக்ஞை செய்தார்.

அமரர் கல்கி

அவரைப் பின்தொடர்ந்து பரஞ்சோதியும் இளம் பிக்ஷுவும் ஒட்டுக் கூரைகளின் மேலேயும், நிலா மாடங்கள் - மண்டபங்களின் மேலேயும் ஓசைப் படாமல் மெதுவாக நடந்து சென்றார்கள். வீதியில் ஏதாவது சந்தடி கேட்டால் புத்த பிக்ஷு உடனே தம் பின்னால் வருவோருக்கு ஜாடை காட்டிவிட்டு உட்கார்ந்து கொள்வார். சந்தடி நீங்கிய பிறகு எழுந்து நடப்பார்.

இவ்விதம் ஏழெட்டுக் கட்டடங்களை மேற்கூரை வழியாகக் கடந்த பிறகு, ஒரு வீட்டின் முகப்பில் வீதி ஓரத்தில் பன்னீர் மரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருந்த இடத்துக்கு வந்தார்கள்.

பன்னீர் மரங்களின் அடர்ந்த பசிய இலைகளுக்கு இடை இடையே கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த பன்னீர் மலர்கள் வெண்ணிலாவில் வெள்ளி மலர்களாகப் பிரகாசித்தன. அம்மலர்களின் சுகந்த பரிமளத்தை இளந்தென்றல் நாலா பக்கமும் பரப்பிக்கொண்டிருந்தது.

புத்த பிக்ஷு வீதியை இருபுறமும் நன்றாகப் பார்த்துவிட்டு அந்தப் பன்னீர் மரங்களில் ஒன்றைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கினார். பரஞ்சோதியும் இளம் பிக்ஷுவும் அவ்விதமே இறங்கினார்கள். சிறிது தூரம் நடந்து கோயிலைப் போல் அமைந்த ஓர் அழகிய கட்டடத்தின் வாசலை அடைந்தார்கள்.

அந்தக் கட்டடந்தான் காஞ்சி நகருக்குள்ளிருந்த புத்த விஹாரங்களுக்குள் மிகப் பெரியது. 'இராஜ விஹாரம்' என்று பெயர் பெற்றது. கருணாமூர்த்தியான புத்த பகவானின் திருப் பற்களில் ஒன்று அந்தக் கோயிலின் கர்ப்பக் கிருஹத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது.

பல்லவ மன்னர்கள் அவ்வப்போது ஒவ்வொரு மதத்தில் பற்றுடையவர்களாயிருந்தாலும், எல்லா மதங்களையும் சம நோக்குடன் பார்த்து அந்தந்த மத ஸ்தாபனங்களுக்கு இராஜ மானியம் விடுவது வழக்கம். அவ்விதம் இராஜாங்க மானியத்தைப் பெற்றது இராஜ விஹாரம்.

அன்றியும், காஞ்சியில் சில பெருஞ்செல்வர்கள் பௌத்த சமயிகளாயிருந்தார்கள். அவர்களில் ஒருவனான தன தாஸன் என்னும் வியாபாரி தன்னுடைய ஏகபுத்திரன் வியாதியாய்க் கிடந்தபோது ''பிள்ளை பிழைத்தால் இராஜ விஹாரத்தைப் புதுப்பித்துத் தருவேனாக'' என்று வேண்டுதல் செய்துகொண்டான். பிள்ளை பிழைக்கவே, ஏராளமான பொருட் செலவு செய்து விஹாரத்தைப் புதுப்பித்தான்.

தாவள்யமான முத்துச் சுண்ணாம்பு பூசப்பட்டிருந்த இராஜ விஹாரம் வெண்ணிலாவில் அழகின் வடிவமாக விளங்கிற்று.

அதைப் பார்த்ததும் பரஞ்சோதி, "ஆஹா! என்ன அழகான கோயில்!" என்று கூவினான்.

புத்த பிக்ஷு சட்டென்று நின்று அவனுடைய வாயைப் பொத்தினார். அச்சமயம் அவர்கள் பன்னீர் மரங்களின் நிழலைத் தாண்டி இராஜ விஹாரத்துக்கு எதிரில் திறந்த வெளிக்கு வந்திருந்தார்கள்.

அதே சமயத்தில் இராஜ விஹாரத்துக்கு எதிர் வரிசையிலிருந்த கட்டடங்களின் இருண்ட நிழலிலிருந்து இரண்டு வெண்புரவிகள் வெளிப்பட்டு வந்தன.

அவற்றின் மீது இரண்டு வீரர்கள் காணப்பட்டார்கள். ஒருவர் நடுப்

பிராயத்தினர்; இன்னொருவர் வாலி பர். இருவரும் பெரிய முண்டாசு கட்டியிருந்தார்கள்.

இரண்டு குதிரைகளும் இராஜ விஹாரத்தை நெருங்கி வந்தன. வீரர் களில் பெரியவன், "புத்தம் சரணம் கச்சாமி!" என்றான். இளம் பிக்ஷு "தர்மம் சரணம் கச்சாமி!" என்றார்.

"அடிகளே! இரவு இரண்டாம் ஜாமத்துக்கு மேல் யாரும் வெளியில் கிளம்பக்கூடாது என்று தெரியுமோ?" என்றான் முதிய வீரன்.

"தெரியும்; ஆனால் சந்நியாசிக் கும் அந்தக் கட்டளை உண்டு என்பது தெரியாது" என்றார் பிக்ஷு.



"இந்த அர்த்த ராத்திரியில் எங்கே கிளம்பினீர்களோ?"

"இந்தப் பிள்ளை – என்னுடைய சிஷ்யன். காஞ்சிக்குப் புதியவன். காணாமற் போய்விட்டான். அவனைத் தேடிப் பிடித்து அழைத்து வந்தேன்."

"இந்த வாலிபனுக்கு எந்த ஊரோ?"

"சோழ நாட்டில் செங்காட்டங்குடி."

"இன்றைக்குத்தான் இருவரும் வந்தீர்களாக்கும்!"

"ஆம், ஐயா!"

"தங்கள் திருநாமம் என்னவோ!"

"நாகநந்தி என்பார்கள்."

"இனிமேல் நள்ளிரவில் கிளம்ப வேண்டாம், சுவாமி! சிஷ்யப் பிள்ளையிடமும் சொல்லி வையுங்கள்."

வீரர்கள் குதிரைகளைத் தட்டிவிட்டுக் கொண்டு போன பிறகு மூவரும் இராஜவிஹாரத்துக்குள் பிரவேசித்தார்கள். அவர்கள் உள்ளே நுழைந்ததும் இராஜ விஹாரத்தின் வெளிக்கதவு சாத்தப்பட்டது.

உள்ளே வெகு தூரத்தில் கர்ப்பக் கிருஹம் தீப வரிசைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததைப் பரஞ்சோதி பிரமிப்புடன் பார்த்துக்கொண்டு நின்றான்.

உள்ளேயிருந்து வந்துகொண்டிருந்த அகிற்புகையின் வாசனை அவனுடைய தலையைக் கிறுகிறுக்கச் செய்தது.

புத்த பிக்ஷு அவனுடைய தலையைத் தொட்டு, "பிள்ளாய்! எப்பேர்ப்பட்ட ஆபத்து உனக்கு வந்தது! புத்த பகவானுடைய கருணையினால் தப்பினாய்!" என்றார்.

பரஞ்சோதி அவரை ஏறிட்டுப் பார்த்து, "அடிகளே! எந்த ஆபத்தைச் சொல்லுகிறீர்கள்? சிறையில் அடைபட்டிருந்ததையா?" என்று கேட்டான்.

"அதுவுந்தான். அதற்கு மேலே பெரிய ஆபத்து! இந்த விஹாரத்தின் வாசலிலேயே வந்தது. குதிரைமேல் வந்தவர்கள் யார் தெரியுமா?"

"எனக்கு எப்படித் தெரியும், சுவாமி? காஞ்சிக்கு நான் புதிதாயிற்றே?"

பிக்ஷு பரஞ்சோதியின் காதோடு, "மகேந்திர சக்கரவர்த்தியும், அவருடைய மகன் மாமல்ல நரசிம்மனுந்தான்!" என்றார்.

பரஞ்சோதிக்கு உண்மையிலேயே தூக்கி வாரிப்போட்டது.

"நிஜமாகவா?" என்று வியப்புடன் கேட்டான்.

"ஆம்! இருவரும் மாறுவேடம் பூண்டு நகர் சுற்றக் கிளம்பியிருக்கிறார்கள். வேஷம் தரிப்பதில் மகேந்திர பல்லவருக்கு இணையானவர் இந்தப் பாரத கண்டத்திலேயே இல்லை."

பரஞ்சோதி சிறிது நேரம் ஆச்சரியக் கடலில் மூழ்கியிருந்துவிட்டு, "அவர்களால் எனக்கு என்ன ஆபத்து?" என்று கேட்டான்.

புத்த பிக்ஷு ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்தார். "என்ன ஆபத்து என்றா கேட்கிறாய்? யானை மீது வேல் எறிந்த பிள்ளை நீதான் என்று அவர்களுக்குத் தெரிந்தால் நீ பிழைப்பது துர்லபம். அந்தச் சக்கரவர்த்தி குமாரன் இருக்கிறானே, அவன் எப்பேர்ப்பட்டவன் தெரியுமா? இந்தப் பூமண்டலத்தில் தன்னை விடப் பலசாலியோ, வீரனோ ஒருவனும் இருக்கக்கூடாது என்பது அவனுடைய எண்ணம். அப்படி யாராவது இருந்தால் அவனுடன் மல்யுத்தம்

செய்து தோல்வியடைய வேண்டும்; இல்லாவிடில் யமனுலகம் போக வேண்டியதுதான்!''

"சண்டை என்று வந்தால் நான் பின் வாங்க மாட்டேன் அடிகளே! சக்கரவர்த்தி குமாரனாகவே இருக்கட்டும்! யாராய்த்தான் இருக்கட்டும்!'' என்றான் பரஞ்சோதி.

''தெரியும் தம்பி! நீ இப்படிப்பட்ட வீரனாயிருப்பதனாலே தான் உனக்கு ஆபத்து அதிகம்; நீ வேலை எறிந்ததனாலேதான் கோயில் யானைக்கு மதம் பிடித்தது என்று பொய்க்குற்றம் சாட்டி உன்னைத் தண்டித்து விடுவார்கள்.''

பரஞ்சோதிக்கு நெஞ்சில் 'சுருக்' கென்றது. சுமைதாங்கியில் படுத்திருந்தபோது யாரோ பேசிக்கொண்டு போனது ஞாபகம் வந்தது. நாகநந்தியின் வார்த்தைகளில் இது வரை நம்பிக்கையில்லாதவனுக்கு இப்போது கொஞ்சம் நம்பிக்கை உண்டாயிற்று.

''அப்படிப்பட்ட அநியாயமும் உண்டா?'' என்றான்.

"பரஞ்சோதி! இந்தக் காஞ்சி பல்லவர்களின் குலத் தொழிலே அதுதான். இன்றைக்கு நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னால் உன்னைப் போலவே கல்வி பயில்வதற்காக **மயூரசன்மன்** என்னும் இளைஞன் இந்த நகருக்கு வந்தான். அவனுடைய வீரத்தைக் கண்டு அசூயை கொண்ட பல்லவ இராஜகுமாரன் அவன்மேல் பொய்க் குற்றம் சாட்டிச் சிறையில் அடைத்து விட்டான்...''

''அப்புறம்?''

''மயூரசன்மன் சிறையிலிருந்து தப்பிக்கொண்டு போய்க் கிருஷ்ணா நதிக்கரையில் தனி ராஜ்யம் ஸ்தாபித்துக்கொண்டு, பல்லவர்களைப் பழிக்குப் பழி வாங்கினான். புத்த பகவான் அருளால் மயூரசன்மனைப் போலவே நீயும் பெரும் ஆபத்திலிருந்து தப்பினாய்...!''

பரஞ்சோதி அப்போது குறுக்கிட்டு, ''அடிகளே! மற்ற ஆபத்துக்கள் ஒருபுறமிருக்கட்டும். இப்போது எனக்குப் பசி என்கிற ஆபத்துத்தான் பெரிய ஆபத்தாயிருக்கிறது. பசியினாலேயே பிராணன் போய்விடும் போலிருக்கிறது!'' என்றான்.

நாகநந்தி அவனை மடப்பள்ளிக்கு அழைத்துச் சென்று உணவு அருந்துவித்தார். பிறகு ஒரு மண்டபத்தின் தாழ்வாரத்துக்கு அவனை அழைத்து வந்து, ''பரஞ்சோதி இங்கே படுத்துக் கொள். தூங்குவதற்கு ஒரு முகூர்த்த காலம் கொடுக்கிறேன். நிம்மதியாகத் தூங்கு. உனக்கு வந்த ஆபத்து இன்னும் முழுவதும் நீங்கிவிடவில்லை. பொழுது விடிவதற்குள்ளே நாம் கோட்டையை விட்டுப் போய்விட வேண்டும்'' என்றார்.

பரஞ்சோதி அப்படியே அந்த மண்டபத்தின் தளத்தில் சாய்ந்தான். அடுத்த நிமிஷமே நித்திராதேவி அவனை ஆட்கொண்டாள்.

பத்தாம் அத்தியாயம்

கண் கட்டு மாயம்

பரஞ்சோதி தரையில் படுத்தவுடனே கண்ணயர்ந்தான். ஆயினும், அவன் நல்ல தூக்கம் தூங்கினான் என்று சொல்வதற்கில்லை. ஏதேதோ பயங்கர துர்க் கனவுகள் தோன்றித் தூக்கத்

தைக் கெடுத்தன.

ஒரு சமயம் ஐந்தாறு புத்த பிக்ஷுக்கள் வந்து அவனைச் சூழ்ந்து நின்றார்கள். அவர்களில் ஒருவர் தம் கையிலிருந்த தீபத்தைத் தூக்கிப் பரஞ்சோதியின் முகத்தில் வெளிச்சம் விழும்படி பிடித்தார்.

"ஆமாம்! நாகநந்தி சொல்வது சரி தான். இவன் முகத்தில் அபூர்வமான களையிருக்கிறது. இவன் மகாவீரன் ஆவான்! அல்லது மகாத்மா ஆவான்!" என்று யாரோ ஒருவர் சொன்னது போலிருந்தது.



இன்னொரு சமயம் அவனை ஒரு மத யானை துரத்திக்கொண்டு வருகிறது. பரஞ்சோதி சட்டென்று ஒரு பன்னீர் மரத்தின் மேல் ஏறிக்கொள்கிறான். புஷ்பக் கொத்துடன் கூடிய ஒரு பன்னீர்க் கிளையை ஒடித்து யானையின் மேல் போடுகிறான். அச்சமயம் திடீரென்று இரு குதிரை வீரர்கள் தோன்றி, "அடப்பாவி! கோயில் யானையைக் கொன்று விட்டாயா?" என்று கூவிக் கொண்டே தங்கள் கையிலிருந்த வேல்களை அவன் மீது எறிகிறார்கள்!

மற்றும் ஒரு பயங்கரக் கனவு! நாகநந்தியடிகள் வந்து அவன் பக்கத்தில் நின்று அவனுடைய முகத்தை உற்றுப் பார்க்கிறார். அப்படிப் பார்த்

துக்கொண்டிருக்கும்போதே அவருடைய முகமானது படமெடுத்தாடும் பாம்பின் முகமாக மாறுகிறது! அந்தப் பாம்பு அதனுடைய மெல்லிய பிளவு பட்ட நாவைநீட்டி அவனுடைய முகத்தைத் தீண்ட வருகிறது!

பரஞ்சோதி அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருந்தான். பார்த்தால், நாகநந்தி அடிகள் உண்மையாகவே அவன் அருகில் நின்று அவனைக் குனிந்து பார்த்துக்கொண்டிருந்தார்.

"பிள்ளாய்! ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? ஏதாவது துர்க்கனவு கண்டாயா?" என்று பிக்ஷு கேட்டார்.

பரஞ்சோதி, "இல்லை; இல்லை. ஒன்றுமில்லை. நீங்கள் திடீரென்று தொடவே கொஞ்சம் திடுக்கிட்டேன்" என்றான்.

"பொழுது விடிய இன்னும் ஒரு முகூர்த்தந்தான் இருக்கிறது. புறப்படு, போகலாம்! பொழுது விடிவதற்குள் இந்தக் கோட்டையைக் கடந்து போய் விட வேண்டும்."

"ஏன் சுவாமி?"

"புத்த தேவருடைய ஆக்ஞை!"

"யாருக்கு?"

"எனக்குத்தான், உன்னை அபாயத்திலிருந்து தப்புவிக்கும்படி ஆக்ஞை. என்னிடம் உனக்கு இன்னும் நம்பிக்கை வரவில்லையா?" என்று நாகநந்தி பரிவு ததும்பிய குரலில் கேட்டார்.

பரஞ்சோதி மௌனமாயிருந்தான்.

"போகட்டும்; இன்னும் ஒரே ஒரு முகூர்த்த காலம் – இரவு கழித்து பொழுது விடியும்வரையில் – நான் சொல்கிறதைக் கேள். புத்த தேவருடைய கட்டளையை நான் நிறைவேற்றி விடுகிறேன். கோட்டைக்கு வெளியே உன்னைக் கொண்டு போய் விட்டு விடுகிறேன். அப்புறம் உன் இஷ்டம்போல் செய்."

கனிந்த குரலில் கூறிய இந்த வேண்டுகோளைப் பரஞ்சோதியினால் மறுக்க முடியவில்லை.

"ஆகட்டும், அடிகளே!" என்றான்.

"அப்படியானால் இன்னும் ஒரு முகூர்த்த காலம் என்னிடம் நம்பிக்கை வைத்து நான் சொன்னபடி கேட்பாயல்லவா!"

"கேட்கிறேன்."

"உன்னுடைய கண்களைக் கட்டி இவ்விடமிருந்து அழைத்துப் போக வேண்டியதாயிருந்தால்?"

பரஞ்சோதி ஒரு நிமிஷம் திகைத்து நின்றுவிட்டு, "எப்படியானாலும் சரி!" என்றான்.

உடனே, நாகநந்தி அடிகள் ஒரு சிறு துண்டை எடுத்துப் பரஞ்சோதியின் கண்களைச் சுற்றிக் கட்டினார்.


"பிள்ளாய்! என் கையைப் பிடித்துக்கொண்டே வர வேண்டும். நான் சொல்கிற வரையில் கண்ணின் கட்டை அவிழ்க்கக்கூடாது. இப்போது நீ என்னிடம் காட்டும் நம்பிக்கையின் பலனை ஒருநாள் அவசியம் தெரிந்துகொள்வாய்!"

இவ்விதம் கூறிப் பரஞ்சோதியின் கரத்தைப் பிடித்துக்கொண்டு, நாகநந்தி நடக்கத் தொடங்கினார். பரஞ்சோதியின் நெஞ்சு 'படக் படக்' என்று அடித்துக்கொண்டது. ஆயினும், அவன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு பிக்ஷுவைப் பின்பற்றி நடந்தான்.

முதலில், புத்த விஹாரத்தின் வாசல் வழியாக வெளியேறுவது போலப் பரஞ்சோதிக்

குத் தோன்றிற்று. பின்னர், வீதி யோடு நடந்து போவதாகத் தோன்றிற்று. பன்னீர் புஷ்பங் களின் வாசனையிலிருந்து அன்று முன்னிரவில் மேல் மாடத்திலிருந்து வீதியில் இறங் கிய இடமாக இருக்கலாமென்று ஊகித்துக்கொண்டான்.

இன்னும் சிறிது தூரம் நடந்த பிறகு, போகும் திசை மாறியது. சற்று நேரத்துக்கெல்லாம்





மீண்டும் பன்னீர்ப் பூவின் நறு மணம். "வந்த வழியே திரும்பிப் போகிறோமா, என்ன? ஆ! இந்தப் பொல்லாத பிக்ஷு எனக்கு வழி அடையாளம் தெரியாமலிருப்பதற் காக இப்படி இழுத்தடிக்கிறார் போலும்!" என்று பரஞ்சோதி எண்ணிக்கொண்டான்.

மறுபடியும் ஒரு கட்டடத்துக்குள் பிரவேசிப்பது போலிருந்தது. அகிற் புகையின் மணத்திலிருந்து, 'இது இராஜ விஹாரந்தான்' என்று பரஞ் சோதி தீர்மானித்தான். பிறகு சிறிது நேரம் இருளடைந்த குகைகளின் வழி யாகச் சுற்றிச் சுற்றி வருவது போல் தோன்றியது. கண்ணைக் கட்டியிருந்த படியால், வெகு நேரம் முடிவேயில் லாமல் நடந்துகொண்டிருப்பதாகப் பட்டது.

"அடிகளே! இன்னும் எத்தனை நேரம் இவ்விதம் கண்கட்டு வித்தை செய்ய வேண்டும்?" என்று பரஞ் சோதி கேட்டான்.

"பிள்ளாய்! கிட்டத்தட்ட வந்து விட்டோம். இன்னும் கொஞ்சம் பொறு!" என்றார் பிக்ஷு.

பிறகு குறுகலான படிகளின் வழி யாகக் கீழே இறங்கிப் போவது போல் தோன்றியது. அப்புறம் கொஞ்ச நேரம் சமதரையில் நடை.

திடீரென்று இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வந்து விட்ட தாகப் பரஞ்சோதி உணர்ந் தான்.

"பரஞ்சோதி! நாம் வர வேண்டிய இடத்துக்கு வந்துவிட்டோம். கண் கட்டுச் சோதனை முடிந்தது" என்று சொல்லிக்கொண்டே அடிகள் கட்டை அவிழ்த்தார்.

புத்த பகவான் அருளால் சொர்க்க லோகத்துக்கே வந்து விட்டோமோ என்று பரஞ்சோதிக்குத் தோன்றியது. அவன் கண் முன்னால் அத்தகைய சௌந்தர்யக் காட்சி தென்பட்டது.

அகழி நீரில் அஸ்தமன சந்திரனின் வெள்ளிக்கிரணங்கள் படிந்து, உருக் கிய வெள்ளி ஓடையாகச் செய்து கொண்டிருந்தன. அகழிக்கப்பால் மரங்கள் அடர்ந்த வனப்பிரதேசம் காணப்பட்டது. மரங்களின் உச்சியில் சந்திர கிரணங்கள் இலைகளின் மீது தவழ்ந்து விளையாடின.

அகழியில் ஒரு படகு மிதந்தது. பரஞ்சோதியைச் சிறை மீட்க உதவி செய்த இளம் பிக்ஷு கையில் துடுப் புடன் படகில் நின்றார்.

பெரிய பிக்ஷுவும் பரஞ்சோதியும் அகழியண்டை போய்ப் படகில் ஏறினார்கள். படகு நகர்ந்தது.

"இந்த அகழியைத் தாண்டப் படகு என்னத்திற்கு? எளிதில் நீந்திக் கடந்து விடலாமே?" என்றான் பரஞ்சோதி.

"ஆம்; நீந்தத் தெரிந்தவர்கள் நீந்த லாம்."

"இந்த அகழியினால் கோட்டைப் பாதுகாப்புக்குத்தான் என்ன பிரயோ ஜனம்? எதிரிகள் வந்தால் சுலபமாய் நீந்திவிட மாட்டார்களா?"

"அதோ பார்!" என்றார் பிக்ஷு. சற் றுத் தூரத்தில் ஒரு முதலை பயங்கர மாக வாயைத் திறந்தது.

"ஐயோ!" என்றான் பரஞ்சோதி.

"இம்மாதிரி நூற்றுக்கணக்கான முத லைகள் இந்த அகழியில் இருக்கின் றன. சாதாரண காலங்களில் அங் கங்கே இரும்புக் கூண்டுகளில் அடைத்து வைத்திருப்பார்கள். யுத்த காலங்களில் திறந்து விட்டுவிடுவார் கள். நேற்று இரவு திறந்து விட்டிருக் கிறார்கள்."

"அப்படியானால், யுத்தம் வருவது நிஜந்தானா, சுவாமி!"

"பின் எதற்காக இவ்வளவு அமர்க் களமெல்லாம் என்று நினைத்தாய்!" என்றார் பிக்ஷு.

பரஞ்சோதி மௌனமாயிருந்தான்.

படகு அகழியின் அக்கரையை அடைந்தது.

(தொடரும்)



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. Tel : 237 6129.
E-mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our Website at: www.sspeetam.org

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

• காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ..	1,000/-
• மாலை சிற்றுண்டி	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு)	ரூ.	3,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-



-: விவேகானந்தர் தேசீய இயக்கம் :-

ஸ்ரீ சாரதா சக்தி பீடத்தின் சார்பில் "விவேகானந்தர் தேசீய இயக்கம்" என்ற அமைப்பு கிராமபுறத்தில் உள்ள ஏழை மாணவ, மாணவியர்களின் கல்வி, மத நல்லிணக்கம், மனித நேயம், சமய சமரசம் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.


இதன்மூலம் 702 கிராமங்களில் சுமார் 24,600 ஏழை மாணவ, மாணவியர்களுக்கு மாலை நேரத்தில் இலவச சிறப்புக் கல்வியும், (டியுஷன்) ஆன்மீக பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்த மேலான தொண்டுகள் சிறப்பாக நடைபெற தங்களின் அன்பையும், உதவியையும் நாடுகிறோம்.

ஒரு மையத்தின் (கிராமத்தின்) ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு (பௌர்ணமி அன்று சிறப்பு விருந்து உட்பட)	ரூ.	1,500/–
ஒரு மையத்தின் ஓராண்டிற்கு பராமரிப்புத் தொகை (12 மாதம் பௌர்ணமி சிறப்பு விருந்து உட்பட)	ரூ.	18,000/–

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்



இருக்க, மருந்துலேயே குணமாயிட்டுது. க்ளாட் இருந்ததால இலேசா வலிப்பு வந்துருச்சு. அதுக்காக எப்டாயின் மருந்து மூன்று வருஷம் சாப்பிட்டேன். சரியா மூன்று வருஷம் கழிச்சு பார்கின்ஸன் நோய் வந்திருச்சு... எனக்கு வந்தபிறகு தான் அப்படி ஒரு வியாதி இருக்கறதே எனக்குத் தெரிஞ்சது'' என்று சீராக, துல்லியமாகப் பேசுகிறார் கிருஷ்ணன்.

''பார்கின்ஸன் நோயாளிகள் தடுமாறித் தடுமாறித்தான் பேசுவார்கள். மருத்துவப் புத்தகங்களிலும் அப்படித்தான் இருக்கின்றன. ஆனால் நீங்கள் தெளிவாகப் பேசுகிறீர்களே...!'' என்றதும் அவர் மனைவி குறுக்

ஆர்ம்

ஓவியத்தை சிகிச்சைக்குப் பயன்படுத்த முடியுமா? முடியும் என்கிறார் சென்னையைச் சேர்ந்த கிருஷ்ணன். இவர் ஒரு டாக்டரல்ல! சிரித்தாலும், அழுதாலும், கோபப்பட்டாலும் சோகமாக இருந்தாலும் முகத்தில் எந்தவித உணர்வு மாற்றங்களையும் காண்பிக்க முடியாமல் இறுக்கமாக, இருக்க வைக்கும் பார்கின்ஸன்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்தான் இந்த கிருஷ்ணன். (உலகின் மிகப்பலமான மனிதனாக இருந்த குத்துச் சண்டை வீரர் முகமது அலி கூட இப்போது இந்த நோயால் தள்ளாடிக் கொண்டிருக்கிறார்.) தற்போது ஓவிய பயிற்சி மூலம் இந் நோயை ஓரளவு வென்று வந்திருக்கிறார் கிருஷ்ணன்.

''நான் ரொம்ப ஆக்டிவ் பர்ஸன். நிமிஷ நேரம்கூட என்னால சும்மா இருக்க முடியாது. துறுதுறுன்னு பெங்களூர்ல பிஸினஸ் பார்த்துக்கிட்டு இருந்தேன். டிசம்பர் 89ல் சின்ன சாலை விபத்து. தலையில அடி. ப்ரெய்ன்ல ஒரு க்ளாட். டாக்டர்கள் சர்ஜரி பண்ணலாமா? வேண்டாமான்னு யோசிச்சுட்டு





கடுமையான ஓவிய பயிற்சிமூலம், ஓவியத்தை ஒரு சிகிச்சை போல பயன்படுத்தி, நோயின் கடுமையிலிருந்து தன்னை மீட்டெடுத்திருக்கிறார். மருத்துவப் பார்வையில் இது ஒரு சாதனை.

தெரபி?

கிட்டு, "கடகடன்னு இப்படிப் பேசிட்டே இருப்பாரு சக்தி இருக்கிற வரைக்கும். அப்புறம் ஒரு வாக்கியம் கூட பேச மாட்டாரு ரொம்ப நேரம்" என்றார்.

"ஆமா... ஒரு 'ம்' சொல்றதுக்கு அரை நான் முழுக்க ட்ரை பண்ணுவேன். கடைசி வரைக்கும் சொல்லவே முடியாது. முதல்ல இந்தநோயை என் மனைவிதான் கவனித்தார். சாப்பிடும்போது ரொம்ப ஸ்லோவா சாப்பிட்டேன். என்னங்க இவ்வளவு ஸ்லோவா சாப்பிடறீங்கன்னு கேட்டாங்க. பல் விளக்கும்போதுகூட இப்படி ஸ்லோவாத்தான் இருக்குன்னேன். பிறகுதான் டாக்டர்ட்ட போனோம். அவர்தான் பார்கின்ஸன் வந்திருக்கிறதைச் சொன்னார்.

"ஆறு வருஷமா L-Dopa மாத்திரையெல்லாம் சாப்பிட்டேன். மூவ்மென்ட்ஸைப் பொறுத்தவரை கொஞ்சம் சிரமமா நடப்பேன். சில நேரத்துல நடந்துட்டே நிற்பேன். அவ்வளவுதான் திடீர்னு அந்த இடத்துலயிருந்து திரும்ப முடியாம அப்படியே நின்னுடுவேன். ஒரு ஸ்டெப் கூட எடுத்து வைக்க முடியாது.

"சில நேரங்கள்ல U மாதிரி வளைஞ்சிடுவேன். தலை பூமியை நோக்கி கிராவிட்டில இழுக்கற மாதிரி இழுக்கும். கால் இரண்டும் இறுக்கி கட்டின மாதிரி பிடிச்சுக்கும். ஆனா நான் விடமாட்டேன். சட்டுன்னு ரெண்டு யோகாசனம் போட்டு சக்தியைத் திரும்ப பெறுவேன்" என்று சொல்லும் கிருஷ்ணன் வேதாத்ரி மகரிஷியிடம் யோகா கற்றவராம்.

ஆறு வருடமாக பார்கின்ஸன் நோயால் பாதிக்கப்பட்ட இவர் கடுமையான ஓவிய பயிற்சிமூலம், ஓவியத்தை ஒரு

சிகிச்சை போல பயன்படுத்தி நோயின் கடுமையிலிருந்து தன்னை மீட்டெடுத்திருக்கிறார். மருத்துவப் பார்வையில் இது ஒரு சாதனை.

பார்கின்ஸன் நோயில் மிக அடிப்படையான கோளாறே நடுக்கம்தான். அதிலும் விரல்கள் சுத்தமாக கட்டுப்பாட்டிற்குள் இருக்காமல் நடுங்கும். ஃபைன் மூவ்மென்ட்ஸ் சாத்தியமில்லாதது. அப்படியிருக்க பிரஷ் வைத்துக் கொண்டு எப்படி ஓவியங்கள் வரைந்தார் கிருஷ்ணன்?

இவரது மகள் ரஜினி கிருஷ்ணன் தேர்ந்த ஓவியர்; சிற்பியும் கூட. அவர் ஏதும் கற்றுக் கொடுத்தாரா?

"இந்த நோய் வந்ததிலேர்ந்து அப்பாவை வெளியே எங்கேயும் அனுப்பறதில்லை. வீட்ல சும்மா இருக்கிறது அவரை ரொம்ப பாதிச்சது. மனசளவில தளர்ந்து போய்ட்டார். ஏதாவது செய்யணும் செய்யணும்னு சொல்லிக்கிட்டே இருந்தார். நான்தான் ஒரு நாள் விளையாட்டா டிராயிங் பண்றீங்களான்னு கேட்டேன். சரின்னு சொல்லி உடனே ஆரம்பிச்சுட்டார். அதுக்கு முன்னால அவருக்கு ஓவியம் வரையத் தெரியாது. முதல்ல கிரேயான்லதான் பழகச் சொன்னேன். சரியா வரலே... அப்புறம் வாட்டர்கலர்ல பழகினார். அதிலயும் சிக்கல். பிறகு போஸ்டர் கலர்ஸ் அவருக்குச் சூட்டபிளா இருந்தது. படத்தோட அளவும் 10 x 11 இன்ச் வச்சது அவருக்கு வசதியா இருந்தது.

"அப்பாவுக்கு ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடு என்பதால் அது தொடர்பான ஓவியங்களை வரையச் சொன்னேன். அதற்காக Tantra மற்றும் Yantra டயக்ராம்களை சஜஸ்ட் செய்தேன். அவற்றில் இருக்கிற வட்டம், முக்கோணம், சதுரம் போன்றவை வரைவதற்கும் எளிதாக இருக்கும் என்பதால் அப்படி ஒரு யோசனையைச் சொன்னேன்" என்கிறார் ரஜினி கிருஷ்ணன்.

பதினைந்து ஓவியங்களை வரைந்திருக்கிறார் கிருஷ்ணன். இந்த ஓவியங்களை விரைவில் கண்காட்சிக்கு வைக்க இருக்கிறாராம்.

"இப்படி ஓவியத்தை தெரபியாக பயன்படுத்துவதன் மூலம் பார்கின்ஸன் நோயிலிருந்து முழுமையாக விடுதலை பெறலாம் என்ற நம்பிக்கை இருக்கிறதா?"

"ஓவியம் வரைவதை ஒரு சிகிச்சையாக நினைச்சுப் பயன்படுத்தறதால மனசு ரொம்ப இலேசா ஆயிருக்கு. சுத்தமா டிப்ரஷன் இல்லை. சாத்தியமில்லாத சில கனவுகள் சாத்தியமாயிருக்கு" என்கிறார் கிருஷ்ணன்.


இவரின் ஓவியங்கள் பற்றி மகளும், ஓவியருமான ரஜினியிடம் கமென்ட் கேட்டோம்.

"இந்த ஓவியங்கள்ல இரண்டு மூன்று எனர்ஜி ஒன்றாகச் சேருகிறது. ஒரு வட்டத்தைப் பாதியாக்கி ஒரு மூலையில் வைத்து மீதியை வரையாமல் விட்டுவிடுவதால் எனர்ஜி வெளிப்புறம் கடத்தப்படுகிறது. அவர் பயன்படுத்தற கலர் காம்பினேஷனும், அவரோட கம்போஸிஷனும் பிடித்திருக்கிறது" என்றார்.

"இந்த ஓவிய சிகிச்சை உங்கள் தந்தைக்கு மட்டும்தானா ரஜினி?"

"இல்லை. 'ஆர்ட்தெரபி'யைப் பரவலாக்க அபார்ட் (APART) என்கிற பெயரில் அமைப்பு ஆரம்பிக்கப் போறேன். அதில் மனநலம் குறைந்த குழந்தைகள், பெரியவர்கள், அப்பா போல பார்கின்ஸன் நோயால் பாதிக்கப்பட்ட பெரியவர்கள்னு பலருக்கும் சொல்லிக் கொடுக்க விரும்பறேன். இதனால நோயிலிருந்து சின்ன விடுலையும், மன நிம்மதியும் கிடைக்கும் என்று நம்புகிறேன்" என்கிறார் ரஜினி உற்சாகமாக.

— வஸந்த் செந்தில்



"அந்தக் கடையில டீ.வி. வாங்குனா, கிரைண்டரும் இலவசமா தர்றாங்க!"

"டீ.விலதான் அரைச்ச மாவையே அரைக்கிறாங்க; கிரைண்டரிலேயாவது புதுசா ஏதாவது அரைச்சுக்கட்டும் என்பதற்காக இருக்கும்...!"

– தஞ்சை ராகவ், மகேஷ்





'மலரே மௌனமா...' — பாடலின் மூலம் அட! யாரய்யா இந்த ஆள் என்று, ரசிகர்களைத் திரும்பிப் பார்க்க வைத்த வித்யாசாகர், இசை அமைக்க வந்தது பத்து வருடங்களுக்கு முன்பு.

இவரைத் தொடக்கத்தில் தவற விட்ட தமிழ் சினிமா கொஞ்சம் தாமதமாய்ச் சுவீகரித்துக் கொண்டிருக்கிறது.

'தில்' பட பாடல்கள் ஹிட்டானதில் செம குஷியாய் இருந்த அவரைச் சந்தித்தோம்.

சினிமாவில் இசையமைக்க கொஞ்சம் பயிற்சியும், கேள்வி ஞானமும் இருந்தால் போதுமென்று நிறைய பேர் வருகிறார்களே அப்படித்தான் நீங்களும் வந்தீர்களா?

இசைக்கும் எனக்குமான தொடர்பு பற்றி சுருக்கமாய்ச் சொல்லி விடுகிறேன். எனது தாத்தா வராக நரசிம்ம மூர்த்தி, விஜய நகர அரசில் சமஸ்தான வித்வான். எனது தந்தை ராமச்சந்தர் அந்தப் பணியைத் தொடராமல் 1948-ல் சென்னைக்கு வந்து சினிமா இசையில் ஈடுபட்டவர். 1980வரையிலும் கிட்டத்தட்ட எல்லா இசையமைப்பாளர்களிடமும் பணிபுரிந்திருக்கிறார். இசைச் சூழ்நிலையிலேயே வளர்ந்த எனக்கு வாத்தியங்கள் மீது காதல். எனது பதினான்காவது வயதிலேயே ரெக்கார்டிங் போகத் தொடங்கினேன். அரும்பு மீசையோடு குறும்புக்காரனாகத் திரிய வேண்டிய வயதில், வைப்ரோஃபோன், ஸந்தூர், சைலோஃபோன், பினான் அன்ட் ஸ்பீல், கிட்டார், ஆர்மோனியம், பியானோ என்று பத்துக்கும் மேற்பட்ட கருவிகளைக் காதலித்தேன். பாடல் ஒலிப்பதிவு முடிந்த பிறகு, எல்லோரும் ஓடிச் சென்று இசையமைப்பாளரைப் பாராட்டுவதைப் பார்த்து எனக்குள் பரவசம் பூக்கும். எப்போது இசை இயக்குனர் ஆவோம் என்று இதயத்துள் வேர்க்கும்.

'பூமணம்'தான் என் முதல் படம். 1993-ல் 'ஜெய்ஹிந்த்', 'கர்ணா' ஆகிய படங்கள் எனக்குத் திருப்புமுனையாக அமைந்தன. கர்ணா படத்தில் இடம் பெற்ற 'மலரே மௌனமா' பாடல் பட்டிதொட்டி எங்கும் கேட்டது. பாட்டுக்கு வெற்றி கிடைத்தாலும் சில படங்கள் வெற்றி பெறவில்லை. அந்தச்





“கருவிகளைக் காதலித்தேன்!”

சோதனையான காலகட்டத்தில் “அழகிய ராவணனே” படத்தின் மூலம் மலையாள படவுலகம் என்னை அழைத்துக்கொண்டது. அவ்வப்போது பகம்பொன், சினேகிதியே என்று தமிழில் இசையமைத்து வந்த என்னை இப்போது சென்னை சிறை வைத்துக்கொண்டது.

இசையமைப்பாளர் எத்தனை உழைத்தாலும் இயக்குனர் கோட்டை விட்டால், அந்தப் படத்தில் பணியாற்றிய அத்தனை பேரும் பலியாகிவிடுவது இங்கே வாடிக்கை. அப்படித்தான் நீங்களும் பாதிக்கப்பட்டீர்கள் இல்லையா?

நிச்சயமாய் இல்லை. எல்லோரும் வெற்றி பெற வேண்டும் என்றுதான் உழைக்கிறோம். ஆனால் தீர்ப்பு சொல்கிற அதிகாரம் ரசிகர்கள் கையில் இருக்கிறது. தனிப்பட்ட முறையில் ஒன்றை நான் உறுதியாக நம்புகிறேன். உங்களுக்கு எது எப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அது அப்போது கிடைக்கும். நினைத்த மாத்திரத்தில் எல்லோருக்கும் வெற்றி கிடைத்து விட்டால், அதில் சுவையிருக்காது. அந்த வெற்றி மீது மரியாதையும் பக்தியும் இருக்காது. There is something beyond our control. அதை வணங்குவோம், அதனிடம் கோரிக்கை வைக்காமல்.

வார்த்தைகள் சிதையாமல், அவற்றை இசையின் ஆதிக்கத்தில் புதைய விட்டு விடாமல் மெட்டுப் போடும் வித்தையை எங்கே கற்றுக்கொண்டீர்கள்?

அதற்கு அடிப்படைக் காரணம் தமிழ் மீது சிறு வயது முதலே எனக்குள்ள ஈடுபாடு. பன்னிரண்டாம் வகுப்பு தேர்வில், தமிழ்ப் பாடத்தில் மாநிலத்தில் இரண்டாவது இடம்



பிடித்தேன். மனத்தில் தோன்றும் உணர்ச்சிகளை அவ்வப்போது கவிதைகளாகக் கிறுக்கும் பழக்கத்தில் நீண்ட காலம் கிறங்கிக் கிடந்ததுண்டு. ஒன்றை நான் உறுதியாகவும், ஆழமாகவும் நம்புகிறேன். ஒரு கவிதைக்கு அல்லது பாடலுக்கு இசை வடிவம் கொடுக்கிறபோது வார்த்தைகளுக்குத்தான் முதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமே தவிர, இசைக்கு அல்ல.

'பூவெல்லாம் உன் வாசம்' படத்தில் வைரமுத்துவின் கவிதைத் தொகுப்பிலிருந்து சில தனிக் கவிதைகளைத் தேர்வு செய்து, அதற்கு மெட்டுக் கட்டினேன். பாத்திரத்தின் குணாதிசயத்திற்கு ஏற்ப சில வார்த்தைகளை மட்டும் மாற்றிக் கொடுத்தார் கவிஞர். 'தில்' படத்தில் இடம் பெற்ற 'உன் சமையலறையில் நான் உப்பா? சர்க்கரையா?' பாடல் மெட்டுக்கு எழுதப் பட்டதல்ல. கபிலன் எழுதி வந்த எளிய கவிதை அது. அவரிடம் மெட்டைக் கொடுத்து எழுதி வரச் சொன்னால், அந்த வட்டத்திற்குள் சிக்கி, வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கி கவிதை கருச்சிதைவுதானே நடைபெறும்!

கவித்துவமில்லாத பாடல் இல்லாதபோது எத்தனை நளினம் இருந்தாலும் அந்த இசை நம்மை வசப்படுத்த முடியாமல், குறுகிய ஆயுளோடு குப்பைத் தொட்டிக்குப் போய் விடுகிறது.

அதிரடி இசையிலும் பாடல் வேண்டும் என்று இயக்குனர் கேட்டால் என்ன செய்வீர்கள்?

மறுக்க முடியாதுதான். ஆட்டம் போடுவதற்கு என்றே ஒரு சில பாடல்கள் வேண்டும். ரசிகர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்று கேட்கிற பாடல்களில் கவிதை பற்றியோ, வார்த்தை பற்றியோ, யாரும் கவலைப்படுவதில்லை. ஆனால் அதிலும் வார்த்தைகளுக்கு வாழ்க்கை தர வேண்டும் என்று விரும்புகிறேன். இதற்கு 'தில்' படத்தில் வரும் 'தில்' பாடலையே உதாரணமாகச் சொல்லலாம்.

ஒவ்வொரு படத்திலும் ஒரு பாடல்தானே என்று விட்டு விடுகிற இந்த மேற்கத்திய இசையின் பாதிப்பு, இன்று டிஸ்கோத்தே கிளப் வடிவில் கலாசார படையெடுப்பை இசைத் துறையிலும் திணித்திருக்கிறதே?

டிஸ்கோத்தே, பிட்ஸா இவையெல்லாம் லிபரலைஷேசனின் பாதிப்புகள். கவிதையில் சொல்ல வேண்டும் என்றால் கடந்து போகிற மேகங்கள், கார் மேகங்கள் அல்ல; கலாசாரம் நமக்குள்ளே, நமது ஜீனுக்குள்ளே இருக்கிறது.

உங்கள் இசை அமைப்பிற்கு ஆதாரமாக இருக்கும் இசை எது?

கேள்வி ஞானமும், இசைப் பரிச்சயமும்தான். ஒருவர் ஆங்கிலத்தில் சரளமாய்ப் பேச வேண்டும் என்றால், சொல் வளம் வேண்டும். அதற்குச் சொற்களின் பரிச்சயம் அவசியம். அப்படித்தான் இசைப் பரிச்சயமும் தேவைப்படுகிறது.

உங்களைப் பாதித்த கலாசார இசை என்று எதுவுமே கிடையாதா?

கர்நாடக இசைக் கடலின் மீது எனக்குத் தீராத காதல் உண்டு. ஆனால் நிறைய வருத்தமும் உண்டு. அது தியாகராஜ சுவாமி கீர்த்தனைகளாக இருக்கட்டும், ராமதாஸர் பாடியதாக இருக்கட்டும், அவர்களது பாடலின் உண்மையான ஜீவனை, இன்று நிறைய பேர் சிதைத்துப் பாடுகிறார்கள். தங்கள் இசை மேதமையை அதில் ஏற்றி, சங்கதிகள், கமகங்கள், ஆலாபனை என்ற போர்வையில், அதன் இயல்பை வழி வழியாகத் தொலைய விட்டு விட்டார்கள். கர்நாடக இசையைத் தாண்டி, இதயத்தை வருடும் எல்லா இசையும் பிடிக்கும். அல்பேனிய முஸ்லீம்கள் ஆயிரக்கணக்கில் இனப் படுகொலை செய்யப்பட்ட பின்னணியில் எடுக்கப்பட்ட 'சேவியர்' என்ற ஹாலிவுட் படத்தைச் சமீபத்தில் பார்த்தேன். அந்தப் படம் முழுக்க அர்ஜென்டினாவின் நாட்டுப்புற இசை. இதயத்தில் இரத்தம் கசிய வைத்த இசை!

சந்திப்பு:
விஷுவல்தாசன்

" நம்ம எம்.எல்.ஏ ஏன் தொகுதிக்கே வர்றதில்லை?"
"விளையாடாதீங்க. நீங்கதானே இந்த தொகுதி எம்.எல்.ஏ."
– பா. ஜெயக்குமார்




எல்லாவித சர்க்கரை வியாதிகளுக்கும் உடல் ரீதியாக முன்னேற்றமடைய தெய்வீக மூலிகை மருத்துவம்!



பல் வருட ஆராய்ச்சியின் மூலம், வேதங்களும், ஞானிகளும் போற்றியதும், கடவுளுக்கு சமமாகவும், நம் நாட்டின் பல் பொக்கிஷங்களில் ஒன்றாகவும் கருதக் கூடிய பல தெய்வீக மூலிகைகளைக் கொண்டு பக்க விளைவுகள் இல்லாதவகையில், தாமே தயார் செய்த தெய்வீக மூலிகை மருந்துகள் மூலம் அடிக்கடி இரவில் சிறுநீர் கழித்தல், தேவையில்லாத போதும் அதிக அளவில் தண்ணீர் தாகம், சிறு வேலைகள் செய்தாலும் களைப்பு, பலஹீனம், சரியான உணவு உட் கொண்டும் எடை குறைவு, உடல் மெலிவு, அதிகமான பசி, அதிக அளவு தண்ணீர் குடித்தும் நாவறட்சி, தோல் வறட்சி, பரிசோதனையின் போது இரத்தத்திலும், சிறுநீரிலும் சர்க்கரையில் அளவு அதிகம் இருத்தல், உடலில் காயம் ஏற்பட்டால் விரைவில் ஆறாமை, ஆண்மைக் குறைவு கால் பாதம் எரிச்சல், குத்தல், மருத்துப் போகுதல், வீக்கம், மயக்கம், BP, கண்பார்வை குறைவு, மூட்டுவலி போன்ற குறைகளை உடைய நாட்பட்ட சர்க்கரை நோயாளிகளுக்கும் எந்த விதமான அறிகுறிகளும் இல்லாத ஆரம்ப நிலை சர்க்கரை நோயாளிகளுக்கும், குழந்தை சர்க்கரை நோயாளி களுக்கும் (Juvenile Diabetics) சிறந்த முறையில் ஆலோசனைகளும் & சிகிச்சைகளும் அளிக்கப்படுகின்றது.

மற்றும் சிறுநீரகக் கோளாறு, எல்லாவிதமான இதயநோய், பல் வகையான புற்று நோய் ஆண்மைக்குறைவு, குழந்தையில்லாத குறை, அல்சர், மூட்டுவலி, ஆஸ்துமா, சொரியாசிஸ் எனப்படும் எல்லாரக சர்ம நோய்களுக்கும் தரமான மூலிகை சிகிச்சைப் பெறலாம். அணுக வேண்டிய முகவரி



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B.No:30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் Dt. - 635 601 ✆ 04179-20469, 22769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7 ✆ 6424285, 6427638

ஒவ்வொரு மாதமும் வெளியூர்களில் டாக்டரை நேரில் சந்திக்க

வேலூர் 2ந் தேதி - 12 pm to 2 pm (N.S.R.லாட்ஜ்) 26/A, ஆரணி ரோடு, (கண் ஆஸ்பத்திரி அருகில்) ✆ : 0416 - 213159	**காஞ்சிபுரம்** 2ந் தேதி - 5 pm to 6 pm ராஜம் லாட்ஜ், (பஸ் நிலையம் அருகில்) காமராஜர் தெரு. ✆ : 04112 - 22519	**கடலூர்** (S.A.D.L) 4ந் தேதி - 9 am to 11 am ஆற்காடு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 - 30707, 30717	**விழுப்புரம்** 4ந் தேதி - 2 pm to 3 pm ஹோட்டல் ஆனந்தா, பஸ் நிலையம் எதிரில், ✆ : 04146 - 22962, 24960	**திருவண்ணாமலை** 4ந் தேதி - 5 pm to 6 pm ராதா லாட்ஜ், (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04175 - 22536
மும்பை 7 & 8ந் தேதி - 10 am to 8 pm The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga (CR), ✆ : 022 - 4011589	**பெங்களூர்** 9ந் தேதி - 11 am to 1 pm ஹோட்டல் பிரட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பகவுடா ரோடு. ✆ : 080-2266374,2873013	**ஒசூர்** 9ந் தேதி - 4 pm to 5 pm சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 - 42899, 43321	**சேலம்** 12ந் தேதி - 11 am to 1 pm ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 - 449333, 449332	**ஈரோடு** 12ந் தேதி - 4 pm to 6 pm ஹோட்டல் ஆக்ஸ்போர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆ : 0424 - 226611/12/13/14
கோயம்புத்தூர் 13ந் தேதி - 9 am to 1 pm சேரன் பேலஸ் லாட்ஜ் (சாந்தி தியேட்டர் பின்புறம்) ✆ : 0422 - 302211, 302220	**மதுரை** 14ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் கிரண்ட்ஸ் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு. ✆ : 0452 - 743941	**தஞ்சாவூர்** 14ந் தேதி - 5 pm to 7 pm அசோகா லாட்ஜ், தஞ்சாவூர். ✆ : 04362 - 30021, 30022	**திருச்சி** 15ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் ஆனந்த், (சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில்) ✆ : 0431 - 415545	**நாமக்கல்** 15ந் தேதி - 2 pm to 4 pm ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, நாமக்கல். ✆ : 04286 - 20433, 21336
நியூடெல்லி 18 & 19ந் தேதி - 10 am to 8 pm South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh. ✆ : 011-5717126,5723651	**தர்மபுரி** 22ந் தேதி - 8 am to 10 am ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ், 103, அதியமான் லையன் ரோடு. ✆ : 04342 - 60226, 61472	**திருப்பூர்** 22ந் தேதி - 2 pm to 3 pm ராமகிருஷ்ணா லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் தெரு. ✆ : 0421 - 740418	**உடுமலைப்பேட்டை** 22ந் தேதி - 6 pm to 7 pm ஹோட்டல் குறிஞ்சி, (பஸ் நிலையம் எதிரில்) ✆ : 04252 - 24353	**திண்டுக்கல்** 23ந் தேதி - 9 am to 11 am ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம். ✆ : 0451 - 421056, 427017
தூத்துக்குடி 23ந் தேதி - 5 pm to 6 pm ஹோட்டல் ஆல்வின், தேவர்புரம் ரோடு. ✆ : 0461 - 327780	**திருநெல்வேலி** 24ந் தேதி - 8 am to 11 am ஹோட்டல் ஸ்ரீ சித்தரபதி, மதுரை ரோடு. ✆ : 0462 - 333312	**நாகர்கோவில்** 24ந் தேதி - 2 pm to 3 pm ஹோட்டல் சரண்யா, மீனாட்சிபுரம் ✆ : 04652 - 36078	**விருதுநகர்** 25ந் தேதி - 8 am to 10 am அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு. ✆ : 04562 - 45537	**கரூர்** 25ந் தேதி - 2 pm to 4 pm அசி லாட்ஜ், ஜவகர் பஜார் ✆ : 04324 - 63763, 62663

தகவல் : SUN, RAJ, VIJAY, DD T.V. களில் எமது பேட்டியை காணத் தவறியவர்கள், டாக்டரின் மூலிகைகள் பற்றிய 26 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **"எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்"** இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **"என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்"** என்ற இரு புத்தகத்தையும் பதிவுத் தபாலில் பெற ரூ.130/- மேற்கண்ட முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.



நவரசம்

வாழ்க்கை அதிசயங்கள் நிரம்பியதுதான். சரவணன் நேருக்கு நேர் ஒரு பெண்ணை எதிர்கொள்ளும்படி நேர்ந்து விட்டது. அவன் பொதுவாக சற்றுக் கூச்ச சுபாவி. அவனறிந்த பெண்கள் அம்மாவும், பாட்டியும்தான். கல்லூரி, பள்ளிகளில் பெண் நட்பு மிகக் கடுமையாக மறுக்கப்பட்ட துரதிர்ஷ்டசாலிகளாக சரவணன் அண்ட் கோவினர் இருந்தனர். உள்ளூர் இளம் பெண்களை அணுகிப் பேசுவதில் கிராமத்தில் எப்போதுமே நிறைய சிக்கல்கள் உண்டு. சின்ன ஊராதலால் ஒரு இளம் பெண்ணும் பையனும் எதிரெதிராகக் கிராஸ் செய்யும் போது ஒரு செகண்ட் நிமிர்ந்து பார்த்து ''என்ன இங்கிட்டு?'' என்றுகேட்டு விட்டால் போதும். ஊரே பதற்றமாகிவிடும். ஊர் முழுக்க பேச்சுக் கிளம்பி விடும். அதிலும் இவர்கள் படித்தவர்கள். எனவே இவர்களை ஊர் கவனித்த விதமே அலாதியானது. ஊரில் சில வில்லங்கம் பிடித்த கிழவர்களுண்டு. அதில் ஒரு சிலர் "இந்தப் பயலுக படிக்கவா போறாங்க... பள்ளிக் கூடத்தில சோடியா பொம்பளைப் புள்ளைகளோட பேசலாம்னுதான ஸ்டைல் பண்ணிக்கிட்டுப் போறங்க'' என்றெல்லாம் பேசுவார்கள்.

எனவே சரவணனும் நண்பர்களும் ''உள்ளூர்ல நாம மரியாதையா நடந்துக்கிரணும், பொம்பளைப் புள்ளைகளைப் பாக்குற சோலியெல்லாம் டவுனோட சரி'' என்று ஒரு உச்சி(வெயில்)மாநாட்டில் கூட்டாக முடிவெடுத்து அமல்படுத்தி விட்டனர்.

எனவே, அவர்கள் 'சைட்' அடிக்க வேண்டுமென்றால் ஒண்ணரை ரூபாய் செலவு பண்ணி டவுனுக்குப் போக வேண்டும். டவுனில் எந்தவொரு சந்தர்ப்பமும் பார்வை தாண்டிக் கனியவில்லை. மேலும் 'டவுன், டவுன்' என்று ஏதோ பெயரளவில் சொல்கிறார்களே தவிர, அந்த டவுன் எனப்படுவது யாதெனில் சற்றே விஸ்தரிக்கப்பட்ட கிராமம்தான். சுத்துப் பட்டிகளைச் சேர்ந்த டப்பாக்கட்டு விவசாயிகளும், சிட்டிப் பாவாடை தாவணியுடன் ரிப்பன் அணிந்து, வளையலும் கண் மையுமாக சினிமா வருகிற பெண்களும், கைலியோடு சைக்கிளில் உலாத்துகிற இளைஞர்களும்தான் அந்த டவுனில் வந்து போகிற ஜனத்திரள்.

எனவே ஒரு பெண்ணை அகஸ்மாத்தாகச் சந்திப்பதும் பேசுவதும் வெள்ளித்திரையில் மட்டுமே சரவணனுக்குக் காணக் கிடைத்த காட்சிகள். அட! சினிமாக்களில்தான் எத்தனை சுவாரஸ்யமான சாத்தியங்கள். அதில் கதாநாயகன் நாயகியை முதல் பத்து நிமிடங்களிலேயே தற்செயலாக சந்தித்து விடுகிறான். (இந்தத் தற்செயல் வெகு திட்டமிட்டு நிகழ்த்தப்படுகிறது) உடனே அழகாகப் பேசி அவளைக் கவர்ந்தும் விடுகிறான். அவர்களுக்கிடையே என்ன விதமாக உரையாடல் துவங்குவது? என்பது



போன்ற தயக்கங்கள் அறவே இல்லை.

சரவணனும், சகாக்களும் படம் பார்த்துவிட்டு பல சமயம் இது குறித்துப் பேசியிருக்கிறார்கள். நாயகனும், நாயகியும் ஒருவரையொருவர் உற்றுப் பார்த்தபடி நிற்கிறார்கள். அவர்களுக்குப் பேச்சே தேவையில்லை. இது நம்ம ஆளு என்று உள் மனசு பரஸ்பரம் கூச்சலிடுவது இருவருக்கும் சங்கேதமாய்க் கேட்ட வண்ணமிருக்கிறது. இசையமைக்கிற ஆசாமி வேறு 'லால்லால்லாலாலா' என்று சாட்டையாக வீசுகிறார். மனசுக்குள் பம்பரங்கள் சுழல்கின்றன. கேமரா சுழல்கிறது. அவன் அவளிடம் சொல்கிறான், "நீ இல்லேன்னா நான் உயிரோட இருக்க மாட்டேன். இந்த மலை சாட்சி, அலை சாட்சி' என்று அப்புராணியாகத் தம் பாட்டுக்கு இருக்கிறவற்றைச் சாட்சிக்கு இழுக்கிறான்.

இளைஞர்களுக்கு எப்போதும், எதற்கும் ஒருமுன் மாதிரி தேவைப்படுகிறது. சரவணன் போன்ற இளைஞர்கள் எந்தக் காதலைக் கண்டார்கள் சினிமாவைத் தவிர? அவர்கள் தத்தம் காதல் கனவுகளைக் கூட சினிமா சாயலில்தான் கண்டு பழகியிருந்தார்கள். தமக்கான காதல் கற்பனையைச் சொந்தமாக சிருஷ்டித்துக் கொள்ளக் கூட அந்த இளைஞர்களுக்குத் தெரியாமல் போனது.

சினிமாவில் பின்னணி இசையென்பது நிரம்பவும் சௌகர்யமானதொரு விஷயம். நிஜ வாழ்வில் சுற்றுப்புற ஓசைகள் தவிர்த்து பின்னணி இசை இல்லாதது துரதிருஷ்டம் தான். பல சந்தர்ப்பங்களில் சுற்றுப்புற ஓசைகள் சூழ்நிலைக்குப் பொருத்தமாக இருப்பது இல்லை.

சரவணன், கிருஷ்ணவேணி நேருக்குநேர் நிகழ்வின்போது, சோம்பேறிக் காக்கைகள் அங்கங்கே விரைந்து கொண்டிருந்தன. அது வரையிலும் பார்த்த அத்துணைத் திரைப்

வீடு 5



பாஸ்கர் சக்தி



''நேர்முகத் தேர்வுக்குப் போனியே என்ன ஆச்சு?''

''மறைமுகமா ஏற்கெனவே ஆளை செலக்ட் பண்ணிட்டாங்களாம்!''

– அம்பை தேவா

படக் காதல் காட்சிகளும் குழப்பமாக அவன் நினைவுக்கு வந்தன. சரவணன் ஒரு மாதிரி 'பேஸ்த்' அடித்து நின்றான்.

வயிற்றுக்குள் தவளைகள் குதித்தன. கிருஷ்ணவேணிக்கோ குப்பென வியர்த்தது. ஆனால் பெண்களுக்கான நளினம் அவளது இயல்பான கவசமாய்த் திகழ வெகு ஸ்டைலாக அவள்தான் முதலில் கேட்டாள்.

"வீட்ல சார் இருக்காரா?"

சரவணன் மூச்சை ஆழமாக இழுத்தபடியே அந்தச் செய்கையை அவளறியாமல் செய்யும் முயற்சியாகப் புறங்கையால் வாயைத் துடைத்துக் கொண்டான். பிறகு சொன்னான்...

"அப்பா இல்லை... என்னாங்க?"

"நாங்க புதுசாக் குடி வந்திருக்கோம்."

"அப்படியா?" என்றான் சரவணன்...

உடனே சொன்னான். "தெரியும்... தெரியும்!"

"அப்படியான்னீங்க? அப்புறம் தெரியும்ங்கறீங்க?" இதற்குள் கிருஷ்ணவேணி சரவணனின் தடுமாற்றத்தைப் புரிந்து கொண்டாள். 'கெத்'தாகப் பேச ஆரம்பித்தாள்.

சரவணன், "இல்லல்ல.... தெரியும்... நீங்க வந்ததை நாங்க பார்த்தோம்.... ஆனா.... அப்பா இல்லை."

கிருஷ்ணவேணி வெகு ஸ்டைலாக உதடுகளை நெளித்துப் பேசினாள், "சாவி வேணும்... வீட்டுல உள் ரூம் இருக்கே... அதோட சாவி... கொஞ்சம் சாமானை அதுக்குள் வைக்கணும். ஹால்ல வைச்சா இடைஞ்சலாயிருக்கும்."

சரவணன் இதற்குள்ளாக ஒரு துண்டைக் கொடியிலிருந்து உருவி, அதனைத் தோளில் போர்த்தி, நுனியை வாயில் கடித்தபடி அவளையே பார்த்தான்.

வெகு அழகாக இருக்கிறாள். குறிப்பாக கண் இமைகள் அழகாக முன் வளைந்து, அதிகக் கருமையாக இருப்பது காந்தம் மாதிரி இழுக்கிறது.

அவனது அந்த சிறுபிள்ளைத்தனமான செய்கை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. சுமாரான சட்டை ஒன்றை போட்டிருக்கிறான். தன்னோடு பேசும் போது கொஞ்சம் படபடவென்று வருகிறது போல. பேச்சு பேச்சாக இருக்க கொடித்துண்டை எடுத்து, தேவையில்லாமல் போர்த்தி அதன் நுனியைக் கடித்துக் கொண்டு... பார்க்க நன்றாயிருக்கிறது.

கிருஷ்ணவேணியின் மனசுக்குள்ளும் ஒரு இரயில் தடதடவென்று ஓடிக் கொண்டுதான் இருந்தது. கூவென்று கூவிக் கொண்டு சந்தோஷ ஓட்டம். விபத்தைச் சந்திக்க ஆவல் கொண்டு விரைவது போன்ற வேகம்.

"என்ன சொன்னீங்க?" சரவணன்.

"சாவி... உள்ரூம் சாவி."

"இருங்க... எடுத்துட்டு வர்றேன்... உக்காருங்க."

பரபரப்பாக உள்ளே போனான் சரவணன்.

எதிர்த்தாற்போல் அம்மா வந்தாள். இவனது பரபரப்பை வினோதமாகப் பார்த்தாள்.

"என்னடா?"

"ஒண்ணுமில்லை; சாவி... வேணும்... அந்தப் பொண்ணு வந்திருக்கு."

"எந்தப் பொண்ணுடா?"

சரவணன் ஸ்டூலை எடுத்துப் போட்டு மாடக்குழி, நிலை என்று தேடினான். இலேசாக மூச்சு வாங்கிக் கொண்டிருக்க, அம்மாவிடம் சொன்னான்.

"அந்தப் பொண்ணும்மா.. நம்ம பூவரச வீட்டுக்குக் குடி வந்திருக்காங்கல்ல அந்தப் பொண்ணு... உள்ரூம் சாவி வேணுமாம்."

அம்மா 'சட்'டென்று... "எதுக்கு! உள் ரூம் சாவி அவங்களுக்கு எதுக்கு? அதுல தட்டு முட்டுச் சாமான் எல்லாம் போட்டு வச்சிருக்கோம்... அதெல்லாம் குடுக்க முடியாது... உள்ள வீட்டுல பொழங்கிக்கிரச் சொல்லு..."

ஆனால் சரவணன் தொடர்ந்து தேடிக் கொண்டிருந்தான்.

"எலேய் சொல்றது தெரியலையா...? சாவி இல்லைன்னு சொல்லி விடுறா...."

சரவணன் நிலை குலைந்தான். என்ன கொடுமை! முதல் முதலாக ஓர் இளம்பெண், மேலும் அழகானவள், வீடு தேடி வந்து கண்ணொடு கண் நோக்கி, வாய்ச் சொற்களை வலுவிழக்கச் செய்துவிட்டு ஒரு திறவுகோலைக் கேட்கிறாள். இது மிக நல்ல சகுனம் அல்லவா? 'அது ஏறக்குறைய 'சொர்க்கத்தின் திறவுகோல்' என்று உன் மனசு சொல்கிறது. எனவேதான் சரவணன் உடல் முழுதும் கண்களாக மாறி அந்த சாவியைத் தேடுகிறான். ஆனால் இந்த அம்மா 'இல்லை' என்கிற ஒற்றைச் சொல்லில் சகல கதவுகளையும் தாழிட்டு மூடுகிறாளே! இதென்ன சோதனை...

"என்னடா... சொல்றது கேக்கலையா?"

"அம்மா சும்மாரு. அந்த சாவியைக் கேட்டு வந்திருக்காங்க... பாவம் குடுத்து விட்ரலாம்."

அம்மாவின் குரலில் கடுமை கூடியது.

"ந்தா பார்றா... சொன்னா அந்தளவுல விட்ரு... இருக்கற ரூமுக்குள்ள அவங்க புழங்கிக்கிரட்டும். உள்ரூமைத் திறக்கற வேலையெல்லாம் வேணாம். போய்ச் சொல்லு."

சரவணன் தேடுவதை நிறுத்தினான். அம்மாவிடம் வாதாட வாதாட அவன் பிடிவாதம் அதிகரிக்கும். நிச்சயம் அவள் சாவியைத் தரப் போவதில்லை. மேலும் தான் வற்புறுத்தினால் வாசலில் நிற்கிற கிருஷ்ணவேணியின் முன்னால் அவமானப் படும்படியான சொற்பிரயோகங்களை எதிர் கொள்ள நேரிடும். சரவணனின் மனம் இப்போது உடனடியாக கிருஷ்ணவேணியை முகங்கோணாது திருப்பியனுப்பத் தேவையான பதிலை யோசித்தது.

வாசலில் கிருஷ்ணவேணிக்கும் மிகுந்த அவஸ்தையாக இருந்தது. வெயில், பதற்றம், உள்ளே போனவன் சற்றுமுன் ஏற்படுத்திய மனச்சலனங்கள். அதன் விளைவான



ளர்ச்சி.

சரவணன் துண்டால் முகத்தைத் துடைத்தபடியே வெளியே வந்தான்.



அடிக்குரலில் பேசினான்.

"சாவியைத் தேடித்தான் எடுக்கணும். நீங்க போங்க. நான் எடுத்துட்டு வந்து தந்துட றேன்."

"எப்ப?" என்றாள் கிருஷ்ணவேணி.

"உடனே... சீக்கிரமா... கொணாந்து தந்துர்றேன்."

"ம் சரி" என்று தலையசைத்தாள். இலே சான ஒயில்மிகுந்த தலையசைப்பு. கிளியோபாட்ரா இப்படித்தான் அசைத் திருப்பாள்.

கிருஷ்ணவேணி வரைக்கும் இந்த தலையசைப்பு தொடர்கிறது. கர்வமும், பெருந்தன்மையுமா, போனால் போகிற தென்று ஒரு இலேசான சிரக்கம்பம். செத் தான் எதிரி!

சரவணன் அந்த ஆமோதிப்பை ஒரு பராரியின் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டு மனத்தில் குதுகுதுப்பு ஏற வினவினான்.

"உங்க பேரு என்னங்க?"

"கிருஷ்ணவேணி..."

"எம்பேரு சரவணன்."

"சரி வர்றேன்... சீக்கிரம் சாவியைக் கொண்டுட்டு வந்திருங்க..."

அவள் கட்டளையிட்டு விலகி நடந்தாள்.

பாதையையே பார்த்திருந்து விட்டு வீட்டுக்குள் போனான் சரவணன். மனசு முழுக்க "எப்படி இந்த அம்மாவைச் சமாளித்து கிருஷ்ணவேணியிடம் சாவியைக் கொண்டு சேர்ப்பது என்ற எண்ணம் ஓடியது.

உள்ளே அம்மாவும், பாட்டியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பாட்டி சொல்லிக் கொண்டிருந்தாள்.

"யாரைக் கேட்டு அந்த வீட்டை விட்டான்? முட்டாப்பய... அதுவும் பொண்ணுகளா இருக்காளு களாமே!"

"அதென்னமோ அத்தை, உங்க புள்ளையைத்தான் கேக்கணும். அவரு என்னைய எப்பத்தான் மதிச்சு, கேட்டு காரியம் பண்ணி யிருக்காரு. வீட்டைப் பேசி விட்டுட்டு வந்து எங்கிட்ட சொல்றாரு."

சரவணன் பாட்டியருகில் அமர்ந்தான். அம்மா, "இவன் என்னன்னா உள் ரூம் சாவி வேணும்னு வந்து கேக்குறான்" என்றாள்.

கிழவி சட்டென்று நிமிர்ந்தாள். அவள் முகத்திலொரு மாற்றம்.

"உள் ரூமுச் சாவியா... பூவரச வீட்டு உள் ரூம்மா?"

"ஆமா பாட்டி. அவங்க சாமான் போட்டு வைக்க வசதியாயிருக்குமேன்னு கேட்டாக..."

பாட்டியின் முகம், சரவணன் அதற்கு முன்பு அறிந்திராத வகையில் மாறியது. பயம் பரவியது.

"ஐய்யய்யோ... அதெல்லாம் வேணாம். இங்க பார்றா... அந்த ரூமைத் தொறக்கக் கூடாது. யாராயிருந்தாலும் அதைத் தொறந்து பாக்குற வேலை வச்சுக்கிறக் கூடாது... ஆமா சொல்லிப்புட்டேன். போய்ச் சொல்லிரு அவங்ககிட்ட..."

"ஏன் பாட்டி கோபப்படற?.."

"ம்...கோபப்படாம... எல்லாம் காரண மாகத்தான். எங்க உங்கப்பன்...? வரட்டும்... மொதல்ல அவங்களைக் காலி பண்ணச் சொல்லணும்."

சரவணனுக்குப் பாட்டியின் போக்கு விசித்திரமாய்ப் பட்டது... பாட்டி தலையை ஆட்டித் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள். என்ன முணுமுணுக்கிறா ளென்று கேட்க இயலவில்லை. திடீரென மீண்டும் சப்தமிட்டாள். இப்போது வெகு உரக்க... "அந்த ரூமைத் திறந்து பாத்து ராதடா... கெடுதல்.... சொல்லிட்டேன்."

(தொடரும்)

வரலொட்டி ரெங்கசாமி

மனத்தின் வலிமை!



பத்தொன்பதாம் நூற்றாண்டில் அச்சன் மூசாத் என்ற புகழ் பெற்ற ஆயுர்வேத வைத்தியர் கேரளாவில் வாழ்ந்து வந்தார். முறையான வைத்தியத்தினால் மட்டுமன்றி தமது அபார அறிவினாலும் சமயோசிதத்தாலும் நோய்களைத் தீர்ப்பதில் வல்லவர் அவர்.

ஒரு கேரளப் பெண்மணி பரணிலிருந்து எதையோ எடுக்க வலது கையைத் தூக்கப் போய் அந்தக் கை அப்படியே நின்றுவிட்டது. மற்ற வைத்தியர்கள் என்னவெல்லமோ செய்துபார்த்தார்கள். ஆனால் பாவம் அந்தப் பெண்மணியால் தன் கையை இறக்கவே முடியவில்லை. கடைசியில் அந்தப் பெண்ணை அச்சன் மூசாத்திடம் அழைத்து வந்தார்கள்.

கையை நன்றாகச் சோதித்தார் அச்சன். அந்தச் சமயம் அச்சனிடம் வைத்தியம் பெறுவதற்காகப் பலர் காத்துக்கொண்டிருந்தார்கள். எல்லார் முன்னிலையிலும் அந்தப் பெண்மணியை நிற்க வைத்தார். பின் நன்றாக இருந்த அந்தப் பெண்ணின் இடது கையையும் தூக்கித் தாழ்வாக இருந்த உத்தரத்துடன் சேர்த்துக் கட்டினார். வலது கையோ தூக்கியபடி நின்றுகொண்டிருந்தது.

இப்படி இரண்டு கைகளும் செயலிழந்துவிட்ட நிலையில் அச்சன் அந்தப் பெண்ணின் கணவனைப் பார்த்து அவள் இடுப்பில் கட்டியிருந்த ஒற்றை வேஷ்டியை உருவிவிடச் சொன்னார். அதிர்ந்தார் கணவர். அது எப்படி இவ்வளவு பேருக்கு நடுவில்? தயங்கினார். 'நீங்கள் செய்யவில்லை என்றால் அதை நானே செய்யப் போகிறேன்' என்று கர்ஜித்த அச்சன் அந்தப் பெண்ணின் இடுப்பு வேஷ்டியில் கைவைத்தார். தன் மானம் போகப் போகிறது என்று அந்தப் பெண்ணுக்கு ஏற்பட்ட அதீத அதிர்ச்சியில் செயலிழந்த அவரது வலது கை மீண்டும் செயல்பெற்று இடுப்புத் துணியைப் பிடித்துக்கொண்டது.


ஒரு பிரச்சினையைத் தீர்க்க முற்றிலும் மாறுபட்ட வழியில் அணுகினார் மருத்துவர். ஆயுர்வேத வைத்தியர் எல்லோரும் செய்ததையே செய்யாமல் ஒரு புதுமையான கோணத்தில் பிரச்னையைப் பார்த்து அதில் வெற்றியும் பெற்றார்.


அதைவிட முக்கியமானது நமது மனத்தின் வலிமை.

ஆபத்து என்று வரும்போது நம் மனம் அபூர்வ சக்திகளைத் தன்னிச்சையாகப் பெறுகிறது. அந்தச் சமயத்தில் தீராத பிரச்னைகள் எல்லாம் தீருகின்றன. 'என் கையை மடக்க முடியவில்லை' என்ற எண்ணம் அந்தப் பெண்ணின் மனத்தில் மேலோங்கி நின்ற வரை அந்த நோய்க் குணமாகவில்லை.



'மானத்துக்கு ஆபத்து' என்று அதைவிட பெரிய பிரச்னை வந்தபோது கையின் பிரச்னையை மனம் மறந்தே போனது. கையை மடக்க முடியாது என்ற இயலாமையும் மறந்து போக, நோயும் மறைந்தது.


தொழில்



இணைந்து வழங்கும்

பட்டுப் புடைவை

பரிசுப் போட்டி – 5

வைரம் எங்கே?

படத்தைப் பார்த்தீர்களா? இம்மாம் பெரிய படத்தில் ஒரு பகுதியில் வைரம் மறைந்திருக்கிறது. கண்டுபிடித்து அந்தப் பகுதியை மட்டும் கத்தரித்து, கீழுள்ள இடத்தில் ஒட்டி அனுப்பவும். சரியான விடை எழுதும் ஒரு நபருக்கு ரூ.**2500/-** மதிப்புள்ள பட்டுப் புடைவை பரிசு. கூப்பன்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி **10.9.01.** உறையின் மேல் 'பட்டுப்புடைவை பரிசுப் போட்டி-5' என்று குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பட்டுப் புடைவை பரிசுப் போட்டி – 5

என் பெயர் : ....

முகவரி : ....

....

....

....

....

இங்கே ஒட்டவும்

அவளை அறிமுகப்படுத்த வேண்டும் என்று யாருக்கும் தோன்றாமல் போனது ஆச்சரியம்தான்.

அல்லது அறிமுகப்படுத்தினார்களோ..?

இரண்டு நாளாய் நிறைய நிறைய அறிமுகங்களைச் செய்து கொண்டதில் யார்... எவர் என்றே தெரியாமல் போய் விட்டது.

மாலையும் கழுத்துமாய் மணக்க... மணக்க அவன் பக்கத்தில் நின்று கொண்டிருந்ததே புதிய அனுபவமாயிருந்தது. பேரானந்தமாயிருந்தது. 'இதோ பாருங்கள்... இந்த ஆறடி உசர... சிவந்த... சுருள் கிராப்... ஹேண்ட்ஸம் பர்ஸன் இப்போ எனக்குச் சொந்தமாக்கும்! எனக்கு மட்டுமே சொந்தமாக்கும்..!' என்று கூவத் தோன்றிற்று. வந்தவர்களையெல்லாம் சந்தோஷமாய் நமஸ்கரிக்க வைத்தது.

எல்லாரையும் விழுந்து விழுந்து வணங்கியதைப் போல் ராத்திரி தனியறையில் இருந்தபோது அவன் கால்களிலும் விழுந்து வணங்கினாள்.

"...ச்சு.. என்ன இது..!" என்று சட்டென்று தூக்கிக் கொண்டான்.

முதல் ஸ்பரிஸம்.

உடம்பு சிலிர்த்தது. நடுங்குவதுபோல் இருந்தது. இந்தச் சிலிர்ப்பும் நடுக்கமும் தேவைதானோ என்றும் இருந்தது.

எப்போது தூங்கினாள் என்றே நினைவில்லை. நாலரைக்குச் சட்டென்று விழிப்புக் கண்டது. உசுப்பி விட்டாற்போல் எழுந்து கொண்டாள்.

சமையலறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஃபில்டரில் இறங்கிக் கொண்டிருந்த காபியின் மணம் கும்மென்று அறை முழுக்க வியாபித்திருந்தது. நெற்றியில் விபூதி இட்டுக் கொண்டு சமையற்காரம்மாள் சுறுசுறுப்பாய் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். இவளை அங்கு எதிர்பாராததில் ஒரு கணம் திகைத்து- அடுத்த கணமே ட்ரேயில் இரண்டு காபி டபராக்களை அடுக்கி மௌனமாக இவளிடம் நீட்டினாள்.

காபி ட்ரேயுடன் அறைக்குள் நுழைந்த போது விழித்துக் கொண்டிருந்தான். பட்டு வேஷ்டியில்



இவளைப் பார்த்து வசீகரமாய்ச் சிரித்தான்.

"காபி பிரமாதம். நீயே போட்டியோ?"

"இல்லை. சமையல்காரம்மா!"

"சமையல்காரம்மா..?"

"சமையலறையில் இருந்தாங்களே. வெள்ளைப் புடைவை கட்டிண்டு..."

'ஹோ...'வென்று சிரித்தான்.

"சமையலறையில் இருந்தா சமையல் காரம்மாவா.."

"பின்ன யாரு..?"

"எங்க அண்ணி.."

"என்னது..?"

"என் அண்ணா ஒருத்தன் சின்ன வயசுலேயே காலமாயிட்டான்னு யாரும் சொல்லலையா உனக்கு..?"

சொல்லியிருந்தார்கள். பெண் பார்க்க வந்தபோது மொத்தம் மூன்று பிள்ளைகளில் இரண்டாவது பிள்ளை ஹார்ட் - அட்டாக்கில் போய் விட்டார் என்று. அவருடைய மனைவியா இவர்? என் ஓரகத்தியா. எப்படித் தவறிழைத்து விட்டேன். அவரிடத்தில் ஒரு வார்த்தைகூடப் பேசாமல்... ஒரு மரியாதைக்காகக் கூடப் புன்னகை செய்யாமல்... என்ன நினைத்திருப்பார் என்னைப் பற்றி?

"அவங்களை யாருமே எனக்கு அறிமுகப்படுத்தி வைக்கலை" என்றாள் தவிப்பாய்.

"ஸோ வாட்...? அவசியமில்லேன்னு நினைச்சிருப்பாங்க."

"அதெப்படி. அவங்களும் இந்த வீட்டு மருமகதானே..?"

சிரித்தான். "வசு.. உனக்குச் சொன்னால் புரியாது. நீ இந்த வீட்டுக்குப் புதுசு. அண்ணியே இதைப்பத்தியெல்லாம் கவலைப்பட மாட்டாங்க. தானுண்டு. தன் வேலையுண்டுன்னு கிடப்பாங்க..!"

அந்த பாஷை திடுக்கிட வைத்தது.

புகுந்த வீடு பற்றி முதல் முறையாய் மனசுக்குள் ஒரு கேள்வி எழுந்தது.

ஒரு மாதத்தில் எல்லாம் பிடிபட்டுவிட்டது. மொத்தமும் புரிந்து போயிற்று. இந்த வீடு. அதன் மனிதர்கள். அவர்களின் குணாதிசயங்கள். புரிந்து கொண்ட எதுவும் சந்தோஷமாயில்லை என்பதுதான் துக்கம்.

கல்யாணமான வீட்டின் மூத்த மகள் எப்போதும் இங்கேயே இருந்தாள். புருஷன் இவள் முந்தானையைப் பிடித்துக் கொள்ளாமல் அவன் அம்மாவின் முந்தானையையே பிடித்துக் கொண்டிருக்கிறான் என்பதுதான் கம்ப்ளைண்ட். எல்லா வீடுகளிலும் உள்ள கம்ப்ளைண்ட்தான். எல்லா மனைவிமார்களும் சொல்வதுதான். அதற்காக ஒருத்தி சண்டை போட்டுக்



பானுமதி

கொண்டு வருவாளா என்ன? வந்து இப்படித் தாய் வீட்டில் 'திண்..'ணென்று உட்கார்ந்து கொள்வாளா என்ன?

வீடா இது? பெரிய சத்திரம்போல் அல்லவா இருக்கிறது.

மூத்தவர்... அவர் மனைவி, குழந்தைகள். இவள்... இவள் புருஷன். மேற்படி கல்யாணமான நாத்தனார். அவளின் இரண்டு மகன்கள். இன்னொரு கல்யாணமாக வேண்டிய நாத்தனார், மாமியார். இவர்களோடு சமையலறையே கதியாகக் கிடக்கும் வீட்டின் இரண்டாவது விதவை மருமகள். பரிதாபத்துக்குரிய அவள் மூன்று வயசுப் பையன். இத்தனை பேருக்கும் ஒருத்தி தனியாகச் சமைக்கிறாள். வீடு பெருக்குகிறாள். வாசல் தெளிக்கிறாள். பாத்திரம் தேய்க்கிறாள். ஸ்கூல் போகும் நான்கு சிண்டுகளுக்கு டிபன் பாக்ஸ் தயார் செய்கிறாள். மைத்துனர்களுக்குக் கேரியர் அனுப்புகிறாள். காலேஜ் நாத்தனாரின் முகச் சிணுங்கல்களுக்குப் பயப்படுகிறாள். கல்யாணமான நாத்தனாரின் அதட்டல்களுக்கோ நடுங்கவே செய்கிறாள்.

ஆச்சரியமாயிருந்தது. இப்படிக்கூட மனிதர்கள் இருப்பார்களா மனிதாபிமானமே இல்லாமல். இதற்கெல்லாம் என்ன காரணம்? அவள் கணவன் இறந்துவிட்டான் என்ற ஒன்றே தானா? அவள் பிறந்த வீடு பலமில்லாதது என்பதா? இங்கிருந்து போய்விட்டால் பிழைப்புக்கு என்ன செய்வாள்? மூன்று வயசுப் பையனை எவ்விதம் வளர்த்து ஆளாக்குவாள் என்ற அலட்சியமா? என் கணவனும் இதற்கெல்லாம் உடன்பட்டவன் தானோ?

ஒரு ராத்திரி அவனிடம் சொன்னாள். "ஜானகி அக்கா இங்க ரொம்ப சிரமப்படறாங்க போலிருக்கே. மொத்தக் காரியமும் அவங்க தான் பண்றாங்க..."

"அண்ணாவும் மன்னியும் லவ் மேரியேஜ். அதர் கேஸ்ட். அண்ணா கொஞ்ச நாள் ஆந்திராவுல வேலையா இருந்தான். அங்க ஒரு வீடு எடுத்துண்டு தங்கியிருந்திருக்கான். இவ வீடும் பக்கத்துலதானாம். ஸோ, காதல் மலர்ந்துருச்சு. காதலிச்சதோடு விட்டிருந்தா தேவலை. இங்க வந்து அவளையேதான் கல்யாணம் பண்ணிப்பேன்னு ஒரே பிடிவாதம். கடைசில வேற வழியில்லாம ஒப்புக்கறாப்பல ஆயிடுத்து.

"ஆனா அம்மாவுக்கு இவளை அடியோடு பிடிக்கலை. பெரிய மன்னி இவகிட்ட முகம் குடுத்துங்கூட பேச மாட்டா. ஆனா அண்ணாவும் மன்னியும் ரொம்ப சந்தோஷமாவேதான் இருந்தாங்க. ஒரே வருஷத்துல குழந்தை. என்னாச்சுன்னே தெரியலை. திடீர்னு ஒரு நாள் அண்ணா ஆபீஸ்ல டேபிள் மேல கவிழ்ந்து விழுந்தானாம். மாஸிவ் அட்டாக். அதுதான் பர்ஸ்ட் டைம். அதுலயே போயிட்டான்..."

"ச்சு... ச்சு..."

"உள்ள காலை எடுத்து வச்சதுமே புள்ளையை முழுங்கிட்டான்னு அம்மாவுக்கு அவமேல ரொம்ப ரொம்பக் கோபம். ஆனா இவ, அம்மா காலைப் பிடிச்சுண்டு கெஞ்சறா. பிறந்த வீட்டுல இவளைச் சேத்துக்க மாட்டாங்களாம். இவளுக்கும் அங்க போறதுல விருப்பமே இல்லையாம். ஒரு வேலைக்காரி போலயாவது இங்கயே இருந்துடறேன்னு கெஞ்சினா."

"ஸோ. ஒரு வேலைக்காரி போலவே அவங்களை நடத்துறதுன்னு தீர்மானிச்சுட்டாங்க. நீங்க படிச்சவர். நீங்களும் இதையெல்லாம் பார்த்துண்டு... கடவுளே! அவங்க மனசு என்ன பாடுபடறதோ?"

"ஒரு பாடும் படாது! நீ புதுசுங்கறதால உனக்கு எல்லாம் புதுசாத் தெரியறது. ஆனா இங்க எல்லாருக்கும் எல்லாம் பழகிப் போச்சு."

"அதாவது... சௌகரியமாயிருக்கறவங்க சௌகரியமாயிருக்கப் பழகிட்டாங்க. கஷ்டப்படறவங்க கஷ்டத்துக்குப் பழகிட்டாங்க. யு மீன் தட்...?"

"ஐ மீன் ஐம் நாட் இன்ட்ரஸ்டட் இன் திஸ் சப்ஜெக்ட்" என்றான் மகா எரிச்சலாய்.

நாலரைக்கு எழுந்து குளித்து வசுமதி சமையலறைக்குள் நுழைந்தபோது ஜானகி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"வாங்க. டிகாக்ஷன் இறங்கிட்டிருக்கு. அஞ்சு நிமிஷத்துல காபி ரெடியாயிடும்."

"நான் காபிக்காக வரலை. உங்களுக்கு அஸிஸ்ட் பண்ண வந்திருக்கேன். உங்களுக்கு ஒத்தாசையா சமையலறையில வேலை பண்ண வந்திருக்கேன்னு சொன்னேன்."

"உங்க பாங்க் கடனில் வாங்கிய மாடு காணாமல் போயிடுச்சு சார்!"

"வாங்கிய கடனைத்தான் கட்டலை; மாட்டையாவது ஒழுங்கா கட்டி வெச்சிருக்கக் கூடாதாப்பா!"

- ஞா. ஞானமுத்து

அந்தப் பேச்சும் சிரிப்பும்.. 'இதோ நான் ஒருத்தி இருக்கேன் உனக்கு..' என்ற அபயமும் புரிபட, சட்டென்று அவள் கரம் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

உள்ளங்கையில் ஈரம் தெரிந்தது.

சாயந்தரம் ஒரு மணி நேரப் பர்மிஷனில் வசுமதி ஆபிஸிலிருந்து வீட்டுக்கு வந்தபோது மாமியாரும் பெரிய நாத்தனாரும் சினிமா போயிருந்தார்கள். சின்ன நாத்தனார் ஸ்டீரியோவில் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள். சமையலறையில் ஜானகி குழந்தைகளுக்குத் தோசை வார்த்து கொடுத்துக் கொண்டிருந்தாள்.

இவளைப் பார்த்ததுமே சட்டென்று சந்தோஷமாகி "வாங்க!" என்றாள். முகத்தில் ஒரு களை கூடிவிட்டதைப் போல் இருந்தது.

"வேலையெல்லாம் ஆச்சா?" என்றாள் அரிசி டப்பாவின் மீது உட்காந்து கொண்டு.

"ஆயிடுத்து. ரசம் மட்டும் கொஞ்சம் சூடு பண்ணி எறக்கணும்.."

"சூடு பண்ணிட்டதுமே கிளம்புங்க. கோயிலுக்குப் போயிட்டு வருவம்!"

"நானா!"

"ஆமாம். ஏன் கோயில் பிடிக்காதா உங்களுக்கு..?"

"வந்து... நான் எங்கியும் வெளியவே போறதில்லையே.." என்றாள்.

"ஏன். யாரும் போகக் கூடாதுன்னு சொன்னாங்களா?"

முகம் சுருக்கி யோசித்தாள். வாய் வார்த்தையாக யாரும் சொல்லவில்லைதான். ஆனால் குறிப்புகளால் உணர்த்தியிருந்தார்கள். வாயைத் திறந்து சொல்லாமலே ஒரு லக்ஷ்மணக் கோட்டை கிழித்திருந்தார்கள்.

"மாமி திட்டுவாங்களோன்னு பயமா இருக்கு."

"கோயில் போறதுக்கா..?"

"..."

"மாமி கேட்டா நான் சொல்லிக்கறேன். நீங்க கிளம்புங்க." வலுக்கட்டாயமாய் அவளை எழுப்பினாள்.

"**நா**ன் ஒன்னு கேட்பேன். கோச்சுக்க மாட்டீங்களே..?" என்றாள் வசு பிராகாரத்தில் ஒரு மூலையாய்ப் பார்த்து உட்கார்ந்ததும்.

"ஐயோ... உங்களைப் போயா?"

"உங்க கணவர் எந்தக் கம்பெனில வேலையாயிருந்தார்."

ஒரு தனியார் நிறுவனத்தின் பெயர் சொன்னாள்.

"அங்கயிருந்து உங்களுக்குப் பணம் ஒண்ணும் வரலையா?"

"ஒண்ணரை இலட்சமோ. ரெண்டோ வந்ததாச் சொன்னாங்க. ஆனா அவர் எல்லாத்தையும் அவங்கம்மா பேர்ல வெச்சிருந்தார். என் பேருக்கு மாத்தணும்னு சொல்லிட்டேயிருந்தார். அதுக்குள்ள இப்படியாகும்னு..."

"அந்தப் பணமெல்லாம் இப்ப எங்கே?"

"செலவாயிருக்கும்னு நினைக்கிறேன். வீட்டைக் கொஞ்சம் பெரிசு பண்ணாங்க. பெரிய நாத்தனார் பொண்ணு வயசுக்கு வந்தப்ப சத்திரமெல்லாம் எடுத்து கிரேண்டா பங்க்ஷன் பண்ணாங்க."



"நீங்க ஒண்ணும் கேக்கவே இல்லையா..?"

"என்னன்னு கேக்கறது? நானே இந்த வீட்டுக்கு வேண்டாத விருந்தாளியா வந்திருந்தேன். அவர் செத்துப் போனதே என்னாலதான்னு எல்லாரும் என்னைப் போட்டுக் குதறிட்டிருந்தாங்க. தவிர, என் துரதிர்ஷ்டம்தான் அவரை அடிச்சுட்டதோன்னு எனக்கேகூட ஒரு பயம்."

அவர்கள் வீட்டுக்குத் திரும்பியபோது கூடம் மொத்தமும் அவர்களை உக்கிரமாய் வெறித்தது.

"எங்க போயிட்டு வரே வசு..?" என்றார் மாமியார்.

"கோயிலுக்கு. கிருத்திகையில்லையா.. முருகனுக்குச் சந்தனக்காப்பு, அபிஷேகம்."

"கோயிலுக்குப் போகணும்னா நீ அவன் கூடப் போயிட்டு வா. இவளையெல்லாம் அழைச்சுண்டு போகாதே."

"அவர் வரதுக்கு ரொம்ப இலேட்டாகும்ணார். அதான் இவங்களை அழைச்சுண்டு போனேன்."

"அதான் இனிமே வேண்டாங்கறேன்."

"கோயிலுக்குப் போனா என்ன தப்பு?" என்றாள் இலேசாய்க் குரல் உயர்த்தி.

"சரி, தப்பெல்லாம் கேக்காண்டாம்! அவ எங்கயும் போப்படாது. துக்கிரி. அவ இந்த வீட்டுக்குள்ளே காலை எடுத்து வெச்சதுமே முழுசா இருந்த எங்கண்ணாவை அப்படியே தாரை வார்த்துக் குடுத்துட்டா." மூத்த நாத்தனார்தான் படபடவென்று பொரிந்தாள்.

"விதிவசத்தால் ஒருத்தர் செத்துப்போய் அவரைத் தாரை வார்த்துக் கொடுக்க நேர்றதுல நம்ம தப்பு ஒண்ணுமே இல்லை. ஆனா புருஷன் உயிரோடு இருக்கறச்சயே அவரைத் தாரை வார்த்துக் கொடுத்திறதுதான் தப்பு. நேத்திக்கு உங்களவரைப் பார்த்தேன். பீச் ரோட்ல யாரோ ஒரு பொண்ணோடு கையைக் கோத்துண்டு போயிண்டிருந்தார்."

"அம்மா.. அம்மா.. இவ பேசறதைக் கேட்டியா? நான் இங்க இருக்கிறதைச் சொல்லிக் காட்டறா. அவர் யார் கூடவோ சுத்திண்டிக்கார்னு வேணும்ன்னே பொய் சொல்றா."

"நீங்க பொய்யின்னே நினைச்சுண்டிருங்க. ஆனா நாளைக்கு விஷயம் கை மீறிப் போச்சுன்னா மொத்த நஷ்டமும் உங்களுக்குத்தான். உங்களோட வெச்சுப் பாக்கறப்ப, புருஷன் செத்தாக்கூட அவர் வாழ்ந்த வீடே போதும்னு இருக்கிற ஜானகிக்கா எவ்வளவோ பெட்டர்."

"அவளுக்கு வேற போக்கிடம் இல்லை."

"அவங்களுக்கு இருக்கு. உங்களதுதான் சந்தேகம்." என்று விருட்டென்று உள்ளே போனாள்.

"என்னங்க... குடிசை பத்திக்கிட்டு எரியுது. அணைக்காம சும்மா நிக்கறீங்க?"

"இருக்கற தண்ணியை அதில ஊத்திப்புட்டு குடிக்க தண்ணி இல்லாம லோ லோன்னு அலையச் சொல்றியா?"

- புளியரை கணேசன்



"வசு... என்ன நீ இப்படி ஸீன் க்ரியேட் பண்றே? அக்கா பாரு. எப்படி அழுதழுது முகம் சிவந்து போயிட்டா.? நீயொருத்தி பேசறதாலே மட்டும் இங்கே எதுவும் மாறிடப் போறதில்லே வசு. எல்லாம் அப்படியப்படியே தான் இருக்கப் போறது.."

"அப்படின்னா நாம இந்த வீட்டுல இருக்கப் போறதில்லை."

"வாட் டு யு மீன்?"

"தனியா போயிடலாம்! மன்னியும் நம்ம கூட வராங்க. நீங்க, நான், மன்னி அவர் பையன் எல்லாரும் அழகா சின்னதா ஒரு கூட்டுக் குடும்பம் நடத்தப் போறோம்."

"தனிக்குடித்தனம் போற ஆசை வந்தாச்சுன்னா தான் மட்டும் புறப்பட்டுப் போற வழியைப் பார்க்கணும். எதுக்கு அடுத்தவங்களையும் கிளப்பறது? இப்பவே ஆபீசுக்குப் பாதி நாள் இலேட்டு. இதுல சமையல். குழந்தைன்னு எல்லாத்தையும் கவனிச்சுட்டுப் போறதாயிருந்தா பேசாம வேலையை விட்டுடலாம்."

வீட்டின் மூத்த மருமகள்தான் நடுக் கூடத்தில் நின்று கத்திக் கொண்டிருந்தாள். ஜானகியின் சேவையில் குளிர் காய்ந்து கொண்டிருந்தவளுக்கு இனி அது முடியாதோ என்ற பயத்தில் சூடாகவே வார்த்தைகள் வந்தன.

வசுமதி பீரோ திறந்து ஒரு நீண்ட கவரை எடுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தாள்.

"வத்சலாக்கா! இதைக் கொஞ்சம் படிச்சுப் பாருங்களேன் ப்ளீஸ்."

படித்தவள் முகம் பேயறைந்ததுபோல் ஆயிற்று. "என்னதிது. அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர். ஜானகி வேலைக்குப் போகப் போறாளா..?"

"ஆமாம். நீங்களும் நானும் போறச்சே அவங்க போகக் கூடாதா என்ன? ஜானுக்கா பத்தாவதுதான் படிச்சிருந்தாலும் டைப்ரைட்டிங், எம்ப்ராய்டரி எல்லாம் பாஸ் பண்ணி கவர்ன்மெண்ட் சர்டிபிகேட் வெச்சிருக்காங்க. ஸோ. ஆபீஸ்ல தெரிஞ்சவங்க மூலமா ட்ரை பண்ணி கார்ப்பரேஷன் ஸ்கூல்ல டைலரிங் டீச்சரா அப்பாயின்ட்மெண்ட் வாங்கியாச்சு."

வீடு நிசப்தமாயிருந்தது. இந்த நெற்றியடி யாரும் எதிர்பாராதது.

மாமியார்தான் மெல்லக் கிளப்பினாள். "என்னவோ சம்பாதிக்கிறவளாச்சேன்னு பார்த்தேன். ஆனா நீ ரொம்பத்தான் பேசறே வசு. இந்த வீட்ல தனிக்குடித்தனம்னு யாரும்

பேசினதில்ல. ஆனா நீ பேசினே. அப்புறம் 'அவளை'யும் கூட்டிண்டு போப்போறேன்னு சொன்னே. இப்ப 'அவ' வேலைக்குப் போப் போறான்னும் சொல்ற. நீ என்ன எங்களை அசிங்கப்படுத்தணும்னே கிளம்பியிருக்கியா? இப்ப சொல்றன் கேட்டுக்க. அவளுக்குன்னு விதிச்சிருக்கிற இடம் சமையலறைதான். மீறி நீங்க போறீங்கன்னா..." மாமியார் ஒரு நிமிடம் நிறுத்தி மூச்சு வாங்கினாள். "...மறுபடி இந்த வீட்டுப் பக்கம் வரக் கூடாது."

வசு மாமியாரைப் பார்த்துப் புன்னகை செய்தாள். எதுவும் வேகவில்லை.

அந்த வீடு மிக அழகாய் இருந்தது. நகரிலிருந்து சற்றே விலகி. தனிகேட், காம்பௌண்டுடன். வாசலில் அழகாய் குரோட்டன்ஸ்கள் நடப்பட்டு.. பாத்திகளில் பட்டு ரோஜா பரப்பியிருந்தது.

சமையலறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. குக்கர் ஓங்கி விசிலடிக்க வசு ஓடிப் போய்க் குக்கரை இறக்க ஜானகி வாணலியை ஏற்றினாள்.

ஜானுவின் முகத்தில் ஒரு சிரிப்பு படர்ந் திருந்தது. எத்தனை குழந்தைகள் அவளை டீச்சர்... டீச்சர்... என்று சுற்றி வருகிறார்கள். வாழ்க்கை திடீரென்று இத்தனை வசீகரமாய் மாறிவிடும் என்று நினைத்தாளா என்ன? மாமியாரின் கத்தல் மட்டும் நெஞ்சின் ஒரு மூலையில் உறுத்திக் கொண்டே இருந்தது.

"ஜானுக்கா... கணேஷ் என்ன இன்னுமா தூங்கறான்? அவனை எழுப்புங்க. எட்டு மணிக்கு ஸ்கூல் பஸ் வந்துடும். இது பெரிய கான்வெண்ட்.. டிஸிப்ளின் ரொம்ப முக்கியம். பார்த்துண்டேயிருங்க. ஒரு நாளைக்கு கணேஷ் எப்படி பெரிய ஆளா வரப் போறான்னு."

வசு உற்சாகமாய்க் குரல் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஜானகி கண்கள் மூடி மெய் மறந்திருந்தாள். அவள் மகன் பெரிய ஆளாக வரப் போகிறான். வந்து அவளுக்குப் பெரிய தோள் துணையாக இருக்கப் போகிறான். தெய்வம் போல் இந்த வசு வந்து...

தோட்டத்திலிருந்து கும்மென்று மலர்களின் மணம் தவழ்ந்து வந்தது. சில்லென்று காற்று வீசியது. எம்.எஸ். தன் இனிய குரலில் எங்கேயோ சுப்ரபாதம் பொழிந்து கொண் டிருந்தார்.

ஜானகி குனிந்து கணேஷின் முன்னுச்சியில் மென்மையாக முத்தமிட்டாள். போர்வையை உதறி மடித்து வைத்தாள். ஜன்னல்களை விரியத் திறந்தாள். அங்கே இருள் வேகமாக விலகிக் கொண்டிருந்தது.

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

திருவள்ளூர் எம்பெருமானைப் பற்றிச் சொன்னேன். தேவதைகளெல்லாம் ஓடி வந்து சேவிக்கும் ஏற்றமுடையவன் அவன். கனகவல்லி தாயாரோடு - வசுமதி என்றும் பெயர் அவளுக்கு - சேர்ந்து இருக்கிறான். அவனைச் சேவியுங்கள் என்கிறார் - சாலிவாகன மஹரிஷி என்பவர் அழகாகச் சொல்கிறார்:

அந்த ஊரில் பெரிய புஷ்கரிணி உண்டு; எல்லோரும் பார்க்கலாம். அதற்கு ஹ்ருத்தாபநாசினி என்று பெயர். ஹ்ருதயத்திலே இருக்கிற தாபத்தைப் போக்கக் கூடியது. அப்படிப்பட்ட உயர்ந்த புஷ்கரிணி அது. விஜயகோடி விமான சாயையிலே எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறான் அந்த ஊரிலே.

சாக்ஷாத் விஷ்ணு: சதுர்புஜ:

நான்கு புஜங்களோடு ஆஸ்சர்யமாக விஷ்ணுவானவன் அந்த க்ஷேத்திரத்திலே இருக்கிறான். அப்படிப்பட்டவனை சிந்தனை பண்ணுங்கள்; எம்பெருமானை தியானம் பண்ணுங்கள்... அது மட்டுமல்ல; எப்போதும் உயர்ந்த திருநாமங்களைச் சொல்லுங்கள் என்கிறார்.

இந்த மஹரிஷி எம் பெருமானை தன் தவத்தினாலே அந்த இடத்திலேயே ப்ரத்யக்ஷமாக்கிக்கொண்டு, கிம் க்ரஹம்? எது எனக்குப் படுத்துக் கொள்ள க்ரஹம்? எது என் ஊர்? என்று கேட்டார். 'இந்த இடத்திலேதான்' என்று காண்பித்தார்! திரு எவ் உள் - என்று அந்த இடத்துக்குப் பெயர் ஆயிற்று. அதுவே திருவள்ளூர் என்று இப்போது அழைக்கப்படுகிறது.

அப்படிப்பட்ட க்ஷேத்திரத்திலே வேணுகோபாலன் சாத்துப்படியிலே அழகாகக் குழல் ஊதிக்கொண்டு எம்பெருமான் உத்ஸவம் கண்டு ஆன்கிறான்.

அவனேதான் கண்ணன், வீரராகவன். இரண்டு விதமாகவும் அவனை அனுபவிக்கிறார் திருமங்கையாழ்வார். மிகவும் விசேஷமான க்ஷேத்திரம் அது.

அவன் திருநாமத்தைச் சொல்லக்கூடிய வகையிலே அமைந்த சஹஸ்ரநாமத்தின் முதல் மூன்று சுலோகங்கள் காயத்ரியினுடைய பிரதாபத்தை எடுத்துக்காட்டக் கூடியதாகவும் அஷ்டாக்ஷரத்தினுடைய பிரதாபத்தை எடுத்துக்காட்டக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது. இந்த மூன்றின் விளக்கமே, மற்ற திருநாமங்களெல்லாம், இவற்றை விளக்க வந்தவையே அந்தத் திருநாமங்கள்.

பிரும்ம சூத்திரத்திலும் முதல் நான்கு சூத்திரங்கள்தான் ரொம்ப விசேஷமாக, பின்னால் வருகிற பல அத்தியாயங்களாக மாறுகிறது. இந்த நான்கு சூத்திரங்களின் பொருளை நன்கு உணர்ந்தோமேயானால் மீதி சூத்திரங்களை நன்கு உணர்ந்தவர்களாக ஆவோம். அதுபோல் சஹஸ்ரநாமத்தின் முதல் மூன்று சுலோகங்களுடைய பொருளை நன்றாகப் பார்த்தால் மற்ற எல்லா திருநாமங்களும் இந்த மூன்றினுள் அடங்கி நிற்கும். அப்படிப்பட்ட ஏற்றமுடைய, திவ்யமான திருநாமங்கள் அவை.

நாராயண உபநிஷத்தின் முதல் மந்திரமும் இதையே நமக்குக் காட்டுகிறது. நாராயண உபநிஷத்தின் ஆரம்பமே சஹஸ்ரநாமத்தின் முதல் சுலோகம்தான்.

அதிலே பார்த்தோமானால் பகவான் எங்கெங்கு இருக்கிறான், எந்தெந்த இடத்தில் வாஸம் பண்ணுகிறான் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

தன் தடக்கையின் கீழ் சகலத்தையும் அடக்கி ஆளக் கூடியவன் எம்பெருமான். அவன் வைகுண்டத்திலே எழுந்தருளியிருக்கிற

காட்சியை அருணம் என்கிற வேத ஸாரத்திலே பார்க்கிறோம்:

ஆயுளை அவன் நமக்குக் கொடுக்கட்டும்


நல்ல கீர்த்தியைக் கொடுக்கட்டும்

சத்ஸந்தான செள பாக்யத்தைக் கொடுக் கட்டும்...

என்று வேண்டு கிறது.

அவன் எங்கே இருக்கிறான் என்றால், அம்ருதத்தினால் சூழப்பட்ட திவ்யமான லோகத்திலே இருக்கிறான்.

அம்ருதத்தால் சூழப்பட்ட லோகம் என்றால் அது வைகுண்டத்தைக் குறிக் கிறது. அந்த வைகுண்டத்தைச் சுற்றி விரஜா என்று ஒரு நதி ஓடுகிறது. எப்படி பொன்னி சூழ் திரு வரங்கன், காவிரியால் சூழப் பட்டிருக்கிறான்...? பூலோக வைகுண்டன் என்றே ரங்க நாதனுக்குப் பெயர் அல் லவா! அந்த வைகுண்



27

டத்தையே உரித்து வைத்தாற்போல் அல்லவா இருக்கிறது ஸ்ரீரங்கம்! அங்கேயும் சப்த பிராகாரம்; இங்கேயும் சப்த பிராகாரம். ஆகையினால் பரவாசுதேவன் என்று பெயர் அந்த வைகுண்டத்திலே இருக்கிற பரமாத்மாவுக்கு...

அந்த வைகுண்டத்திலே, வண்டுகளெல்லாம் ஹரீ... ஹரி ஹரி... ஹரி ஹரீ... என்று ஸாமகானம் பண்ணுகிறதாம்!

– அது மாத்திரமில்லை. பகவான் அழகாக மஹாலக்ஷ்மியுடைய கையைப் பிடித்துக் கொண்டு சஞ்சாரம் பண்ணுகிறானாம் வனத்திலே.

வைகுண்டத்திலே எத்தனையோ விதமான வனங்கள்; எத்தனையோ விதமான மணி மண்டபங்கள்; எத்தனையோ உத்யான வனங்கள்...

பத்து புஷ்பச் செடிகள் இருக்கும். இடையிலே ஒரு துளஸி இருக்குமாம். மறுபடியும் பத்து புஷ்பச் செடிகள்; மறுபடியும் துளஸி...

பகவான், லக்ஷ்மியினுடைய திருக்கரத்தைப் பிடித்துக்கொண்டு போகிறானே... இந்தப் புஷ்பங்களெல்லாம் இருக்கிற இடத்தைத் திரும்பியே பார்க்க மாட்டான்! துளஸியிடம் போய் நின்று கொண்டுவிடுவான். நின்று கொண்டு ஒரு மணி நேரம் உபன்யாஸம். துளஸி மஹாத்மியம்! ''அடடா! இந்தத் துளஸியை என்னவென்று சொல்வேன்! இந்தத் துளஸியை நான் போட்டுக் கொண்டிருப்பதனாலேதானே எனக்கே அழகு ஏற்படுகிறது! துளஸி தன்ய ஜன்மா!...''

நித்யம் துளஸியை பகவானுக்காக நாம் பறிக்கிறோம். 'துளஸி! நீ அம்ருத ஜன்மா. உனக்கு மரணம் என்பதே கிடையாது. இப்போது இந்தச் செடியிலிருந்து உன்னை விடுவிக்கிறேன். கேசவனின் பொருட்டு விடுவிக்கிறேன்...' என்று சொல்லித்தான் நாம் பறிக்க வேண்டும்.

'கேசவனின் பொருட்டு' என்றதுமே தன்னை அப்படியே அர்ப்பணம் பண்ணிக் கொள்கிறாளாம் துளஸி மாதா!

ஆகையினாலே, 'கேசவப்ரியே! கேசவனுக்கு ரொம்பப் ப்ரியமானவளே!' என்று சொல்லி கட்டை விரலையும் நடுவிரலையும் ஒன்று சேர்த்து, நகம் படாமல் சதையினாலேயே துளஸியை கிரஹிக்க வேண்டும்.

துளஸியைப் பிராதஹ் காலத்தில்தான் பறிக்கலாம். சாயங்காலத்தில் பறித்து, ஈரத் துணியில் சுற்றி வைத்து மறுநாள் சார்த்தக் கூடாது. புஷ்ப சங்கிரஹணத்துக்கு என்று காலம் இருக்கிறது. துளசி சங்கிரஹணத்துக்கு என்று காலம் இருக்கிறது. ஸ்த்ரீகள் துளஸியைப் பறிக்கக்கூடாது; ஆய்வது கூடாது...

அப்படிப்பட்ட துளஸி கிட்டே போய் நின்று பகவான் உபன்யாஸம் சொல்கிறான். சொல்வது யார்...? பகவான்!

கேட்பது யார்...? மஹாலக்ஷ்மி! அவள் கேட்டுக் கொண்டேயிருக்கிறாள்.

கேட்டு முடிந்தவுடனே மறுபடியும் நடந்து போய்க் கொண்டேயிருப்பானாம். மறுபடியும் புஷ்பச் செடிகளையெல்லாம் பார்க்கவே மாட்டானாம்! துளஸியிடம் போய் நின்று கொண்டுவிடுவானாம்!


புஷ்பச் செடிகளெல்லாம் என்ன நினைக்கும்?

'என்ன அக்கிரமம்! நாமெல்லாம் வேண்டாமா இவருக்கு? துளஸி மாத்திரம்தானா? பார்ப்போம்! நம்மை மாலை கட்டி யாராவது சமர்ப்பித்தால் அவன் திருமேனியிலே ஏறக்கூடாது!' என்று எல்லாம் ஒரு கட்சியாகச் சேர்ந்து கொள்ளலாமல்லவா!

ஆனால், அந்த புஷ்பங்களெல்லாம் என்ன நினைக்கிறதாம்...?

'அடடா! நாமெல்லாம் என்ன பாக்கியம்

அருள்வாக்கு



எவ்வளவுதான் அலசி அலசி விரிவாக எழுதினாலும் நூறாயிரம் சமாசாரங்கள் வந்து சேர்கிற மனுஷ்ய வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சமும் இப்படித்தான் என்று எழுதி வைத்து நிர்ணயம் பண்ண முடியாது. எழுத்திலே நிர்த்தாரணம் செய்வது சட்ட மாதிரி நிர்ப்பந்தமாகத்தான் தோன்றும். நன்றாகக் கட்டுப்பாடு செய்கிற சட்ட விதிகள் வேண்டும்தான். நம் சாஸ்திரங்களில் இப்படி நிறைய இருக்கத்தான் செய்கின்றன. சுதந்தரம், ஜனநாயகம் என்று பெரிசாகச் சொல்வதெல்லாம் யதார்த்தத்தில் மனம் போனபடி நடப்பதாகவும், அசக்தமான நல்லவர்களை ஒடுக்கி பலிஷ்டரான முரடர்கள் ஸ்வயேச்சையாகக் கஷ்டப்படுத்துவதாகவுமே இருப்பதைப் பார்க்கிறோம். ஆகையால் விதிகளைப் போட்டு ஜனங்களைக் கட்டுப்படுத்தத்தான் வேண்டும். ஆனாலும் இதிலும் ஒரு 'லிமிட்' வேண்டும். கட்டுப்பாடு பண்ணுவதற்கும் ஒரு கட்டுப்பாடு வேண்டும். இல்லாவிட்டால் மனுஷ்ய ஸ்வபாவப்படி, ஒரேயடியாகச் சட்டம்

பண்ணினோமோ இந்தத் துளஸியை நம் கோஷ்டியிலே பெற...! இந்தத் துளஸியே நம் கோஷ்டியில் இல்லையென்றால் எம் பெருமான் வந்து இங்கே ஒரு மணி நேரம் நிற்பானா! அவன் வாக்கு அம்ருதத்தினாலே அந்த துளஸியினுடைய மஹாத்மியத்தைப் பேசினானே... அதைக் கேட்க நமக்குக் கிடைக்குமா? மஹாலக்ஷ்மியை சந்தர்சனம் பண்ணுகிற பாக்கியம் நமக்குக் கிடைக்குமா? அந்தத் துளஸி பக்கத்திலே நாம் நிற்கிறதற்கு ஜன்மாந்திரத்தில் என்ன சுக்ருதம் பண்ணியிருக்கிறோமோ?' என்று அவையெல்லாம் கொண்டாடுகிறதாம்.

இப்படியெல்லாம் உலகத்திலே ஒருத்தர், பத்து கிருஹத்தில் நுழையாமல் பதினோராவது கிருஹத்தில் போய்க் காலையிலேயிருந்து ராத்திரி வரைக்கும் இருந்தால், 'இது என்ன அக்கிரமம்! அவர்தான் இவருக்கு வேண்டியவரா...? இன்னொரு தடவை வரட்டும் பார்க்கலாம்' என்று அசூயையினால் அவர் மேல் கோபப்படுவோம்...

ஆனால் வைகுண்டத்திலே இத்தகைய கோபங்களுக்கெல்லாம் இடம் கிடையாது! அப்படிப்பட்ட வைகுண்டத்திலே, சுத்த சாத்விகமான மணி மண்டபத்திலே; ஸ்ரீதேவி - பூதேவி – நீளாதேவி சமேதராக இப்போதும் எழுந்தருளியிருக்கிறான் பகவான்.

பக்தர்களோடும் பாகவதர்களோடும் கூடியிருந்து குளிர்ந்து அனுபவிக்கிறான் பகவான் என்று உபநிஷத் சொல்கிறது. பகவான் தனித்து ஆனந்தம் அடைவதில்லை!

சூரியனுடைய ஒளிக்கிரணங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயர். அதில் ஒரு கிரணத்துக்கு அமாவாஸ்யை என்று பெயர்... அமாவாஸ்யை அன்று அமா என்கிற கிரணத்தில் சந்திரன் வந்து தங்குகிறான். அமா என்கிற கிரணத்தில் தங்குவதனாலே அமாவாஸ்யை என்று பெயர் வந்தது. (அம்மா என்று 'ம்'மைப் போட்டால் கெட்டுப் போய்விடும்! அமா என்றே பெயர் அதற்கு)

தை அமாவாஸை அன்று எம்பெருமானை தரிசனம் செய்வது ரொம்ப விசேஷம்! ஜே ஜே என்று ஜனங்களின் கூட்டம்.

அடியேனும் போனேன் தரிசனம் பண்ண...

'நீ கியூவிலேதான் வர வேண்டும்!' என்று பரமாத்மா ஆணை! பல மணி நேரம் கியூவிலே நின்று ஸேவித்தேன். அது ரொம்ப ரசிக்கும் படியாகவும் இருந்தது; சந்தோஷமாகவும் இருந்தது. உடம்பிலே கொஞ்ச - நஞ்சம் இருந்த ரோகமும் போய்விட்டது. இவ்வளவு நேரம் நான் நின்றதே இல்லை! உட்காருவதேதான் வேலை அடியேனுக்கு...! நிற்க வைத்து விட்டான் பரமாத்மா – ரொம்ப நாழி நிற்க வைத்தது அவனுடைய காருண்யம்தான்!

பகவானையே பாருங்களேன்... சிறிது நேரம் படுத்துக்கொண்டிருக்கிறான். சிறிது நிற்கிறான்; சிறிது நடக்கிறான். நடந்தான், இருந்தான், கிடந்தான்....

அவன் அமர்ந்தால் ஒரு அழகு; நின்றால் ஒரு அழகு; நடந்தால் இன்னொரு அழகு– இது மொத்தத்தையும் திருமங்கையாழ்வார் ரசிக்கிறார்.

திருக்கோவிலூரிலே ஒரே க்ஷேத்திரத்தில் எல்லாமே நடக்கிறது. பக்தர்களெல்லாம் அவனைப் பார்த்து 'கோவிந்தா! கோவிந்தா...! என்று அவன் திருநாமத்தைச் சொல்கிறபோது பரம சந்தோஷம் அவனுக்கு. அந்தத் திருமுக மண்டலத்திலே என்ன 'காந்தி'!

'அடடா! இன்றைக்கு இவ்வளவு பக்தர்கள் வந்து நம்மைச் சேவித்துவிட்டுப் போனார்களே! என்று மகிழ்கிறான்.

பக்தைஹி பாகவதைஹி சஹா...

கர்பகிருஹத்துக்குள்ளே அவன் மட்டும் படுத்திருந்தானானால் அவனுக்குப் பெருமை ஏது...?

அவ்வளவு பேரும் ஸேவிக்க வேண்டும். பக்தர்களெல்லாரும் ஸேவிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்...

வைகுண்டத்திலேயும் இதேதான். வைகுண்ட ஏகாதசி அன்று முப்பத்து முக்கோடி தேவர்களும் போய் ஸேவிக்கிறார்கள்.

வைகுண்ட ஏகாதசி அன்றைக்கு எம் பெருமானின் வைகுண்ட வாசல் திறந்திருக்கும். துக்கமே கலப்பில்லாத, ஆனந்தம் மாத்திரமே விசேஷமாகப் பிரவகிக்கக்கூடிய உயர்ந்ததான க்ஷேத்திரம் அது – வைகுண்டம்!

அப்படிப்பட்ட க்ஷேத்திரத்தில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறான்.

(தொடரும்)

போட்டு நெரித்தால், உத்ஸாகமே போய்விடும். ரொம்பவும் கட்டுப்படுத்தினாலே ரொம்பவும் அறுத்துக்கொண்டு ஓடத் தோன்றும்.

இதனால் நம் சாஸ்திரங்களில் எல்லாவற்றையும் எழுதி வைத்துச் சட்டமாகத் திணிக்காமல், பல விஷயங்களில் பெரியவர்கள் பண்ணுகிறதைப் பார்த்தே மற்றவர்கள் மனமொப்பி, தாங்களாக, ஸ்வயேச்சையாக அதேமாதிரி செய்யும்படி விட்டிருக்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஞானஒளி வீசும் திருஅண்ணாமலையில் பௌர்ணமி கிரிவலத்தில் அன்னதானம் செய்ய அழைக்கிறோம்!

ஆன்மீக அன்னதான அறக்கட்டளையின் மூன்றாம் ஆண்டில் தொடர்ந்து சேவை!

பேரன்புடையீர்! வணக்கம். தங்களின் எல்லா விருப்பங்களும் நிறைவேறவும், மங்கலம் உண்டாகவும் அருள்மிகு ஸ்ரீ அருணாசலேஸ்வரரிடம் பிரார்த்தனை செய்கிறோம்.

• எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடுடைய சிவபெருமான் தானே தன் திருவடி பதித்து அருட்கரம் நீட்டி திருவருள் புரிந்துவரும் திருஅண்ணாமலையில் பௌர்ணமி அன்று சந்திர பகவான் பதினாறு கலைகளுடன் பரிபூர்ணமாகப் பிரகாசிக்கிறான். அந்த அபூர்வ சக்திவாய்ந்த கிரணங்களைத் தங்களின் உடலில் ஏற்று கிரிவலம் வரும் திரை அடியார்களுக்கும், பக்தர்களுக்கும் மேலும் அங்குள்ள ஆதரவற்ற முதியோர்கள், உடல் ஊனமுற்றோர்கள், கண்பார்வையற்றோர்கள் ஆகிய அனைவருக்கும் பௌர்ணமி அன்று இரவு அன்னதானம் சிறப்பான முறையில் செய்யப்படுகிறது. இந்தப்புனித இறைபணியில் பங்குகொண்டு தாங்களும், தங்கள் சந்ததியினரும் எல்லாம்வல்ல ஸ்ரீ உண்ணாமுலை சமேத அண்ணாமலையாரின் அரும்பெரும் தெய்வீக அருளையும் பெற இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை தெரிவித்தால் அதன்படி நாங்கள் பௌர்ணமி அன்று அன்னதானம் செய்து பிரசாதத்துடன் ஸ்ரீ அருணாசலேஸ்வரர், ஸ்ரீ உண்ணாமுலையம்மன் படத்தையும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

✣ பிறந்தநாள் ✣ திருமணநாள் ✣ முன்னோர்கள் திதி நாள் ✣ வாழ்க்கையில் உயர்வு ✣ தொழிலில் முன்னேற்றம் பெற ✣ நிரந்தர வேலை பெற ✣ கல்யாண பாக்கியம் பெற, நல்ல வரன் அமைய ✣ புத்திர/பிள்ளை பாக்கியம் பெற ✣ கணவன் - மனைவி இடையே ஒற்றுமை நிலவ ✣ கஷ்டங்களும், கடன்களும் எதிர்ப்பு இடையூறுகளும் நீங்க ✣ புதிய முயற்சிகளில் முன்னேற்றமும் வெற்றியும் உண்டாக ✣ புதிதாக தொழில் தொடங்க ✣ புதிதாக வீடு / மனை பெற ✣ வாகன யோகம் பெற ✣ நல்ல சிந்தனை பெற ✣ சிந்தனை வளம் பெருக ✣ உடல் ஆரோக்கியம் பெற ✣ நீண்ட ஆயுள் பெற ✣ தெய்வசக்தியுடன் திகழ ✣ குடும்ப ஒற்றுமை பெற ✣ உலக ஒற்றுமை பெற ✣ சமுதாய ஒற்றுமை பெற ✣ தேச ஒற்றுமைபெற ✣ எல்லா உயிர்களும் இன்புற்று வாழவும்.


- தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ரூ.500/- அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000/- அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.2000/- அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் நான்கு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000/- அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் இருபது ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.2000, ரூ.5000 அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும், ஸ்ரீ அருணாசலேஸ்வரரின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.


★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று திருஅண்ணாமலையில் அன்னதானம் செய்து தொடர்ந்து இருபது ஆண்டுகளுக்கு பிரசாதமும் 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெற வேண்டும் என்ற இறைசிந்தனையோடு ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீமத் பகவத்கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

• நன்கொடை அனுப்பும் சிவநேசச்செல்வர்கள் (Aanmeeka Annadhana Charitable Trust Chennai - 4) என்ற பெயரில் Cheque /D.D/ M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அன்னதான திருப்பணிகளை நலம்தரும் இறைபணி சேவைகளாக 'ஆன்மீக அன்னதான அறக்கட்டளை' ஆற்றிவர தங்களது ஒத்துழைப்பை என்றும் பேரன்புடன் வேண்டுகிறோம்.

அண்ணா மலையாம் அண்ணா போற்றி! *Cheque / D.D / M.O* அனுப்ப வேண்டிய முகவரி : கண்ணார் அமுதக் கடலே போற்றி!


ஸ்ரீ அருணாசலேஸ்வரர்

ஆன்மீக அன்னதான அறக்கட்டளை
AANMEEKA ANNADHANA CHARITABLE TRUST (Regd.)
68, Nadu Street, (Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai-600 004.
Tel : 4959302 Fax : (044) 4616311 E - Mail: siva siva @vsnl.net


ஸ்ரீ உண்ணாமுலையம்மன்

அண்ணாமலையாரைச் சரண் அடைந்தால் அகிலம் முழுதும் நம் வசமே!

டான்ஸ் பயிற்சி வேண்டுமென்றால் ஏகப்பட்ட நடனப்பள்ளிகள் இருக்கின்றன. நடிப்புக்கும் கல்லூரி இருக்கிறது. சினிமாவில் சண்டைப் பயிற்சிக்கு ஏதாவது பள்ளி இருக்கிறதா? சினிமா ஸ்டண்ட் இயக்குனர் ஜாகுவார் தங்கத்திடம் கேட்டோம்.

"கராத்தே, குங்பூ, மாதிரியானவற்றை நிறையபேர் சொல்லித் தர்றாங்க. ஆனா எல்லா பயிற்சியும் ஒரே இடத்துல எங்கயும் நடப்பதா எனக்குத் தெரியலை. எங்கிட்ட நூற்றைம்பது பேருக்கு மேல பயிற்சி எடுக்கிறாங்க. எங்கிட்ட பயிற்சி பெற்ற ஸ்டண்ட் நடிகர்கள் ஐயாயிரம் பேருக்கு மேல இருக்காங்க.

"சினிமாவைப் பொறுத்தவரை எந்தவிதமான சண்டை காட்சி வேணுங்கிறது தெரிஞ்ச பிறகுதான் அதுக்குத் தகுந்த மாதிரி பயிற்சி எடுப்போம். துப்பாக்கிச் சண்டை, டைவ் அடிக்கிறது, சிலம்பம், கீழே உருண்டு புரண்டு எழுவது மாதிரியான பயிற்சியை என் வீட்டு மாடியிலேயேப் பண்ணிக்குவோம். கார் விரட்டல், பைக் விரட்டல் போன்றப் பயிற்சிகளை ரெட்ஹில்ஸ் பழைய ஏர்போர்ட் பகுதியில பண்ணுவோம். குதிரை சண்டைன்னா பீச், அல்லது மிலிட்டரி கிரவுண்ட்ல பயிற்சி எடுத்துக்குவோம். சில சமயங்கள்ல ஷூட்டிங் ஸ்பாட்லயே பயிற்சி எடுத்துக்குவோம்!

"சண்டைப் பயிற்சியைப் பொறுத்தவரை 'டைமிங்' ரொம்ப முக்கியம். ஹீரோ பைக்ல போகும்போது அவரை வில்லன் விரட்டுறது போல காட்சி இருக்கும். இதுக்காக பைக்கோட அந்தரத்துக்கு எகிறி, டைவ் அடிச்சு, பக்கத்துல இருக்கிற தண்ணில விழற மாதிரி செட் பண்ணிருப்போம். ஆனா எதிர்பாராத விதமா தரையில விழுந்துடுவோம்.

"நேர போற கார், மலையிலிருந்து உருண்டு விழும் படியா காட்சி இருக்கும். நாங்க என்ன பண்ணுவோம்னா இத்தனையாவது செகண்ட்டுல கார் உருளும். அதுக்கு முன்னால கார்லயிருந்து நாங்க வெளியில விழுந்திடணும்னு திட்டம் போட்டிருப்போம். ஆனா கார் கதவு திறக்காம மக்கர் பண்ணும். இந்த மாதிரி சமயங்கள்ல உயிர் பிழைக்கறதே பெரிய விஷயம். இப்படி நிறைய விபத்துக்களைச் சந்திக்கறவங்கதான் ஸ்டண்ட் நடிகர்கள்.



"அடிபட்டாதான் திருப்தி"

"வீட்லயிருந்து ஆபீஸ் போகிற கணவர்களைச் சாயந்திரம் வரும்போது அர்ச்சனா ஸ்வீட்ஸ் வாங்கிட்டு வாங்கன்னு மனைவிகள் சொல்லி அனுப்புவாங்க. ஆனா எங்களைப் பொறுத்தவரை 'இன்னிக்காவது உடம்புல அடிபடாம வாங்க'ன்னுதான் சொல்லுவாங்க. அடிபடாம வந்தாலும் அது சுகமான நாளா எங்களுக்கு இருக்காது. உடம்புல அடிபடணும். அடிபட்டாதான் திருப்தியா இருக்கும்!"

— அப்பு



குலசேகர ஆழ்வார் சேரநாட்டு மன்னராயிருந்தவர். திருவரங்கனைச் சென்று தரிசிக்க வேண்டும் என்று அவருக்குப் பேராவல். ஒவ்வொரு இரவும் மந்திரி பிரதானிகளை அழைப்பார். "பரிவாரங்களையெல்லாம் ஆயத்தம் செய்யுங்கள்; நாளை பொழுது புலர்ந்தால் எம்பெருமான் ரங்கநாதனைப் பார்க்கப் புறப்பட்டுவிட வேண்டியதுதான்!" என்பார்.

பொழுதும் பலரும். ஒவ்வொரு நாளும் அதிகாலையிலேயே அடியார்க் கூட்டம் அரண்மனையில் குழுமிவிடும்.

திருவரங்க யாத்திரைக்குத் தயாராய் வரும் குலசேகர மன்னர், பாகவதோத்தமர்களைப் பார்த்ததுமே மனத்தை மாற்றிக் கொண்டு விடுவார். திருவரங்கம் எங்கே ஓடிப்போய்விடப் போகிறது? அரங்கன்தான் எங்கே போய்விடப் போகிறான்? நாளை போய்க்கொள்ளலாம். இன்று இந்த அடியார்க்குழாமுடன் உத்தமமாய்ப் பொழுது போகட்டும் என்று தங்கிவிடுவார்.

பகவத் உபாஸனையைக் காட்டிலும் பாகவத உபாஸனை உயர்ந்தது என்ற வைவண மரபுக்கு, வாழும் உதாரணமாக விளங்கிய குலசேகர ஆழ்வார், ராஜ்ய பரிபாலனத்திலும் சளைத்துவிடவில்லை. ராம பக்தர் அல்லவா! அவருடைய ராஜ சபையில் நித்ய ராமாயண பாராயணம்தான்! அன்பர்கள் ராமாயண கதை கூறக் கேட்டுக் கொண்டே அந்தக் காவியத்துள் பிரவேசித்து தானும் ஒரு பாத்திரமாக மாறிப்போய்விடுவாராம் மன்னர்!

ஒரு முறை ராமன் வனவாசம் புறப்படும் கட்டம்- அந்த தசரதனாகவே தன்னை பாவித்து, துயரம் தாளாமல்

ஆராவமுதன்

மூர்ச்சையாகிவிட்டாராம் குலசேகர ஆழ்வார்!

'**கு**லசேகர பிரபாவம்' என்கிற தலைப்பிலே இந்த வரலாறை கல்யாணபுரம் ஆராவமுதன் ஹரிகதையாகச் சொல்லிக்கேட்க வேண்டும்!

ஆழ்வாரைப் போல் நாம் மூர்ச்சையடைந்து விழாவிட்டாலும்

ஒரு டூ-இன்-ஒன் ஹரிகதை!


வைரமுத்து, ஞானக்கூத்தன், வைத்தீஸ்வரன் எல்லோரையும் பரத நாட்டியத்துக்குப் புதுக் கவிதை எழுதச் சொல்லி நடனக் கலைஞர்களை ஆட்டுவித்தவர்கள் நாரத கான சபாவின் 'நாட்டியரங்க'த்தினர். இந்த வருடம் 'கதா-பரதம்' என்ற தலைப்பில் ஹரிகதைக்கும் பரதநாட்டியத்துக்கும் முடிச்சு போடும் நாரதர் வேலை நடந்திருக்கிறது!



• ப்ரீத்தி

முதலில் ஒரு மணி நேரத்துக்கு ஹரிகதை. அடுத்த ஒரு மணி நேரத்துக்கு, கதையில் வரும் முக்கிய நிகழ்ச்சிகளை நடனமாக வழங்குவார் நடனக் கலைஞர்.

பத்ராசல ராமதாஸ், வைணதேயன் (கருடன்), கிருஷ்ணலீலா தரங்கிணி- மூன்றையும் கல்யாணபுரம் ஆராவமுதன் ஹரிகதையாகச் சொல்ல, முறையே ப்ரீத்தி வாசுதேவன், விஜய் மாதவன்,



தும்புரு

நிச்சயமாக அவ்வப்போது ஆனந்தத்திலும் பக்திப் பெருக்கிலும் விழிகள் நனைந்துதான் போகும்!

இப்படி நம்மைக் கட்டிப்போடும் பெருமையில் பாதிதான் கல்யாணபுரம் ஆராவமுதனைச் சேரும்; மீதி பெருமை 'ஹரிகதை' என்கிற மிக லாவண்யமான கலைக்கேயுரியது!

நிறைய இசையும், கொஞ்சம் நடிப்பும், உணர்ச்சியுடன் கதை பின்னும் திறனும், தகுந்த மேற்கோள்களை எடுத்தாளும் புலமையும், உபகதைகள் என்னும் கிளைப்பாதைகளில் பிரவேசித்து மீண்டும் விட்ட இடத்துக்கு வந்து சேரும் லாகவமும் இணைந்த சரியான தஞ்சாவூர் கதம்பம் இந்தக் கலை!

இத்தனை விஷயங்களும் இறை மகிமையைச் சொல்வதற்கு மட்டுமே கையாளப்படுகிறபோது, வித்தை என்பது மறைந்து, கலைஞரின் வினயமே மேலோங்குகிறது. கேட்டும் கண்டும் பயனடைவோரின் மகிழ்ச்சி, ஆனந்தம் என்கிற உயர்நிலையைத் தொடுகிறது.

போட்ட ஆர்.டி.எக்ஸ்!

இந்த உயர்கலையைக் கட்டிக் காத்து இன்று முறைப்படி வழங்கி வரும் வெகு சிலருள் முதன்மையானவர் கல்யாணபுரம் ஆராவமுதன்.

கடந்த சில வாரங்களாக சென்னையில் இவர் நிகழ்ச்சிகள் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. மெய்யான ரசிகர்கள் அவற்றுக்குத் தவறாது செல்கிறார்கள். அத்தனை பேரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தும் ஒரு ஆர்.டி.எக்ஸைத் தூக்கிப் போட்டிருக்கிறார் ஆராவமுதன்:

"அடுத்த வருடத்தோடு இந்தப் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறேன்!" என்ற அவரது அறிவிப்பே அந்த ஆர்.டி.எக்ஸ்!

காரணம்...?

கலைக்கும் கலைஞருக்கும் உரிய கௌரவமும் சன்மானமும் தரப்படுவதில்லை என்கிற வருத்தம்தான்! (சிஷ்யர்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தப் போவதாகவும் அவர் தெரிவித்திருப்பது கொஞ்சம் ஆறுதல்)

ஸ்பான்ஸர்குல திலகங்கள் நிறைந்த தருமமிகு சென்னை, இப்படியொரு நிலைமையை அனுமதிக்கலாகுமா..?

பொதுமக்கள் திரண்டு வருவதன் மூலம் தங்கள் ஆதரவை இக்கலைக்குத் தெரிவிக்க வேண்டாமா? 'வேகமான வாழ்க்கை- எங்கே நேரமிருக்கிறது?' என்று ஒதுங்கிவிட முடியாது. இரண்டு மணிநேர ஹரிகதை நிகழ்ச்சியினிடையே எந்த ஒரு கட்டத்தில் போய் அமர்ந்தாலும் சரி, எத்தனை நேரம் செலவிட்டாலும் சரி, பயனுள்ள விஷயங்கள் காதிலே விழும். வேறு எந்த கலையும் வழங்காத மினிமம் காரன்டி இது! தேவை மாக்ஸிமம் ஆதரவுதான்!

ரோஜா கண்ணன் ஆகியோர் நடனத்தில் வழங்குகிறார்கள். திருநீலகண்டர், லலிதா விஜயம் இரண்டையும் ஹரிகதையாக ஜானகிராமன் சொல்ல, ரேவதி ராமச்சந்திரனும், ஷோபனா ராமச்சந்திராவும் பொருத்தமான பாடல்களைத் தேர்ந்தெடுத்து நடன வடிவம் கொடுக்கிறார்கள். ஹரிகதை கேட்ட புண்ணியமும், பரத நாட்டியம் பார்த்த மகிழ்ச்சியுமாக, ரசிகர்களுக்கு ஒரே கல்லில் இரண்டு மாங்காய்!




• அனுராதா - ஸ்ரீதர்

துவக்க நாளன்று பெங்களூர் அனுராதா-ஸ்ரீதர் மகாபாரதமும், இறுதி நாளன்று சாந்தா-தனஞ்செயன் ராமாயணமும் ஆக, ஆகஸ்ட் 31ம் தேதிவரை விழா ஏழு நாட்கள். நாரதர் கலகம் நன்மையைத் தவிர வேறெதில் முடிந்திருக்கிறது!

— சாருகேசி

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி –
ரூ.1000 ஆறுதல் பரிசு பெறும் இரண்டாவது கதை



மறுநாள் தேர்வுக்கான பாடப் புத்தகத்தை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு காலனி வீட்டுக்குள்ளிருந்து வெளியில் வந்து நின்றான் பரமசிவம். பத்தாம் வகுப்புப் படிக்கிற பதினாலு வயதுப் பயல்.

வெளியில் அடித்த மாலை மஞ்சள் வெயில் மெல்ல மெல்ல முகம் கறுத்துக் கொண்டிருந்தது. வீட்டிற்குள் திரும்பிப் பார்த்தான். ஊரின் ஒட்டுமொத்த இருட்டுமே அவன் வீட்டிற்குள்தான் உறைந்து கிடந்தது.

சீமைத்தண்ணி வாங்கப் போன ஆத்தாளும் இன்னும் வீடு திரும்பவில்லை. வந்தாலும் என்ன ஆகிவிடப் போகிறது.

தெரு விளக்கை நோக்கிப் போனான்.

அவன் வாடிக்கையாய்ப் போய்ப் படிக்கிற, தெரு விளக்கின் அடிவாரம் சின்னப் பயல்களிடம் சிக்கிக் கொண்டது.


கூச்சல்... கூப்பாடு... தொட்டு விளையாடும் சிறுவர்களின் சந்தோஷ இரைச்சல்... அந்த இடத்தை விட்டு அவர்களை விரட்டுவது என்பது நடக்காத காரியம்...

அடுத்த தெரு விளக்கைத் தேடிப் போனான். அங்கே நாலு பேர் ஆட்டுக் கூடு செய்து கொண்டிருந்தார்கள். இரண்டு பேர் மொச்சி விளாறு கிழித்துக் கூடை செய்து கொண்டிருந்தார்கள்.

வயிற்றுப் பிழைப்புக்கான தொழில் நடக்கிறது. அவர்களை என்ன சொல்வது? வேடிக்கைப் பார்த்து நின்றான் பரமசிவம்.

"என்னடா? கோவிந்தன் மகனே... படிக்க வந்தியாக்கும்? இன்னிக்கு இடமில்லப்பா உனக்கு... வடக்கதான் போ..."

அவனை விரட்டி விட்டார்கள். வடக்குத் தெருவிற்கு வந்தான். தெரு விளக்கின் அடியில் பத்துப் பன்னிரண்டு தாவணிச் செல்விகள் தீப்பெட்டி ஒட்டிக் கொண்டிருந்தனர்.



இரப்பாம்

நிற்கவே கூடாது. வில்லங்கம் ஆகிப்போகும். ஜாதி வளர்ந்த தெரு. சப்தமின்றி நகர்ந்தான்.

ஊருக்கு வெளியில் பள்ளிக் கூடத்திற்கு முன்னால் ஒரு விளக்குக் கம்பம் இருந்தது. விளக்கும் எரிந்தது.

சந்தோஷமாய்ப் போய் உட்கார்ந்து புத்தகத்தை மடியில் வைத்துக் கொண்டு பாடம் படிக்கத் தொடங்கினான்.

“யார்ரா அது? கோவிந்தன் மகனா?'' பள்ளிக் கூடத்துத் தாழ்வாரத்தில் தூணோடு சாய்ந்திருந்த பெரிய நாட்டாண்மை கர்ஜித்தார்.

"ஆமா...அப்பச்சி... நாந்தான்.''

"என்னடா செய்ற?...''

''படிக்கிறேன் அப்பச்சி... நாளைக்குப் பரீட்சை...''

“இங்க வந்து போடா... ஒரு சின்ன வேலை உனக்கு...''

ஊர் நாட்டாண்மை கூப்பிடும்போது மாட்டேன் என்று சொல்ல முடியுமா?

பரமசிவம் எழுந்து போனான். “முருகேச நாடார் கடையில போய் நான் கேட்டேன்னு ஒரு கணேஷ் புகையிலை, பூமார்க் பீடிக்கட்டு. ஒரு மெழுகு தீப்பெட்டி... வாங்கிட்டுவா ஓடு...''

“துட்டில்லாமத் தருவாரா அப்பச்சி?''

''நான் கேட்டேன்னு கேளுடா நாரப் பயபிள்ள... தருவான்டா போடா....''

சன்னென்று விழுந்து விரட்டினார். கடையில் வாசல்படிவரை கூட்டமிருந்தது.

“முதலாளீ... நாட்டாம அப்பச்சிக்கு ஒரு பூ மார்க் பீடிக்கட்டும் கணேஷ் புகையிலையும் தருவீகளாம். கேட்டு விட்டாரு..''

கடைவாசலில் நின்றபடியே குரலை உயர்த்தினான். காத்திருந்த கூட்டம் அவனைக் கடுகடுப்பாய்ப் பார்த்தது. கண்ணால் காய்ச்சியது.

“பொறுடா... வந்து நின்னதுமே பறக்கியே; என்ன? நாங்க எவ்வளவு நேரமா நிக்கோம் தெரியுமா? பொறு...''

கூட்டம் அவனை ஓரங்கட்டி விட்டது. ஒதுங்கி நின்ற பரமசிவம் அரைமணி நேரம் நின்றுதான் வாங்கிக் கொண்டு போனான்.

''செத்துக்கிடந்தியாடா... செடிப்பய புள்ள.. இவ்வளவு நேரமாடா ரெண்டு சரக்கு வாங்கியார? நல்ல பயடா நீ... கொண்டா...போ...போ...''

பீடிக் கட்டையும் புகையிலையையும் அவனிடம் வெடுக்கென்று பிடுங்கிய நாட்டாண்மை அவனை வெறுப்பாகவும் பார்த்துக் கொண்டார்.

பரமசிவம், ''அப்பச்சிக்கு ரெண்டு ரூபாய்க்கு வெத்தல பாக்கு மட்டும் வாங்கிட்டு வந்திரு... ஓடுரா... ராஜா...''

இன்னொரு மீசைக்காரர் விரட்டினார். மாட்டேன் என்று மறுக்க முடியாத பரமசிவம் மறுபடியும் கடைக்கு ஓடினான். கடையில் கூட்டம். காத்திருந்தான்.

அவன் ஆத்தா இடுப்பில் ஒரு பனை நார்ப்பெட்டியை இடுக்கிக் கொண்டு கடைக்கு வந்தவள், கடையில் காத்திருந்த தன் மகனைக் கண்டதுமே புருவங்களை நெரித்தாள்.

"என்னய்யா... கடைக் காட்ல வந்து நின்னுக்கிட்டுருக்க... படிக்கணும்னு போனியே? படிக்கலியா?''

"போனேன்... பள்ளிக் கூடத்துப் பக்கம்... அங்க வர்ற அப்பச்சிமார்களுக்குப் பீடித் தீப்பெட்டி வாங்கித்தர வேண்டியதிருக்குல்ல... என்ன செய்றது? அவுக தெருவிளக்

வே. குருநாதன்

"உங்க அப்பா சாகும்போது சொன்னதுனால நீங்க ஜோக் எழுதறதை நிறுத்திட்டீங்களா, அப்படி என்ன சொன்னார்?"

"பிறர் சிரிக்கும்படியான காரியத்தைச் செய்யாதேன்னு சொன்னார்!"

– தேனி முருகேசன்

குல படிக்கிறோம். அவுக சொன்னபடியும் கேக்கணுமில்ல..."

மகனைப் பரிவோடு பார்த்தாள்.

"முதலாளி... அவனுக்கு அம்பது சேவு தந்திருங்க..."

கடைக்காரரிடம் கேட்டுக் கொண்டாள் அவன் ஆத்தா.


"சேவ உன் முகரையில போடு... எனக்கெதுக்கு? வீட்ல ஒரு பல்பு... ஒரே ஒரு பல்பு மாட்டிருந்தா நான் இப்படி ஊருக்குள்ள தெருத்தெருவா அலைமோதுவனா? எனக்குப் பெத்தவங்க இருந்தும் செத்தவங்க மாதிரித்தான்.... பரமசிவம் அழுதான். என்னப்பா இப்படிப் பேசுற?...."

கடைக்காரர் அவனைக் கடிந்து கொண்டார்.

"அப்புறம் என்ன முதலாளி... எங்க அப்பன் நான் தவறாம தண்ணி அடிச்சுட்டு வாறான். இவ செய்முறைக்கு ஊரு ஊராப் போவா... அதுக்கெல்லாம் காசு இருக்கு... வீட்ல ஒரு லைட்டு போடக் கூடாதாக்கும். நான் தெருத் தெருவா அலையுறேன் படிக்கிறதுக்கு... எளிய சாதிப் பய வேற... எல்லாரும் வேலை ஏவுறாங்க... மாட்டேன்னு சொல்ல முடியாது... படிக்கவும் செய்யணும்... என்ன பாவம் செய்தனோ.... இந்த ஜடங்களுக்குப் பிள்ளையாப் பிறந்து இப்படி அலைமோதுறேன்... ஒரு பாடம் படிக்கிறதுக்குள்ள ஊருக்கு ஒன்பது வேலை பாக்கணும்... என் தலை எழுத்து இப்படியா இருக்கணும்?...."

அழுது புலம்பிக் கொண்டே தெருவில் இறங்கிப்போன தன் மகனை கண் கலங்கப் பார்த்தாள் அவன் ஆத்தாள்.

"படிக்கிற பயலுக்கு ஒரு லைட்டு போட்டுத்தர வேண்டாமா? அவன் கோபிக்கிறதுல தப்பென்ன இருக்கு... ஊருக்குத் தொண்டூழியம் பாக்கிற ஜாதியில பிறந்திருக்கான்... இவன் படிச்சுட்டான்னா நாளை ஒரு உத்யோகம் பாப்பானே... ஊருக்கு எங்க சொன்னபடி கேப்பான்? அப்படீங்கிற நினைப்பு அநேக பேருக்கு இருக்கும்... அதுக்காகவே அவனைப் படிக்க விடாம ஆளுக்கொரு வேலை ஏவுவான் தெருவுல... இது தெரிய வேண்டாமா உனக்கும் புருஷனுக்கும்... காலா காலத்துல வீட்ல ஒரு லைட்டுப் போடப் பாரு..."



கடைக்காரர், பரமசிவத்தின் ஆத்தாளைக் கடிந்து கொண்டார்.

அவர் சொன்னபடியேதான் நடந்தது. வெற்றிலை பாக்கு வாங்கிக் கொண்டு போன பரமசிவத்தை வழியில் பார்த்த ஒருத்தி புது வேலை கொடுத்தாள்.

"படிச்சுட்டுப் போகும்போது.. என் மிதியடியை வாங்கிட்டுப்போ... நாளைக்குப் படிக்க வரும்போது தச்சுக் கொண்டு வா... மறந்துட்டுப் போனியோ?... ராஸ்கல் நாளைக்குத் தெருவழியே வந்துக்கிடமாட்ட..."

கடுமையான உத்தரவு. ஒரு கையில் பாடப்புத்தகமும் இன்னொரு கையில் ஊரார் செருப்புமாய் நாளை வர வேண்டும்.

இது ஜாதி செழித்த தெரு.

இங்கே கக்கத்தில் துண்டோடு ஊரார் செருப்பையும் சேர்த்து இடுக்கிக் கொண்டு தன் பரம்பரையே நடந்திருக்கிறது.

தான் மட்டும் பாடப்புத்தகத்தோடு நடந்தால் எப்படி? நடந்து போகச் சம்மதிக்குமா ஜாதித் தெருக்கள்?

புத்தகமும் கையுமாய் நான் போனதைப் பார்த்து எரிச்சலடைந்திருக்கிறது. உடனே உத்தரவிட்டு விட்டது.

மனசுக்குள் அழுதும் சிரித்துமாய்த் தெருவைக் கடந்து போனான் பரமசிவம். விளக்குக் கம்பத்தை அடைந்த பரமசிவம் பேரதிர்ச்சியைச் சந்தித்தான்.

அவன் விட்டு வைத்துப் போயிருந்த விளக்குக் கம்பத்தின் அடிவாரத்தைப் பத்துப் பேர் கைப்பற்றியிருந்தார்கள். அவர்

கள் வட்டமாய் உட்கார்ந்து சீட்டு விளையாடும் களமாகிவிட்டது.

வாங்கி வரச் சொன்னவரின் கையில் வெற்றிலை பாக்கைக் கொடுத்த பரமசிவத்தின் கண்கள் கலங்கின. ஆசை தீரப் படித்து விட்டுப் போக வந்தவன் அரவமே இல்லாமல் அழுது விட்டுப் போனான்.

அதைத் தவிர அவன் வேறென்ன செய்ய முடியும்?

இப்படித்தானே அவனது மூத்த தலைமுறைகள் ஊருக்குள் செலவாகியிருக்கின்றன. அந்தத் தலைமுறை இரத்தம் தானே பரமசிவத்திற்குள்ளும் ஓடுகிறது. ஏதாவது பேசி விடுவானா என்ன?

புத்தகங்களோடு திரும்பி நடந்தான். ஊருக்கு மேற்கில் ஒரு ராட்சதனைப்போல் நின்று கொண்டிருந்த டிரான்ஸ்பார்மரைப் பார்த்து இருட்டில் நின்றபடி காறித்துப்பினான்.

மின் உற்பத்தி நிலையமும் மின்சார வாரியமும் இருந்தென்ன புண்ணியம்?

தன் படிப்புக்கு ஒரு மின் விளக்கு கிடைக்காத இந்த நாட்டின் மீதே அவனுக்குக் கோபம் வந்தது.

அவன் கோபம் யாரை என்ன செய்து விடும்? தெரு நாய்களும் கூட குரைத்துக் குரைத்து அவனை விரட்டின.

"ஏலேய்... கோவிந்தன் மகனே..."

தாழ்வாரத்தில் ஈஸி சேரில் சாய்ந்திருந்த சண்முகம் அவனைக் கூப்பிட்டார். பரமசிவம் போனான்.

"ஏய்... அந்த உப்புமாவைக் கொண்டு வா... கோவிந்தன் மகன் வந்திருக்கான்."

அடுக்களை நோக்கிக் குரல் கொடுத்தார். உள்ளேயிருந்து கல்யாணி ஆச்சி உப்புமாவோடு வெளியே வந்தாள்.

"அப்படியே உக்கார்ரா... உப்புமா தின்னுட்டுப் போ... ஒரு பேப்பர்ல கொடு... தின்னுட்டுப் போவான்..."

அவர் மனைவிக்கு உத்தரவிட்டார். அவளும் ஒரு பழைய தாளில் வைத்துக் கொடுத்தாள்.

"அந்தப் பனங்கட்டை இடுக்குல ஒரு டம்ளர் இருக்கும்டா... எடுத்துக்கோ. தண்ணி குடிப்பீல்ல. உங்க ஆத்தா சொருகீட்டுப் போன டம்ளர்தான்டா..."

டம்ளர் சொருகியிருந்த பனங்கட்டையைக் காட்டினார்.

"சும்மா கிடங்க... இருட்ல போய் அதை ஏன் எடுக்கச் சொல்றீக... இந்தாப்பா... இந்த டம்ளர்ல தண்ணி குடி..." இன்னொரு டம்ளரைத் தந்தாள் ஆச்சி.

"இனி இதையும் ஓட்டு மேல சொருகணும்.. எல்லா டம்ளரையும் ஓட்டுமேல சொருகிட்டா நாம எதுல குடிக்கிறது?..."

"கையில அள்ளிக் குடிங்க... அப்பதான் புத்தி வரும்... ஜாதிக் கிறுக்குத் தொலைய மாட்டேங்குதே... உங்கள விட்டு.."

கணவனைச் சீறிவிட்டு.... பரமசிவத்திற்குப் பரிவோடு உப்புமா வைத்து தண்ணீர் தந்தாள் ஆச்சி.

சாப்பிட்டு முடித்த பரமசிவம் சதுரச் சதுரக் கட்டங்களாய்ப் போட்ட சிவப்புத் திண்ணையை ஏக்கமாய்ப் பார்த்தான்.

"என்னப்பா? ஏன் திண்ணையப் போயி அந்தப் பார்வை பாக்க? திண்ணையில என்ன இருக்கு?"

ஆச்சி சிரிப்போடு கேட்டாள். விளக்கெரிகிற விசாலமான திண்ணை. உட்கார்ந்து படித்தால் என்ன?...

தன் ஆசையை வெளியிட்டான் பரமசிவம்.

உடனே ருத்திரமூர்த்தி ஆனார் அவர்.

"ஏன்டா? தெருவுல போறவனைக் கூப்பிட்டு வச்சு உப்புமா போட்டதுக்கா? இது

"ஆபீஸ்ல டி.வி. எதுக்கு?"
"பெண் ஊழியர்கள் மெகா சீரியல் பார்க்க பக்கத்து வீடு தேடிப் போயிட றாங்களே! அதைத் தவிர்க்கத்தான்!"
– அம்பை தேவா



உங்க ஜாதி வீடு இல்லை. மறந்து போனியா?"

பதிலேதும் சொல்லாத அவன் அந்த வீட்டுச் சுவரில் மாட்டியிருந்த ஃபோட்டோக்களைப் பார்த்தான்.

மகாகவி பாரதி.. வ.உ.சி., காந்தி, காமராசர்.... ராமலிங்க சுவாமிகள்.

கண்ணாடி பிரேமுக்குள் சிக்கிக் கொண்டு சிவனே என்றிருந்தார்கள்.

"அதுக்கென்னப்பா... வா... திண்ணையில உக்காந்துபடி..."


அவனுக்கு உடனே அனுமதி அளித்த தனது தர்ம பத்தினியைச் சட்டென்று பார்த்து உறுமினார் சண்முகம்.

"ஏன் அந்தப் பார்வை? அவன் திண்ணையில உக்காந்து படிச்சா உங்க கிரீடம் ஒண்ணும் கீழ இறங்கிறாது...."

கல்யாணி ஆச்சி கணீரென்று சொன்னாள்.

"கிரீடம் இறங்குதோ இறங்கலியோ இது என்ன புதுப்பழக்கம்? தெருவிளக்குல இவன் படிக்க வேண்டியதுதானே?"

அவரது குரல் உயர்ந்தது.



"தெரு விளக்குக்குத்தான் போனான். அங்க உங்க சிரேஷ்ட புத்திரன் சின்னய்யா பத்துப்பேரோட உக்காந்து சீட்டாடிக்கிட்ருக்கான்... போய் அவனை அந்தப் பத்துப் பேரோட கூட்டியாந்து இந்தத் திண்ணையில விளையாட விடுங்க... இவன் போய் அந்தத் தெரு விளக்குல படிக்கட்டும்... எந்திரிச்சுப் போய் அழைச்சுட்டு வாறீகளா?..."

"என்னடி இப்படிப் பேசுற?"

"அப்புறம் என்ன? திண்ணையில உக்காந்து குடிக்கிறதுக்கா அனுமதி கேக்கான்? படிக்கிறதுக்குத்தான் இடம் கேக்கான். அது கூடாதுன்னா அவனை நீங்க அவமதிக்கல... அவன் கையில உள்ள சரஸ்வதித்தாயையே அவமதிக்கிறீக... ஆமா... இந்தத் திண்ணை நீங்க கட்டி வச்சதா? எந்தத் தலைமுறையோ கட்டி வச்சுட்டுப் போனது.... முதன் முதலா ஒரு படிக்காத பரம்பரையோட முதல்படிப்புக்கு மனசார இடம் கொடுத்து... அந்தத் திண்ணையையாவது கௌரவப்படுத்திட்டுக் கண்ணை மூடுவமே..."

இவ்வளவையும் தன் மனைவி சொல்லி... தான்கேட்டபிறகும்...

இதைவிடப் பெரிசாய் வேறென்ன சொல்லி விடப் போகிறது என்ற நினைப்பில், மடியில் இருந்த கைவல்ய நவநீதத்தை மூடி விட்டு... கற்பதற்குக் காத்து நிற்கிற பரமசிவத்தைப் பரிவோடு பார்த்தார் சண்முகம்.

"திண்ணையில உக்காந்து படிடா...;"

அழகான ஒரு வணக்கம் போட்டுவிட்டு, திண்ணையில் ஏறி படிக்க உட்கார்ந்தான் பரமசிவம். ○

கிடைச்சாச்சுப் பட்டுப் புடைவை!

கல்கி-பி.எம். சில்க் சாரிஸ் இணைந்து வழங்கும் பட்டுப்புடைவை பரிசுப் போட்டி முடிவு - 2

கட்டுரை தலைப்பு: 'க்கீ...க்கீ மீனாட்சி'



ஏராளமான வாசகர்கள் சரியான விடையை எழுதி ஆசிரியர் குழுவைத் திக்குமுக்காட வைத்துவிட்டனர். அவற்றில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்:

நா. சீதா,
71/6 மின்சார வாரியக் குடியிருப்பு,
வல்லூர், சென்னை – 120

இயேசு மாகாவியம்!

ஐந்நூறு பக்கங்கள் கொண்ட "இயேசு மாகாவியத்தை எழுதியிருக்கிறார் கவிஞர் நிர்மலா சுரேஷ். முழுவதும் புதுக்கவிதையிலான இப்புத்தகத்தின் பின்னால் பத்து வருடச் சிந்தனை இருக்கிறது என்கிறார் இவர்.

"பத்து வருடங்களுக்கு முன்பு பிலிப்பைன்ஸ் ரேடியோவுக்கு இயேசு பற்றி கவிதை கேட்டார்கள். 'இயேசு எனும் சோஷலிஸ்ட்' என்ற தலைப்பில் எழுதினேன். இந்தக் கவிதைக்கு ஏரானமான கடிதங்களும் பாராட்டுகளும் குவிந்தன. பிறகு ஒரு நாள் நாளிதழில் ஒரு செய்தி படித்தேன். சோவியத்தில் கோர்பசேவ் அதிபரானதும் கம்யூனிஸ நாடான அங்கு 'சர்ச்'கள் திறக்கப்படுகின்றன. இது பற்றிய ஒரு விழாவில் அதிபர் பேசும்போது, 'உலகின் முதல் கம்யூனிஸ்ட் இயேசுதான்' என்று குறிப்பிட்டிருந்தார். இந்தச் செய்தி நான் எழுதியிருந்ததற்கு வலு சேர்ப்பதுபோல் இருந்தது. பிறகுதான் இயேசு மாகாவியம் எண்ணம் உதித்தது.

"தொன்மங்களை மீண்டும் மீண்டும் படிக்கும்போது புதிய பரிமாணங்கள் கிடைக்கின்றன. அதே நேரத்தில் ஒரு சில விஷயங்களைக் கவிதையில் எளிதாக அழகியல் வெளிப்பாட்டுடன் சொல்ல முடியும் என்று தோன்றியது. ஏற்கெனவே கண்ணதாசன் 'இயேசு காவியம்' எழுதியிருந்தாலும் புதுக் கவிதையில் இதை எழுதலாம் என நினைத்தேன்." என்று சொல்லும் நிர்மலா சுரேஷ், இதற்காக இஸ்ரேல் சென்று விவிலியத்தில் வரும் பல இடங்களைச் சுற்றிப் பார்த்திருக்கிறார்.


"இயேசு இருபது வயது முதல் முப்பது வயது வரை எங்கே இருந்தார் என்பதே தெரியவில்லை. முப்பத்து ஒன்றிலிருந்து முப்பத்து மூன்று வரையிலான அவரின் வாழ்க்கை இன்று உலகம் பூராவும் பேசப்படுகிறது. அவர் காலத்து அரசியல் பின்னணி அறிய இஸ்ரேல் சென்று பல புத்தகங்களைப் படித்தேன். ஜெருசலம், பெத்லஹேம், நாசரேத், கலிலியோ உட்பட பல பகுதிகளுக்குச் சென்று நேரில் பார்த்தேன்" என்று சொல்லும் இவர், தாம் எழுதியுள்ள இந்தக் காவியத்தில் கிறிஸ்து, கர்த்தர் என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லையாம்.

"இயேசுவை இரண்டு விதமாகப் பார்க்கலாம். வரலாற்றில் இயேசு; பைபிளில் கிறிஸ்து. நான் வரலாற்று இயேசுவின் அம்சங்களை எனது புத்தகத்தில் எழுதியிருக்கிறேன். இயேசு ஒரு புரட்சியாளர். அதை வெளிக் கொணர வேண்டுமென்பதுதான் என் நோக்கம்" என்கிறார் நிர்மலா சுரேஷ்.

அக்டோபர் முதல் வாரத்தில் இப்புத்தகம் வெளியிடப்படுகிறது.

- சலாம்ஜி





இது இலவச இணைப்புகளின் யுகமா இருக்கு. பத்திரிகை வாங்கினா பிளாஸ்டிக் பாட்டில்லேயிருந்து குபேர யந்திரம் வரைக்கும் விதவிதமான ஃப்ரீ ஐட்டம்ஸ் மத்தியில் ஒரு ரியலி யூஸ்ஃபுல் இ.இ. பார்த்தேன்- (அதாவது கல்கி நாலு வாரமா வெளியிட்ட இ.இ. அல்லாத வேற ஒண்ணு.)

இந்த இணைப்புப் புத்தகம் எலக்ட்ரோஸ்டீல் காஸ்டிங்ஸ் கம்பெனியோட ஆண்டு அறிக்கையோட தந்தது. 'water and the world'ன்னு ரொம்ப எளிமையான அழகோட தயாரிக்கப்பட்ட மினி புக். ஆனா, தகவல்கள் செமை கனம்; படிச்சாலோ மனசுல மந்தர மலையைத் தூக்கி வைச்சா மாதிரி கனக்குது- எல்லாம் ஸ்ரீமான் மனிதனிடம் மாட்டிக்கிட்டு திருவாளர் தண்ணீர் படுகிற பாடு பற்றிய கண்ணீர்க் கதைதான்!

இதே ரேட்ல போனா, எழுபதுகள்ல பெட்ரோலியம் விலைன்றது எப்படி உலக நாடுகளோட நல்லுறவை நிர்ணயிச்சதோ, அதே போல இந்த நூற்றாண்டுல தண்ணீர்ப் பற்றாக்குறைதான் சர்வதேச உறவுகளை நிர்ணயிக்குமாம்; பொருளாதாரத்தைப் பாதிக்குமாம்.

தண்ணிக்குக் காசு கொடுக்கணும்னு கவர்மென்ட்ல சொன்னா ஆட்சேபிக்கற நாம, காசு கொடுத்து மினரல் வாட்டர் வாங்கத் தயாராயிருக்கோம்ன்ற முரண்பாட்டைச் சுட்டிக் காட்டுது இந்த மினி புக். மும்பை ஏழைகள், முனிசிபாலிடி விதிக்கக் கூடியதைக் காட்டிலும் அஞ்சுலேருந்து அம்பது மடங்கு கட்டணம் செலுத்தி தனியார்கிட்டே தண்ணி வாங்கறாங்களாம்!

மஹாராஷ்டிரா பீட் மாவட்டத்துல பிம்பர் வாடான்னு ஒரு வில்லேஜ். அங்கே இரண்டாயிரம் பேருக்கு ஒரே ஒரு அடி பம்ப்! அந்தப் பகுதியில பொண்ணு கொடுக்கணும்னா ஒண்ணுல மாப்பிள்ளை வீட்டுக்காரங்க டவுரி தரணும்; இல்லாட்டி ஊரைக் காலிப் பண்றதா வாக்குறுதி தரணுமாம்!

இந்தியால மட்டுமில்லே, உலகம் பூரா இதே கதிதான்! நைல் நதி மெடிடரேனியன் கடல்ல கொண்டுபோய்ச் சேர்க்கிற நல்ல தண்ணியோட அளவு ஆண்டுக்கு ஆண்டு குறைஞ்சுகிட்டு வருதாம்.

ஆனா ஜப்பான்காரங்க இந்தப் பிரச்னையையும் ஜெயிக்கறாங்க- அங்கே தொழிலகங்களில் தண்ணியை விலைகொடுத்து வாங்கணும்ன்ற நிலைமை வந்ததுமே தண்ணீர்ச் சிக்கனம் பெருகிடுச்சு! 1973ல ரொம்ப அதிகமாயிருந்த தண்ணீர் உபயோகம் 1989ல 24 சதவிகிதம் குறைஞ்சுடுச்சு. ஆனா தொழில் உற்பத்தி குறையவேயில்லை- மாறா அதிகமாச்சு!

அந்த சப்பை மூக்குக்கும், தட்டை மூஞ்சியில தெரியற சின்ன சிரிப்புக்கும் பின்னால பெரிய மூளைப்பா!

ஒண்ணே ஒண்ணுதான் எனக்குச் சந்தேகம்- ஆனுவல் ரிப்போர்ட்டோட இந்த 'தண்ணி புக்கை' இலவசமா தந்த எலக்ட்ரோஸ்டீல் காஸ்டிங்ஸ், ஏ.ஜி.எம்ல ஷேர் ஹோல்டர்ஸுக்கு என்ன கிஃப்ட் கொடுத்திருப்பாங்க? பிளாஸ்டிக் குடமா? பக்கெட்டா?

காது வைச்ச அடுக்கு

இப்போதான் எல்லா எச்சரிக்கை அலறல்களையும் மீறி அபத்தமான கார்கள்ல பிளாஸ்டிக் குடங்களை உபயோகிக்கறோம். அந்தக் காலத்து அண்டா, குண்டான், தவலை மாதிரி பித்தளை பாத்திரங்களை இனிமே மியூசியம்லதான் பார்க்கணும் போலிருக்கு. அவ்வளவு ஏன்.... ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல்லயே சில வகையான 'உயிரோட்டமுள்ள' பாத்திரங்களை இனிமே பார்க்க முடியாது. எல்லார் வீட்டுலயும் காது வைச்ச அடுக்கு, மூக்கு வைச்ச டம்ளர், குழிக் கரண்டி, கால்படி, அரை ஆழாக்கு பாத்திரம், மைசூர் போகிணி, கல்யாணத்தூக்குன்னு செல்லப் பெயரோட பாத்திரங்கள் நிச்சயமிருக்கும். பட் ரீசன்டா என்



ஃப்ரெண்ட் சுமாவோட வீட்ல 'யானை மண்டை'ன்னு ஒரு பாத்திரத்துக்குப் பேரு அடிப்பட்டதைக் கேட்டு அசந்துட்டேன்! அதுலயும் பெரிய யானை மண்டை, சின்ன யானை மண்டை வேறு! சின்னதுக்குப் பூனை மண்டைன்னு பேர் வைக்காம போனாங்களே! அனேகமா யானையோட மண்டை நுழையற அளவுக்கு அகல வாய் கொண்ட பாத்திரம்ன்றதால அந்தப் பேர் வந்திருக்கலாம்!



'**பா**த்திரப் படைப்பு'ல நாமதான் கெட்டின்னு காலரைத் தூக்கி விட்டுக்கற நாவலாசிரியர்கள் செந்தமிழ்நாட்டுச் சமைய லறை ராணிகளிடம் தோற்றுத் தலைகுனிந்து தான் ஆகணும்!

அகராதியில பார்த்தேன்; யானைக் கன்று, யானைக் கால்னு பத்து பன்னிரண்டு இருக்கு. பட் நோ 'யானை மண்டை'!

பை த வே, இந்தப் புது அகராதி திருமகள் நிலையம் வெளியிட்டிருக்கற நல்ல எக்ஸாஹுஸ்டிவ் டிக்ஷனரியாயிருக்கு. (விலை ரூ. 325, 16, வெங்கட்நாராயணா ரோடு, சென்னை – 17).

ழக்கு வைச்ச டம்ளர்!

அதுக்காக சட்ட சபையில அவைக்குறிப்புலேருந்து நீக்கப்பட்ட வார்த்தைகளுக்கெல்லாம் அர்த்தம் இருக்கான்னு இதுல தேடாதீங்க!

பாஸ்ட் ஃப்பூ வீக்ஸா சூப்பர்மார்க்கெட் ரொம்ப 'சோபர் (sober) மார்க்கெட்டா'- அதாவது சீரியஸா மாறிடுச்சுன்னு புகார்- ஸோ, வி. விஜயராகவனோட சிலேடைக் கவிதையைப் போட்டுத் தொலைக்கிறேன்- நீங்களும் சிரிச்சுத் தொலைங்க!

நம் நாட்டில்
என்றுமே ஒழிக்க முடியாதது
இரண்டு.
ஏழை-பணக்காரன் பாராது
அவை 'பிடுங்கி' எடுக்கும்.
தனியாக மாட்டிக் கொண்டாலோ
தீவிரம் அதிகம்.
அரசும் அவ்வப்போது
விரட்டிவிடுவதாக 'வலை'வீசி
அலட்டிக் கொள்ளும்.
அவ்வப்போது நம்
'கையைக்கடித்தாலும்'
இந்த விவகாரத்
தில்
அதிகம் இயக்கப்
படும்
அவயவமே 'கை'
தான்.
ஆனால்
ஒரேயொரு வித்தியாசம்.
'குளிர் விட்டுப் போகும்' ஒன்றில்
'குளிர் ஓட்டிக் கொள்ளும்
இன்னொன்றில்.
இவ்வளவு 'கடித்தும்'
கண்டு பிடிக்க முடிக்கவில்லையா?
/ஐயாரு
/ராசுபிர

புக்கை நிமிர்த்திட்டீங்களா...? இப்போ இதைப் படியுங்க:

சந்தையில் சதா
சிலேடைக் கடை விரிக்கும்-
விஜயராகவரே! நீர்
புகழேந்தி பரம்பரையோ! – உமது
கடிதாங்கியும்
படிதாண்டா
பத்தினிப்பெண்ணின்
அடியிணைக்கு
ஆயிரம் வணக்கம்!

– இந்தக் கவிதை என்னுடையது. சிரிக்காவிட்டால் ரசிகர் மன்ற உறுப்பினர் பதவி ரத்து!

— சுமி

● நகை. தி. மகராசன், கடமலைக்குண்டு.

? 'பொது இடத்தில் புகைபிடிக்கத் தடை'- தமிழகத்தில் சாத்தியப்படுமா...?

! பிற நாடுகளில், பிற மாநிலங்களில் சாத்திய மாகியிருக்கிறதே-ஆனால் புகை பிடிப்பதற் கென்று தனி இடங்கள் ஒதுக்கித்தரப்படும் வழக்கம் உருவாகும். இதைவிட, பான் மசாலாவுக்குத் தடை! அமுல்படுத்துவது கஷ்டமானாலும் மிக நல்ல, வரவேற்கத்தக்க முடிவு. சாலையும் சுவர்களும் அசிங்கப்படுத் தப்படுவது நிற்கட்டும். ஆரோக்கியம் பெரு கட்டும்.

● பி. அழகர்சாமி, மதுரை - 16.

? முதலில் ஏர்வாடி; இப்போது காட்டாடி... இரண்டுவிபத்துகளையும் பற்றி தராசு கூற விரும்புவது என்ன...?

! முதலாவது அறியாமை விளைவித்த சோகம்; இரண்டாவது அலட்சியம் விளை வித்த கோரம்!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி. ❒

? ரேஷன் கடையை அரசால் ஏன் வெற்றி கரமாக நடத்த முடிவதில்லை சார்...?

! மானியமாகவோ இலவச மாகவோ எதை அளித்தாலும் அதை வழங் கும் ஊழியர்களுக்கு அலட்சியமும் அதி காரிகளுக்குச் சுரண்டல் போக்கும் இயல் பாகவே தோன்றிவிடும். உலகில் எல்லா நாடுகளிலுமே இது சகஜம். ஆகவே வேலை வாய்ப்புகளைப் பெருக்கி, மக்களுக்குச் சுயமாகச் சம்பாதித்து, சந்தையில் பொருள் வாங்கும் பொருளாதார வல்லமையைப் பெறும் நல்ல சூழலை வழங்குவதே அரசின் நோக்கமாக இருக்க வேண்டும்.

● எம். சிவகுருநாதன், சென்னை-42.

? 'காஷ்மீர் பிரச்னைக்குச் சுமுகத் தீர்வு காணாமல் இந்தியாவும் பாகிஸ்தானும் வளர்ச்சிகாண முடியாது' என்று முஷாரஃப் சொல்கிறாரே?

! மிகவும் சரியான வார்த்தை.

● யமுனா ரெங்கநாதன், சென்னை - 97.

? ஒரு பெண் என்ற கோணத்தில் இப் போதைய தமிழக முதல்வரை 'தராசு' எப்படி எடை போடுகிறது?

! அரசியலுக்கும் பொதுவாழ்வுக்கும் வந்து விட்ட பிறகு பெண் என்கிற முறையிலோ ஆண் என்கிற முறையிலோ எடைபோட முடியாது. கொள்கைகள், செயல்கள், பேச்சுக்கும் செயலுக்குமிடையே இருக்கும் தொடர்பு-இவற்றின் அடிப்படையில்தான் எடைபோட வேண்டும்.

● கே. கணேசன், சென்னை - 16.

? ஏசுவுடன் ஒப்பிட்டுச் சுவரொட்டி அச்சிட்டு ஒட்டிய விவகாரத்தைப் பெரிது படுத்திப் பேசுவது அநாகரிம் என்கிறாரே கருணாநிதி?

! ஆங்கிலத்தில் 'He is bearing the cross', 'He is being crucified'என்று உருவகமாய்ச் சொல்வ துண்டு. உருவகத்தை நிஜமாக்கிப் படம் போட்டு, ஏசுவின் அருகிலேயே காட்டியது தான் தவறாகிவிட்டது. வருத்தம் தெரிவித் தாகிவிட்டது; அத்துடன் விட்டுவிடுவது தான் நல்லது!

● அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

? லோக்பால் மசோதா தற்போது எட்டா வது முறையாக லோக் சபாவில் அறி முகப்படுத்தப்பட்டுள்ளதே... இனியாவது...?

! பாராளுமன்றம் என்ற பிறவிப் பெருங் கடலைக் கடந்து நற்கதியை அந்த மசோதா அடைவதென்பது அவ்வளவு சுலபமல்ல. எம்.பிக்கள் சம்பளம், சலுகைகள் உயர்வு மசோதா என்றால் உடனடியாக நிறைவேறி சட்டமாகிவிடும்.

❒ ரூ. 100 பரிசு பெறுபவர்:
பி. ஜெயப்பிரகாஷ்,
TNEB குடியிருப்பு,
சர்க்கார்பதி - 642 133.
சேத்துமடை (வழி).
கோவை மாவட்டம்.

* ரூ. 50 பரிசு பெறுபவர்:
மு. ரத்னா,
T-64A, 32வது குறுக்குத் தெரு.
பெசன்ட் நகர், சென்னை - 90.



• சினிமாஸ்கோப் கனவு!



• முதல்வரின் முதல்வர்!



• சரியான வார்

● ஆ. முத்து, வேலூர்.

? அ.தி.மு.க. அரசு, பத்திரிகைகளுக்குக் கூட பயப்படாமல் செயல்படுவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்...?

! மனசாட்சிக்கே பயப்படாத போது பத்திரிகைகள் என்ன, வெறும் கிள்ளுக்கீரை!

● எஸ். ஈ. தாஸ், சென்னை - 12.

? ஓ.ஆர்.ஜி-மார்க் நிறுவனம், ஆங்கில பத்திரிகையொன்று- இவை சேர்ந்து நடத்திய கருத்துக் கணிப்பின் முடிவில், இந்தியாவிலேயே சிறந்த முதல்வராக, நிர்வாகியாக, கர்நாடக முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரே...?

! இந்தத் தேர்வில் தவறு இருப்பதாகத் தோன்றவில்லை. சமீபத்தில் பெங்களூர் சென்றிருந்த போது பலரைச் சந்தித்ததில் முதல்வரின் நிர்வாக அணுகுமுறை குறித்து மிகவும் உயர்வாகச் சொன்னார்கள்.

● வி.பி. காந்திமதி, மதுரை - 16.

? வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழும் புதுமணத் தம்பதிகளுக்கு இலவச கேஸ் இணைப்பு வழங்கப்படும் என்கிறாரே ஜெ...?

! பம்மாத்து அறிவிப்பாக இன்றி, சரியான முறையில் அமுல்படுத்தப்படுமானால் தமிழக அரசின் நிதி ஆதாரம் அதலபாதாளத்துக்குப் போய்விடும்... நிற்க, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்போருக்குக் கேஸ் இணைப்பு எதற்கு...? பொங்கித் திங்க நல்ல அரிசியை நியாய விலையில் தந்தால் போதாதா...!

● அ. ராஜப்பன், கருமத்தம்பட்டி.

? பத்திரிகையாளர்கள் மீண்டும் மீண்டும் காவல்துறையினரால் தாக்கப்படுகிறார்களே...?

! முத்துக்கருப்பன் பெயரை டெல்லி செய்திகளில் 'மொத்துக்கருப்பன்' என்று உச்சரிக்கிறார்கள்-அதனால் இருக்குமோ!

● அஜார், சென்னை - 18.

? அ.தி.மு.க. அரசின் நூறு நாள் சாதனை திருப்திதானே...?

! திருப்தி. திருப்தி

நீங்கள் கேட்டவை— தராசு!

அ.தி.மு.க. அரசு பத்திரிகைகளுக்குக்கூட பயப்படுவது இல்லையே...?



• மொழியும் பொருளும்!



• உச்சரிப்புப் பிரச்னை!



• உருவக உபத்திரவம்!

ரொம்ப திருப்தி!- முழு பக்க விளம்பரங்கள் பெற்றதில் நாளிதழ்களுக்கு. மற்றபடி எல்லாருக்கும் திருப்பதிதான்!

● நரேந்திரன், கோபிசெட்டி பாளையம்.

? கனவுகளுக்குப் பலன் உண்டா..?

! சுதாகரனிடம் கேளுங்க. ரொம்ப சரியாய்ப் பதில் சொல்வார். 'நான் ஆட்சிக்கு வந்தால் யாரையும் பழிவாங்கமாட்டேன்' என்று சினிமாஸ்கோப் கனவு கண்டு கொண்டிருப்பவர் அவர்தான்!

● மு. ரத்னா, சென்னை - 90.

? தமிழக முதல்வர், பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளிக்கும்போது ஆங்கிலத்திலேயே பேசுகிறாரே...? இது பெருமைக்குரிய விஷயமா..?

! அனைத்திந்திய தொலைக்காட்சி பத்திரிகை நிருபர்களுக்குச் சௌகரியமாயிருக்க வேண்டுமே என்று ஆங்கிலத்தில் பேசக் கூடும். எந்த மொழியில் பேசினாலும் அதை மக்கள் புரிந்து கொள்ளும் மொழியில் மாற்றித்தர பத்திரிகையாளர்களால் முடியும்; என்ன பேசுகிறார் என்பதே முக்கியம்!

ஆகஸ்ட் 29 முதல் செப்டெம்பர் 4 வரை

மேஷம்:

நன்மை, மேன்மை, வன்மைனு பலவிதத்திலும் அனுகூலமான வாரமா இருக்கிறதனாலே, தைரியமா புது முயற்சிகள்ல ஈடுபடலாம்னு கொட்டி முழக்கறோம்... 'டும்... டும்.... டும்' கலைத்துறை, சினிமா, சங்கீதம் போன்ற துறைக்காரங்களுக்குத் 'தில்' ஆன வாரம்! பெண்கள் 'கலகலப்பு' காண்பார்கள். கணவன் மனைவி உறவு சீராக இருக்கும். ஏழரை நாட்டுச் சனி கடைசிப்படியில் உட்கார்ந்திருப்பதால், உடல் ஆரோக்கிய விஷயத்தில் 'குஷி' பட முடியாது.

ரிஷபம்:

'அள்ளித் தந்த வானம்' போல, குரு, புதன், சுக்ரன் மூணு சுப கிரகங்களும், 'வள்ளலா' இருக்கறதனாலே உங்க பிரச்னைகளெல்லாம் தீர்ந்து போயிடுச்சு... பண விஷயம் தாராளமா இருக்கும். எதிரிகள்கூட 'தோஸ்த்' ஆயிடுவாங்கன்னா, உங்க முகராசிக்குக் கேட்கணுமா? அரசு விவகாரங்கள் அவ்வளவு அனுகூலமா இருக்காது.... அதனால நைச்சியமா நடந்துக்குங்க.

மிதுனம் :

3ம் எண்ணுக்குரிய சூரியனும், சுக்கிரனும் 'பிரெண்ட்ஸ்' ஆக இருக்கிறாங்க. அதனால 'பூவெல்லாம் உங்க வாசம்தான்!' திறமை பளிச்சிடும். இனிமை கூடும். முகமே 'புன்னகை தேசமா' மாறிடும். மனை, நிலம், வீடு இனங்களில் ஈடுபடும்போது மட்டும் விழிப்பா இருக்கிறது நல்லது. ராகு, கேது, செவ்வாய் ஆகியோரது சஞ்சாரம் சுமாரா இருக்கறதனால சிறு சிறு இடையூறுகள் ஏற்படும். சமாளிங்க!

கடகம் :

சனி, புதன், சுக்கிரன், கேது நான்கு பேருமே குங்குமப் பொட்டுக் கவுண்டர் சத்யராஜ் மாதிரி ஜாலி மூடுல இருக்காங்க. உங்க அறிவாற்றல் பளிச்சிடும். செயல்ல 'ராம்போ - 3' ஸ்டாலோன் வேகம் தெரியும். குடும்ப நலம் சீராக இருக்கும். ஞான மார்க்கத்திலும், பக்தி மார்க்கத்திலும் 'ஆனந்தம்' தேடுவீங்க. கிரக வழிபாடு நன்மை தரும். 'தாலி காத்த காளியம்மன்' துணையிருப்பா.

சிம்மம் :

ராசிநாதன், சொந்த ராசியில் 'வீட்டோடு மாப்பிள்ளை'யாக ஜம்மென்று உலவுகிறார். அதனால் உங்கள் எண்ணங்கள், திட்டங்கள் எல்லாமே 'கடல் பூக்கள்' போல அழகாய்ப் பூக்கும். காதல் கனிந்து 'சிநேகிதியே' என்று டூயட் பாட வைக்கும். ரொம்ப நாளாக இழுத்தடித்த பணம் வந்து சேரும். உழைப்பு வீண் போகாது. விஞ்ஞானிகள் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் 'ஆளவந்தான்' ஸ்டைலில் அசத்துவார்கள்.

கன்னி :

கன்னி ராசி அன்பர்களுக்குப் பல கிரகங்களின் சஞ்சாரம் சிறப்பாக இல்லாததால், 'சாக்லேட்' சமாசாரங்கள் சொல்ல முடியாமல் போனதற்காக வருந்துகிறோம். பீக் அவரில் '12 பி' பஸ்ஸின் நெரிசலில் மாட்டிக்கொண்டது போல அவஸ்தைப்பட நேரிடும். அரசாங்க காரியங்கள் அனுகூலமிராது. தாய் தந்தை நலன் பாதிக்கப்படும். பொருளாதார நிலை காய்ந்து கிடக்கும். 'அறுபடை வீடு' முருகனின் தரிசனம் பண்ணுங்க. நல்லதே நடக்கும்...



கன்னி ராசிக்காரரான பாடகி புஷ்பா ஸ்ரீராம் முருகன் தரிசனம் பண்ணணுமாம்.

துலாம் :

பதினொன்றாம் இடத்தில் சூரியன் இருந்தாலே 'டாப் டக்கர்'தான்... குரு, சுக்ரன், கேது, செவ்வாய் போன்ற சூப்பர் 'சிட்டிசன்'கள் எல்லாம் ஜோடி சேர்ந்து கலக்குவதால், சந்தோஷ 'சமுத்திர'த்தில் நீச்சலடிப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும்... தனவான்களின் ஆசீர்வாதம் பரிபூரண கடாட்ச சித்தி ரஸ்து! விஞ்ஞானம், கம்ப்யூட்டர் துறைக்காரங்களுக்கு 'சூப்பர் டயம்!'

மகரம் :

ரொம்ப சாதாரண மான வாரம்னு அலுப்போட சொல்லி உங்களை வெறுப்பேத்த இஷ்டமில்லை. இருந்தாலும் இது உங்களுக்கு 'சாலஞ்ஜ்' ஆன வாரமா இருக்கும். 'விரும்புகிறேன்'னு சொன்ன வங்க எல்லாம் விலகிப் போவாங்க. எந்தக் காரியமானாலும் 'ஹே ராம்' கமல் மாதிரி அதிக உழைப்புத் தேவைப்படும். பயணத்தில் பாது காப்பு அவசியம். எப்பாடு பட்டா வது காரியத்தை முடிச்சுடுவீங்க. எல்லாமே 'வேலாயுதம்' அருள்!

விருச்சிகம் :

இதுவரை யாரோ முத லாளியாக இருக்க, நீங்கள் கை கட்டி சேவகம் பார்த்த 'ஆண்டான் – அடிமை' காலம் மாறிப் போச்சு. இனிமே நீங்க சொல்றதுதான் வீட்டுல பரம 'வேதம்'. வியாபாரிகள் வளர்ச்சி காண்பார்கள். எதிர்ப்புகள், எந்தரிச்சு ஓடிப் போயிடும். வன இலாகா, காடு, மலை, சுரங்கத் தொழில் செய் பவர்களுக்கு நல்ல முன்னேற்றம் தெரியுது. 'வேப்பிலை அம்மன்' அருளாலே யோகமான வாரமா கொண்டாடுங்க.

கும்பம் :

5ம் இடத்தில் வாட்ட சாட்டமாக உலவும் குரு பக வான் அருள் இருப்பதால், உங்க அதிர்ஷ்டம் 'கிளிக்' ஆயிடுச்சு சார்... பண வரவு படு திருப்தியா இருக்கும்... பங்கு மார்க்கெட், ரேஸ், லாட்டரி, ஸ்பெகுலேஷன் துறைகளில் அடி பின்னுவீங்க. குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். சீனியர்களுக்கு ஜூனி யர் பிறப்பார்கள். மாணவர் களுக்கு 'அழகான நாட்கள்' அமையும்.

தனுசு :

உங்கள் எண்ணங்கள், அபி லாஷைகள் யாவும் நிறைவேறும் வாரமா அமைஞ்சிருக்கு... 'கந்தவேல்' சாமிக்கு 'தாங்க்ஸ்' சொல்லிக்குங்க... வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படுவதால், வீட்டில் 'ஸ்டார்' அந்தஸ்து ஏற்படும். பெண்கள் நினைத்ததைச் சாதிக்கும் 'அழகி'களாகத் திகழ்வார்கள். மக்கட் பேறு ஏற்படும். விவசாயிகள் ஏற்றம் பெறுவார்கள். வாரத்தின் இறுதியில் 'டிராபிக்'கில் மாட்டிக் கொண்ட டென்ஷன் ஏற்படும் என்பதால், கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை!

மீனம் :

சூரியன், புதன், சுக்ரன் மூன்று கிரகங்களும், சனி, கேது ஆகியோரைப் பார்த்து 'மனம் விரும்புதே' என்று சொல்வதால், இந்த வாரம் முழுக்க 'நியூ'வான விஷயங்கள் நடக்கப் போகுது. பெயர், புகழ், ஆதா யம் கூடும். கடல் வாணிபம் செய்பவர் கள் லாபம் காண்பார்கள். சுக்கிரன் '5'ல் இருப்பதால் பெண்களால் ஆட வர்களுக்கு அனுகூலம் கிடைக்கும். உழைப்பும், திறமையும் வீண் போகாது. பெரிசா இல்லாட்டி யும் 'குட்டி'யா ஏதாவது விபத்து நேரலாம் உஷார்!



பூவெல்லாம் உன் வாசம்

'அறிமுகம்! உலக அழகி யுத்தா முகி' – என்று டைட்டில் கார்டு போட்டுவிட்டு, அஜீத்துடன் தேசிய நெடுஞ்சாலைகளில் ஒற்றைப் பாடலுக்கு அவரை ஆடவிட்டிருக்கும் ஃபார்முலா படத்தில், பெரிசாய் எதையும் எதிர்பார்க்க முடியாதுதான். ஆனால் கவிதைத்தனமான தலைப்பை நம்பிப் போன பாவத்திற்குச் சீரியல் பாணி சினிமாவைக் காட்டி, செல்லரித்த சென்டிமென்டுகளால் நம்மைக் குளிப்பாட்டி விடுகிறார்கள்.

உழைப்பால் உயர்ந்த உயிர் நண்பர்கள் நாகேஷ், வி.எஸ். ராகவன். ஒரே காம்பௌண்டில் அச்சில் வார்த்த மாதிரி, இரண்டு வீடுகள் கட்டி, பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்து வருகிறார்கள். வார இதழ் ஒன்றின் அட்டைப்படக் கட்டுரையாக வரும் இந்த 'பிருந்தாவன'த்தின் ஒற்றுமை, ஒரு கட்டத்தில் உடைந்து போய், இரண்டு வீட்டிற்கும் இடையில் பெர்லின் ஸ்டைல் சுவர் முளைக்கிறது. காரணம் அஜீத் – ஜோதிகா காதலில் விழுந்த விரிசல். இதை இயக்குனர் எப்படி சரி செய்கிறார் என்பதுதான் முடிவு.

கதையின் மையப்பகுதியான அஜீத் – ஜோதிகா காதலில் துளியும் அழுத்தம் இல்லாததால் அவர்களின் காதல் பஞ்சராகும்போது, நமக்குப் பரிதாபமோ, பாதிப்போ ஏற்படவில்லை.

பில்ட் அப் செய்யப்பட்ட பிரதான வில்லனாக வரும் மலேசியா வாசுதேவனின் வாரிசு யுகேந்திரன், விரலைச் சொடுக்கி வெளுத்து வாங்கியிருக்கிறார். (இவரை மறுபடியும் டிபிக்கல் வில்லனாக்கி வீணடிக்காமல் இருக்க வேண்டுமே?)

என்னடா சாயாஜி காட்சிக்குக் காட்சித் தூங்கி வழிகிறார் என்று யோசித்துக் கொண்டிருந்தால், மனிதர் க்ளைமாக்ஸ் காட்சியில் வெளுத்து வாங்கிவிட்டார். நல்லவேளையாக இரண்டாவது பாதியின் கடைசி இருபது நிமிடங்கள் ஒத்தடம் கொடுக்கின்றன.

படத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒரே விஷயம் எம். பிரபாகரின் ஆர்ட் டைரக்ஷன். தத்ரூபமான இரண்டு மார்டன் வீடுகளை அருகருகே அவர் உருவாக்கி உயிர் கொடுத்திருக்கிறார். ஆனால் படத்தில் பாத்திர அந்தஸ்து வகிக்கும் அந்த வீடுகளைச் சரியான கோணங்களில் காட்டி, பிரமாதப்படுத்தும் வித்தை இயக்குனருக்குக் கைவராதது பெரிய ஏமாற்றம்.

குடும்பத்தோடு போனால் எங்கே, அல்போன்ஸாவின் அபத்த நடனம் வந்துவிடுமோ என்று பயப்படாமல் படம் பார்த்துவிட்டு வரலாம். மற்றபடி பூவெல்லாம் சீரியல் வாசம்!

— **விஷுவல்தாசன்**

• அவெரஜ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)


வாங்கி
விட்டீர்களா?
சரவணா ஸ்டோர்ஸ்
வார இதழ்
தீபம், பெண்மலர்,
கதைமலர், சினிமா
மாத இதழ்கள்
சரவணா ஸ்டோர்ஸ்
வைரங்கள்–தங்க நகைகள்–பட்டுப் புடவைகள்–பாத்திரங்கள்–இனிப்பகம்
ரெங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை–17.